
கல்கி
KALKI 26.11.95 ரூ. 3.00
சுரேஷ் பீட்டர்ஸின்
புதிய பாலிசி!

ஆட்டோக்ளோவிற்கு நன்றி எல்லாம் எப்போதும் வெளிச்சமாய் உள்ளது. அதுதான் எனது 200 வாட் காதல் கதை.

Autoglo

ஆட்டோக்ளோவின் வெளிச்சம், 200 வாட்ஸ் பிரகாசம்.



PKL LIMITED

கார்ப்ரேட் ஆபீஸ்: 9-3-1087, பிளாட் எண். 48, ஸ்ரீநகர் காலனி, ஹைதராபாத்-073. போன்: 220227, 227548, 227658. **மண்டல அலுவலகங்கள்: வடக்கு:** 810, ஹேம்குண்ட் ஹவுஸ் 6, ராஜேந்திரா பிளேஸ், புது தில்லி-8. போன்: 5710091. **தெற்கு:** 89/1, அன்போல், 2 வது மாடி, காந்தி பஜார், பெங்களூர்-4. போன்: 621761, 6627677. **கிழக்கு:** 1 வது மாடி, 41 ஏ, சையது அமீர் அலி அவென்யூ, கல்கத்தா-19. போன்: 401573, 2479744. **மேற்கு:** 4, பேஸ்மெண்ட், மோனாலிஸா, ஹரிநிவாஸ் சர்க்கிள், தானே, பம்பாய்-602. போன்: 5331997, 5366432.

Mudra PKL 230 T

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

—ஒரு வெள்ளோட்டம்





சுரேஷ் பீட்டர்ஸின் 'டேக் இட் ஈஸி பாலிசி' தெரியும்... ஆடி, பாடி இசையமைக்கவும் செய்யும் அவருடைய வாழ்க்கை பாலிசி...? இந்த சந்திப்பு அதைத் தெளிவாக உணர்த்துகிறது....

சுரேஷ் பீட்டர்ஸின் புதிய பாலிசி!

"சிக்குபுக்கு ரயிலே... பாடல் மூலமாகத்தான் உங்களை சினிமாவில் அறிமுகப்படுத்தினார் ஏ.ஆர். ரகுமான். உங்களை அவர் அந்தப் பாடலைப் பாடத் தேர்ந்தெடுத்ததற்கு என்ன காரணம்?"

"படிப்பை முடித்த எனக்கு விளம்பரத்துறையில் வேலை கிடைத்தது. ஏ.ஆர். ரகுமானும் அப்போது விளம்பரப் படங்களுக்குத்தான் இசையமைத்துக் கொண்டிருந்தார். அந்த வகையில் எங்களுக்கிடையில் அறிமுகமும் நட்பும் ஏற்பட்டது. என்னிடமிருந்த இசை ஆர்வம் காரணமாகவும் புதிய புதிய சோதனை முயற்சிகளை மேற்கொள்ளுகிற துணிச்சல் இயல்பாகவே ஏ.ஆர். ரகுமானிடம் இருக்கிற காரணமாகவும் 'சிக்குபுக்கு ரயிலே..' பாடலைப் பாடுவதற்கு எனது வித்தியாசமான குரலைத் தேர்ந்தெடுத்தார் அவர். அது நன்றாகவே பிரபலமானது. நானும் விளம்பரத் துறை வேலையை விட்டுவிட்டு, இசைத் துறைக்கே முழுமையாக வந்துவிட்டேன்."

"நீங்கள் பாடிய சில பாடல்களும் வேகவேகமாகப் பாடுகிற பாடல்களாகத்தான் இருக்கின்றனவே தவிர, நிறுத்தி நிதானமாகப் பாடுகிற மெலடீஸ் என்கிற வகையிலான பாடல்களாக இல்லையே...?"

"அப்படிப்பட்ட பாடல்களைப் பாடுகிற வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லையே..."

"ஒருவேளை உங்களுக்கு அப்படிப்பட்ட பாடல்களைப் பாட வராததுதான் காரணமா?"

" 'மின்னல்', 'ஓவியம்' என்று இரண்டு ஆல்பங்கள் (காஸட் தொகுதிகள்) வெளியிட்டுள்ளேன். அவற்றில் நான் மெலடீஸும் பாடியுள்ளேன். கேட்டுப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்."

"நீங்கள் பாடிய சில பாடல்களிலும் வார்த்தைகள் முழுமை

யாகப் புரிவதில்லை..."

"கிடையவே கிடையாது. நீங்கள் ஒருவேளை சரியாக ரெகார்ட் செய்யப்படாத காஸட்டுகளைக் கேட்டிருப்பீர்கள்."

"அப்படியில்லை..."

"இசை என்பது என்ன? ஓர் உணர்வு. இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுகிற ஓர் உணர்வு. அந்த உணர்வைத்தான் பாடலின் மூலம் வெளிப்படுத்துகிறேன். கேட்பவர்களும் அந்த உணர்வைப் புரிந்து கொண்டு, அதே உணர்வை அடைகிற போது அங்கே வார்த்தைகள் கூட இரண்டாம் பட்சமாகி விடுகின்றன. நமக்குப் புரியாத மொழிப் பாடல்களைக் கூட நம்மால் ரசிக்க முடிவதற்கு என்ன காரணம்? பாடுபவனும் கேட்பவனும் அங்கே மொழி கடந்த ஓர் உணர்வில் ஒன்று கலந்து விடுகிறார்கள்!"

"முன்பெல்லாம் கிராமப் புறங்களில் ரெகார்ட் டான்ஸ் என்று ஒன்றை நடத்துவார்கள். அந்த டான்ஸின் அங்க அசைவுகள் எல்லாமே ஆபாசமாகத்தான் இருக்கும் என்பதால் பெண்கள் அதைப் பார்க்கவே கூச்சப் பட்டுக் கொண்டு வர மாட்டார்கள். ஆனால் ஏறத்தாழ அதே மாதிரியான அங்க அசைவுகளைக் கொண்ட நடனங்கள் இன்று சினிமாவில் சர்வ சாதாரணமாக வந்து விட்டன. ஒரு டான்ஸர் என்கிற முறையில் என்ன நினைக்கிறீர்கள்?"

"ஒட்டு மொத்தமாக அப்படிச் சொல்லிவிட முடியாது. சில வேண்டுமானால் அப்படியிருக்கலாம். ஆனால் நான் ஒரு போதும் அப்படிப்பட்ட டான்ஸெல்லாம் ஆடியதில்லை."

"சென்ற புத்தாண்டு நிகழ்ச்சியின்போது சென்னை டெலிவிஷனில் நீங்கள் நடனமாடிய அந்த நிகழ்ச்சி ஆபாசமாக இருந்ததாகத்தான் சொன்னார்கள்..."

"நான் அங்கே சென்ற பிறகுதான் என்னோடு சேர்ந்து சில பெண்களும் நடனமாடப் போகிறார்கள் என்கிற விஷயமே தெரியவந்தது. அது டெலிவிஷன் நிலையத்தினர் ஏற்பாடு. இருப்பினும் என்னைப் பொறுத்தவரை என்னை மறந்து பாடினாலும் ஓர் எல்லையோடுதான் ஆடுவேன்."

"நீங்கள் ஜாஸ் இசையைத் தேர்ந்தெடுத்ததற்கு ஏதாவது காரணம் இருக்கிறா?"

"ஜாஸ் இசையானால் என்ன, என் மனைவி மானசா பீட்டர்ஸ் கற்றுக் கொண்டிருக்கும் கர்நாடக இசையானால்தான் என்ன? எல்லாமே ஏழு ஸ்வரங்களின் அடிப்படைதான். உணர்வுப் பரிமாற்றத்துக்கான ஒரு சாதனம்தான். இதில் ஒரு வருத்தம் என்னவென்றால், நம்மவர்களில் பலர் திறந்த மனத்தோடு இருப்பதில்லை; இசையை ரசிப்பதில்லை. இது உசத்தி; அது மட்டம் என்று கருதுகிறார்கள். இது ஒரு புறம் என்றால் மறுபுறம் ஸ்டார் டீவி சானல்கள்... இந்த நிலையில் சிக்கிக் கொண்டு தடுமாறுவது இளையவர்கள்தான். இது கூடாது. மேற்கத்திய இசை மட்டமானது என்றால் என்னுடைய முதல் ஆல்பமான 'மின்னல்' ஒரு லட்சத்திற்கு மேல் விற்பனையாகியிருக்குமா?"

"சினிமா பாடல்கள் அல்லாத தனிப்பாடல்களைக் கொண்ட ஒரு காஸட் இவ்வளவு விற்பனை என்பது ஒரு சாதனைதான். என்றாலும்..."

"என் ஆல்பத்தில் ஆபாசமான வரிகள் ஏதும் இல்லை. என் மானேஜர் ஜான் பீட்டர்ஸ் தான் என் ஆல்பத்துக்கான பாடல்களை எழுதுகிறார். நான் இசையமைத்துப் பாடுகிறேன். நன்றாக விற்கின்றன என்றால் என்ன அர்த்தம்? நான் ஏற்கெனவே சொன்ன பரஸ்பர உணர்வுப் பரிமாற்றம்தான். அதை வெற்றிகரமாகச் செய்கிறேன் என்பதுதான். அதுதானே முக்கியம்!"

"சாதாரணமாக, ஓர் இசை நிகழ்ச்சிக்கு வெளிநாடுகளில் கூடுகிற ரசிகர் கூட்டத்தின் அள



பிரிட்டிஷ் அரசியும் பான்ஸி ராணியும்!

நியூசிலாந்து நாட்டில் காமன் வெல்த் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள எலிசபெத் அரசி பயணிகள் விமானத்தில் செல்வார்! 384 பயணி களுடன், ஒரு பயணியாக பொது விமா னத்தில், பறக்கவிருக்கிறார்! இதனால் பிரிட்டிஷ் அரசுக்கு (மக்களுக்கு) 1.60 கோடி ரூபாய் மிச்சமாகும்.

— வி.எஸ்.ஆர். கோபால்.

ஆதாரம் : டைம்ஸ் ஆப் இந்தியா

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

வுக்கு நம் நாட்டில் கூடுவதில்லையே, ஏன்?"

"மைக்கேல் ஜாக்ஸன் மாதிரியானவர்கள் நம் நாட்டுக்கு வருகிற போது இங்கும் ஏராள மானவர்கள் கூடுகிறார்கள். ஆனால் நம்நாட்டு இசைக் கலைஞர்களுக்குக் கூடுவதில்லை. இதற் குக் காரணம், நம் நாட்டுப் பொருள் என்றாலே அது சற்று தரம் குறைந்து தான் இருக்கும் என் கிற நமது மக்களின் தவறான மனோபாவம் தான். இது மாறியாக வேண்டும். நாமும் வேறு யாரையும் விட சளைத்தவர்கள் அல்ல என் பதை நமது மக்களுக்குப் புரிய வைத்தாக வேண்டும். இப்போது இந்தப் பணி ஆரம்ப மாகியிருக்கிறது என்றே சொல்லுவேன். இதில் எனது பங்காக, எனது ஆல்பங்களுக்கான காஸட் மற்றும் காம்பாக்ட் டிஸ்க் போன்றவை உலகத் தரத்துக்குக் கொஞ்சமும் குறையாதபடி அமைக்கிறேன்."

"உங்களுக்கு உங்கள் மனைவியும் உறு துணையாக இருக்கிறாரா?"

"ஆமாம். கம்போஸ் செய்தவுடன் அந்தப் பாடலை முதலில் என் மனைவிக்குத்தான் பாடிக் காண்பிக்கிறேன். அவள்தான் என் னுடைய முதல் விமர்சகர். அவளது ஆலோ சனைகளும் எனக்கு உறுதுணையாக இருக்கின் றன."

"உங்களுடையது காதல் திருமணமா?"

"அவளும் விளம்பரத்துறையில்தான் பணியாற்றினாள் என்பதால் பழகுகிற வாய்ப்பு. அதுவே காதலானது. இருதரப்புப் பெற்றோரி டமும் எதிர்ப்பு ஏதும் இல்லாமல் போனதால், காதல் திருமணங்களுக்கே உரிய ஒருவித த்ரில் லும் இல்லாமல், பெற்றோரே பார்த்துச் செய்த திருமணம் போலவே அமைந்து விட்டது."

"இசை, நடனம் தவிர வேறு எதிலாவது உங்களுக்கு ஈடுபாடு உண்டா?"

"பாட்மிண்டன் ஆடுவேன். இப்போது முடிவதில்லை. முழு கவனமும் இசையிலேயே செலுத்த வேண்டியிருக்கிறதே!"

"கூலி படத்தில் நீங்கள் மியூஸிக் டைரக்டராகப் பணியாற்றினீர்கள். அதற்குப் பிறகு வேறு எந்தப் படத்துக்கும் மியூஸிக் டைரக்டராக இல்லையே, ஏன்?"

"அதன் பிறகு எனது சொந்த ஆல்பங்கள் வெளியிடுவது காரணமாக எனக்குக் கொஞ்சம் கால அவகாசம் தேவைப்பட்டது. எனவேதான் அதில் கவனம் செலுத்த முடியாமல் போனது. வரும் ஜனவரியிலிருந்து இனி சினிமாவுக்கும் இசையமைக்கவுள்ளேன்."

பேட்டி : **இளங்கோவன்**

அட்டை வண்ணப்படமும், படங்களும் : **யோகா**



"பையன் ஏதோ குழப்பத்திலே இருக் கான் போலத் தெரி யுது...!"

"ஏன் அப்படி நினைக்கிறீங்க?"

"அ-னா ஆ-வன்னா சொல்லச் சொன்னா... அ.... ஆ..... இ.... ஈ... எஃப்... ஜி.... ஹெச்..... ஐ.... ஓ.... ஓ..... பீ...... க்யூ.... ஆர்.... எஸ்..... டீ என்று உளறிக் கொட்ட றானே!"

— பெ. கலாசாமி



நீலக்குயில்

இன்டெர்வெல் வரை இதமான காதல். மலைகள், பள்ளத்தாக்குகள், நீர்வீழ்ச்சிகள் நடுவே பாட்டெல்லாம் பாடாமல், உருப்படியான அன்பு. ஹீரோயினுக்குக் கண் தெரியாது. ஆபரேஷனுக்குப் பணம் சேர்க்கிறார் ஹீரோ. கண்தெரியும் போது ஹீரோவைப் போலீஸ் பிடித்துப் போய்விடுகிறது! இறுதியில், இருவரும் ஒன்று சேருகிறார்களா? வெள்ளித் திரையில் காண்க.

இந்த ஒரு பாரா கதையின் மூலகர்த்தா ப்ரியதர்ஷன். திரைக்கதையும் அவரே. அருவி போன்ற சம்பவ வளர்ச்சி. நடுவே அப்பாவித்தனம், செண்ட்டிமெண்ட், பாடல்கள் எல்லாம் எட்டிப் பார்க்கின்றன. காமெடி ஒரு சிட்டிகை தூக்கல்.

பாண்டியராஜனுக்கு வித்தியாசமான காரெக்டர். கோணங்கித்தனங்கள் இல்லை. திருட்டு முழி இல்லை. பொறுப்பான ஹீரோ. கீர்த்தனாரம்பத்திலிருந்து மனோரமாவும் உண்டு. இடைவேளைக்குப் பின்பு ராதாரவி. கதைக்கு நிறைய இடத்தில் தோள் கொடுக்கிறார்கள்.

கவுண்டமணி-செந்தில் போய், இப்போது செந்தில்–வடிவேலு காமெடி. தியேட்டர் சவுண்ட் பாக்ஸ் அதிரக் கத்துவதை நிறுத்திக் கொண்டால், இந்த ஜோடியும் ஒரு பெரிய ரவுண்ட் வரும்.

இசைக்குப் புதுமுகம். சூரியா. கே.ஜே. யேசுதாஸின் குரலில் 'பூ மாலையிது' மணக்கிறது.

இன்று எல்லாரும் பிரும்மாண்டத்தை நம்புகிறார்கள். பெரிய ஹீரோக்களை நம்புகிறார்கள். டைரக்டர் கதையையும் அழுத்தமான செண்ட்டிமெண்ட்டையும் நம்பியிருக்கிறார். அதற்குமேல் திரைக்கதையை நம்பியிருக்கிறார்.

நம்பிக்கை வீண்போகவில்லை.

— துளசி

அம்மாவைப் போல சொல்லித் தந்து படிக்கிற ஆசையைத் தூண்டுவாங்க!



• உமா மகேஸ்வரி



• அசோக்

"**பை**யன் கணக்கில் ரொம்ப மோசமாக இருக்கான் மேடம். இப்படியே போனால் பிளஸ் டூவில் கோட் அடிச்சிடுவான். அப்புறம், பொறியியல், ஐ.ஐ.டி. படிக்க வைக்கணும்கற என்னோட ஆசை என்ன ஆவது? நீங்கதான் உங்கள் டியூஷன் வகுப்பில் சேர்த்து, பையனை அதற்குத் தயார் செய்யணும்..." என்று ஸ்ரீமதி டீச்சரிடம் கெஞ்சுகிறார் ஒன்பதாவது படிக்கும் ஒரு பையனின் தந்தை.

டீச்சரோ, "ரொம்ப ஸாரி, இந்தக் கல்வியாண்டில் இனிமே நான் யாரையுமே சேர்த்துக்க முடியாது. வேணும்னா நீங்க ரிஜிஸ்தர் செய்துட்டு போங்க, அடுத்த கல்வி



யாண்டில் பார்க்கலாம்..." என்கிறார்.

"சரி" என்று வேறு வழியின்றி ஒப்புக் கொள்ளும் அந்தத் தந்தையிடம், "உங்கள் வெயிட்டிங் லிஸ்ட் நம்பர் 97. அடுத்த வருடம் ஜூன் மாதம் வந்து பாருங்க..." என்று சொல்கிறார் ஸ்ரீமதி. ஏமாற்றத் துடன் வெளியேறுகிறார் தந்தை!

பெரிய பெரிய பள்ளிகளில் கலபத்தில் இடம் கிடைத்தாலும் கிடைக்கும்; ஆனால் ஸ்ரீமதியின் டியூஷன் வகுப்பில் இடம்பெறுவதென்பது நமது பிரதமரின் புன்னகைக்கு நிகரானது!

சென்னை கே.கே. நகர் மேற்குப் பகுதியில், அம்மன் கோயில் வட்டாரத்தில் ஸ்ரீமதி டீச்சரைத் தெரியாத பள்ளி மாணவர்கள் இருக்க முடியாது. ஸ்ரீமதி டீச்சர் டியூஷனில் சேர்ந்தால் கணக்கிலும், பௌதிகத்திலும், ரசாயனத்திலும் சதம் போடலாம் என்ற கனவுகளுடன் காலை ஐந்தரை மணிக்கே துவங்கும் டியூஷன் வகுப்புகளுக்கு பட்டாம்பூச்சிகளாக வருகிறார்கள் மாணவ மாணவிகள்.

அப்படி என்ன மந்திரக்கோல் இருக்கிறது இந்த டீச்சரிடம்? சந்தித்தோம்.

"என்னைப் பொறுத்தமட்டில் உண்மையான உழைப்பைக் காட்டினால் எந்த மாணவனையும் நல்ல மார்க் வாங்கும்படி செய்து விடலாம். டீச்சிங் என்பது 25 சதம்தான். மற்ற 75 சதம், மாணவர்களின் மனோநிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற மாதிரி அவர்களை அணுகுவது.

"இந்தக் காலத்தில் கவனச் சிதறல்கள் அதிகம். போட்டி நிறைந்த உலகத்தில் அவர்களது எதிர்காலம், அவர்களுடைய பெற்றோர்களின் கஷ்டங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துச் சொல்லி,




• ஸ்ரீமதி

அவர்களுடைய நிலையை உணர்த்தணும். அப்படி உணர்ந்துட்டாங்கன்னா, ஐஸ்கட்டி உருகிவிடும். அதன்பின் எப்பேர்ப்பட்ட கஷ்டமான கணக்கும் நாம் கொடுக்கிற பயிற்சியில் மூளையில் புரோக்கிராம் ஆகிவிடும்" என்று சொல்கிறார் ஸ்ரீமதி.



காலை மூன்று மணிக்கே எழுந்து சமையல் மற்றும் இதர வேலைகளை ஐந்து மணிக்குள் முடித்து விட்டு, வகுப்புகளுக்கு ரெடியாகி விடுகிறார் ஸ்ரீமதி. மழையோ, வெயிலோ காலை ஐந்தரையிலிருந்து எட்டு மணி வரையும், பின்னர் மாலை நான்கிலிருந்து ஆறு ஏழு மணி வரையிலும் வகுப்புகள் உண்டு.

காலை வகுப்புகளும் குடும்ப வேலைகளும் முடிந்த பிறகு மாணவ, மாணவியரின் பெற்றோர்களுடனான சந்திப்பு நடக்கிறது. அவர்களுடைய வளர்ச்சி, நடத்தை ஆகியவை பற்றியும், டியூஷன் டெஸ்டுகளில் வாங்கிய



இதெல்லாம் பஞ்சாயத்துத் தேர்தல் சின்னங்கள்தாங்க! வரிசையாப் பார்த்து வேறே ஏதாவது அர்த்தம் தெரிஞ்சா நாங்க பொறுப்பில்லை!!

— நாகலை இளவல்

மார்க்குகள் பற்றியும்; அவர்களுடன் விவாதிக்கிறார் ஸ்ரீமதி. பின்னர் நோட்டுகளை திருத்துதல், சின்னச் சின்ன டெஸ்டுகளுக்கான கேள்வித் தாள்களைத் தயாரித்தல் என்று மாலை வகுப்புகளுக்கான நேரம் நெருங்கும் வரை வேலை.

"அட்மிஷனுக்கு ஏன் அவ்வளவு கெடுபிடி?"

"நோ... நோ... தப்பா புரிஞ்சுக்கிட்டு இருக்கீங்க! இங்கே சொல்லித் தருவது நான் ஒருத்திதான். ஒவ்வொருத்தர் மேலும் தனி அக்கறை செலுத்தணும்னா எண்ணிக்கை அதிகமாக இருக்கக் கூடாது. கணக்குப் பாடம் என்பது மற்ற பாடங்கள் போன்று மனப் பாடம் செய்து எழுதுவதல்ல. அடிப்படை புரியணும். போட்டுப் போட்டுப் பார்க்கணும். இங்கே நான் ஒன்பதாவது, பத்தாவது வகுப்புகளுக்கு மட்டும்தான் – அதுவும் சென்ட்ரல் போர்டு சிலபஸ் – டியூஷன் எடுக்கறேன். பல பசங்களுக்கு ஆறாம் வகுப்பு கணக்குகளின் அடிப்படை கூடப் புரிவதில்லை. முதலில் அதைப் புரிய வைப்பேன். ஒரு விஷயத்தை அவுங்க புரிஞ்சுக்கிட்ட பின்புதான் அடுத்த கட்டத்துக்குப் போவேன்" என்கிறார் ஸ்ரீமதி.

அதிகப்படி ஃபீஸ் தருகிறேன் என்று ஆசை காட்டினாலோ, வேறு சிபாரிசுடன் வந்தாலோ ஸ்ரீமதி தமது அட்மிஷன் கொள்கையைத் தளர்த்துவதில்லை.

அதே சமயத்தில், சில ஏழை மாணவர்களுக்கு இலவசமாக டியூஷன் சொல்லித் தருவதுடன் புத்தகங்களும் தம் செலவில் வாங்கித் தருகிறார்.

"என்னிடம் டியூஷன் சேர்ந்தால், படிப்பில் மட்டும் சிறப்பாகப் பிரகாசித்தால் போதாது. ஒழுக்கத்திலும் பிரகாசிக்க வேண்டும்" என்கிறார்.

இவ்வளவு கண்டிப்பும் கராறுமாக இருந்தால் மாணவர்கள் வெறுத்துப் போய்விட மாட்டார்களோ...?

கொஞ்சம் முணுமுணுப்பவர்கள் கூட மார்க்குகள் ஏறுவதைப் பார்த்து மௌனமாகி விடுகிறார்கள். மேலும், ஸ்ரீமதியின் பழைய மாணவ – மாணவியர் பலர் இன்று முக்கியமான பொறுப்புகளும் பதவிகளும் வகிக்கிறார்கள்.

"உங்கள் வகுப்பில் சேர்ந்ததுதான் எங்கள் வாழ்க்கையில் ஒரு முக்கியமான திருப்புமுனை" என்று இவர்கள் சொல்லக் கேட்டு நெகிழ்கிறார் ஸ்ரீமதி.

— ப்ரியன்

வண்ணப்படங்கள் : **ராஜ நாராயண்**

கி. ராஜேந்திரன்

இருதயப் படபடப்பு சற்று அடங்கியதும் சூர்யா சுவாமிக்கு ஃபோன் செய்தாள். "சாயா பேசறேன்."

"சாரதான்னு சொல்லு: அதான் இப்ப உன் பெயர், பாஸ்போர்ட் பிரகாரம்."

"எனக்கு பயமாயிருக்கு. நான் வெளியே போயிருந்தபோது என் அறைக்குள் யாரோ புகுந்து பெட்டிகளைத் திறந்து குடைஞ்சிருக்காங்க."

"ஏதாவது காணோமா?"

"இல்லே, ஆனா கலைஞ்சிருக்கு."

"அவ்வளவுதானே? பாஸ்போர்ட்? பணம்? பிளேன் டிக்கெட்?"

"அதெல்லாம் பத்திரமா இருக்கு. ஹேண்ட் பேகில்தான் எப்பவும் வைக்கிறது. அது கையை விட்டுப் போகாது."

"பின்னே என்ன, கவலைப் படாதே. இதாலியர்களுக்கே பொதுவா மோசடி பேர்வழிகள்னு பேர் உண்டு. ஒரு வேடிக்கை கேளு. நான் தங்கியிருக்கிற இந்த ஓட்டலுக்குள் நுழைஞ்ச போது ரிஸப்ஷன்ல இருக்கிறவன், 'Italians are crooks! Italians are crooks!'ன்னு திரும்பத் திரும்பச் சொல்லி, மேஜையைக் குத்திக்கிட்டிருந்தான். 'என்னப்பா விஷயம்'னேன். நாலு பால் பாயின்ட் பேனா வாங்கினானாம்; எதுவுமே ரெண்டு வரிக்கு மேல் எழுத மாட்டேங்குதாம்! 'ஏம்பா, நீயும் இதாலியன் தானே'ன்னு கேட்டேன். 'ஆமாம், என்னையும் சேர்த்துத்தான் சொல்றேன்'னு ஆத்திரத்தோட நாலு பால்பாயின்ட் பேனாக்களையும் குப்பைத் தொட்டியில் வீசி எறிஞ்சான்!" சூர்யா சுவாமி சிரித்தார்.

"எனக்கு சிரிப்பு வரலே" என்றாள் கடுப்பாக.

"வர வேண்டாம். சீரியஸ்ஸாவே இரு. ஆனா சொன்னபடி கேட்டு நடந்துக்க" என்றார் அதட்டலாக.

"அப்படின்னா?"


"உனக்குத் தரப்பட்டிருக்கிற பயணத் திட்டத்தைப் பின்பற்றினால் போதும்; வேறெதையும் கண்டுக்காதே."

"அத்து மீறி சிலர் என் அறைக்குள் நுழைவதைக் கூடவா?"

"அதான் சொன்னேனே, பணம் பாஸ்போர்ட்டுன்னு ஏதாவது கிடைக்குமான்னு பார்க்க பெட்டியைக் கிளறியிருப்பாங்க. உன் அறையைச் சுத்தம் பண்ண வருகிற ஹோட்டல் சிப்பந்திகளாகக் கூட இருக்கலாம். அடுக்கடுக்கான உன் ஸாரியிலும் நைட்டியிலும் அவங்களுக்கு அக்கறை இல்லே. திரும்பிப் போயிட்டாங்க. அவ்வளவுதான், விடு." உத்தரவாகக் கூறி ஃபோனை வைத்து விட்டார்.

அவர் பேச்சு தோரணையே மாறி விட்டதாக உணர்ந்தாள். வெகு நேரம் பெட்டிகளை வெறித்துப் பார்த்தபடி கட்டிலில் அமர்ந்திருந்தாள். 'என்ன நடக்கிறது? நான் எந்த ரகசியத் திட்டத்திலாவது என்னை அறியாமல் சிக்கியிருக்கிறேனா? இன்பாவிடம் ஏற்பட்ட கோபம், பழிவாங்கும் உணர்வு, அவனைப் பிரிந்திருக்க வேண்டும் என்ற வேகம், தன்னாலும் அயல்நாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள முடியும் என்பதில் கர்வம், சூரியா சுவாமியிடம் ஏற்பட்ட வியப்பு கலந்த மரியாதை எல்லாம் சேர்ந்து என்னை சிந்திக்க விடாமல் செய்து தவறான பாதையில் தள்ளி விட்டனவா?'

கதவு உட்புறம் தாளிட்டு விட்டு வந்து படுத்தாள். தூக்கம் வரவில்லை. எழுந்து போய் பெட்டிகளை ஆராய்ந்தாள். 'மாறியிருக்கிறதோ?' என்னதான் புதிய பெட்டிகளானாலும் பயணத்தின் போது ஒரு கீறல், அல்லது அடிவாங்கிய சிறு காயம் ஏதேனும் தோன்றும். இவை புத்தம்



புதுசாயிருந்தன. 'மேலும்' விமான லேபிள்கள் கட்டியும் ஒட்டியும் இருந்தனவே; எங்கே?'

யோசித்து, டாய்லெட் பெட்டியி லிருந்து சிறிய கத்திரிக்கோல் எடுத்து ஒரு பெட்டியின் அடிவாரத்தில் குறிப்பாக ஓரிடத்தில் அடையாளக் கீறல் ஏற்படுத்தினாள். 'பார்ப்போம், என்ன ஆகிறதென்று.'

காலை ஃபோன் ஒலிக்க விழித்தாள்.

"குருஜி பேச றேன்."

மௌனம் சாதித்தாள்.

"என்ன வெறுப்பா? நேத்து கொஞ்சம் கோபமா பேசிட்டேனில்ல? ரொம்ப களைப்பா இருந்தப்ப ஃபோன் செய்து வாங்கிக் கட்டிக்கிட்டே!" என்று சிரித் தார். "போகட்டும், நான் பாரிஸ் கிளம்ப றேன். நீ உன் புரோகிராம் படி சரியா நடந்துக்கிட்டா ஒரு பிரச்னையும் உனக்கு வராது. நான் காரண்டி. ஆனா திட்டத்தை மாற்றினா, நான் பொறுப்பேற்க முடியாது. என்னமும் நடக்கும். ஜாக்கிரதை. பெண் பிள்ளை. தனியா இருக்கே."

"சரி" என்றான் ஒட்டுதலன்றி. அந்நியோன்னியம் போய்விட்டது. அந்நியம் தோன்றி விட்டது.

ஏதோ ஒரு விதத்தில் நாம் பயன்படுத்தப்படுகிறோம் என்ற எண்ணத்துடன் குட்டி குளியலறையின் கண்ணாடி



கதவைத் தள்ளித் திறந்தாள். வெது வெதுப்பான ஷவர், குளிருக்கு இதமாக உடம்பைப் பிடித்து விட்டு, சோர்வைப் போக்கியது. நிலைக் கண்ணாடியில் பார்த்த போது அருகில் இன்பா, புன்சிரிப்புடன்!

'இல்லை; அது ஆழ்மனத்தின் ஏக்கம். இப்போது ஒரு கவலை என்றதும் அவன் துணை நாடும் உள்ளத்தின் பிரமை.'

தும்பைப் பூவாக டர்க்கி டவல் ஹோட்டலின் உபயம். சுற்றிக் கொண்டு வெளியே வந்தாள். சின்னஞ் சிறிய அறைதான். 10'X5'! ஆனால் அதற்குள்ளேயே எத்தனை வசதி! பெட்டி வைக்க மேஜை, 'வார்ட்ரோப்' ஒற்றைக் கட்டில், குட்டி குளியலறை, ஒரு ஜன்னல், திரைச்சீலைகள், அறை விளக்கு, படிக்க விளக்கு, இரவு விளக்கு....

உடையணிந்து, மேக்அப் தரித்தாள். தம்மாத்தூண்டு அறைக்கு ஒரு நாளைக்கு 1,00,000 லிரா வாடகை! ஒரு கோக்கோ கோலா 4,000 லிரா! ஒரு ஐஸ் கிரீம் 2,500 லிரா! ஒரு 'பிட்ஸா' சாப்பிட நினைத்தால் 35,000 லிரா எண்ணி வைக்க வேண்டும்! யாராவது கோடீசுவரனாக விரும்பினால், சொர்ப்பம் டாலர்களுடன் இதாலிக்கு வந்தால் போதும்!

ஹோட்டலை விட்டு வெளியே வந்ததும் உற்சாகம் மறுபடி தொற்றிக் கொண்டது. வெனிஸ்ஸின் அழகுகளையெல்லாம் அவசர அவசரமாக அள்ளிப் பருக முற்பட்டாள். பண்டைக் கால அரண்மனை. மறு பக்கம் ஆலயம். இடையில் பிரும்மாண்டமான நிலா முற்றம். டூரிஸ்டுகளின் நெரிசல். அவர்களிடமிருந்து சோளமோ, வேர்க்கடலையோ பெற சடசடக்கும் புறாக்கள். அரண்மனை பால்கனியில் கம்பீர குதிரைச் சிலைகள். உள்ளே ஒவ்வொரு பிரும்மாண்ட அறையிலும் காணப்பட்ட உயிரோவியங்கள். கத்தி, கேடயம், வில், அம்பு, ஈட்டி, கதை என்று பலவற்றை காட்சிப் பொருள்களாக்கிய ஆயுத அறை, நீதி மன்றம், ராஜ சபை, கீழே இறங்கிச் சென்றால் இருண்டு கிடந்த பாதாளச் சிறைகள். கைதிகளை ஆறுக்கு ஆறு கொட்டடியில் கட்டிப் போட்ட சங்கிலிகள்; கொடுமைப்படுத்திய சங்கதிகள். 'சுரங்கம் வெட்ட முடியாது; அப்படியே வெட்டினாலும் தப்ப முடியாது! சமுத்திர நீர் உட்புகுந்து ஆள் அம்பேல்தான்!' என்று நினைத்தவாறே படியேறி, வெளியேறி சுதந்திர கடற்காற்று சுவாசித்தாள்.

பிற்பகலில் ஒரு டூரிஸ்ட் கும்பலுடன் தன்னையும் இணைத்துக் கொண்டு விவரமறிந்த ஒரு கைடு விளக்க உரை தர வெனிஸ் நகரின் சந்து பொந்துகளில் புகுந்து புறப்பட்டாள். எங்கு பார்த்தாலும் உப்பங்கழிகள் இருப்பதால் அந்தக் காலத்திலேயே தூண்கள் அமைத்து அதன் மீது கட்டடம் எழுப்பும் கலையைத் தெரிந்து வைத்திருந்தார்கள். ஈரப்பசை சுவரில் ஏறாதிருக்க நில மட்டம் அளவுக்கு அஸ்திவாரச் சுவர் உயர்ந்ததும் காரீயத்தை உருக்கி வார்த்து அதன் மீது மறுபடி கல் அடுக்கினார்கள். உப்பு நீர், குடிக்க உதவாததாகையால் மழை நீரைத் தொட்டியில் சேமித்தார்கள். கண்ணாடிப் பொருள்கள் உருவாக்கும் கலையில் தலைசிறந்து விளங்கினார்கள்.

"பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் போல் இங்கேயும் இருக்கிறது பாருங்கள்!" அவர் சுட்டிக் காட்டிய திசையில் கூம்பு வடிவ கோபுரம் ஒன்று, சதுப்பு நிலத்தில் அஸ்திவாரம் ஒரு பக்கம் இறங்கியதால் சாய்ந்து காட்சி தந்தது. ஒவ்வொரு நாளும் காலே அரைக்கால் மில்லி மீட்டர் அளவுக்குக் கண்ணுக்குப் புலப்படாத படிக்கு சாய்கிறது.

கோண்டோலா படகில் ஏறினாள். நகரில் சாலைச் சந்துகள் போலவே நீரிலும் கால்வாய்ச் சந்து பொந்துகள். கடல் பொங்கி வருவதும் வீடுகளின் உள்ளே புகுவதும், குடியிருப்போர் முதல் மாடிக்கு இடம் பெயர்வதும் ஆண்டு தோறும் நிகழும் பருவகாலச் சம்பவம். பழகி விட்டது அவர்களுக்கு. கட்டடங்களின் புராதனத் தோற்றத்தைப் பாதுகாத்து, நவீன வசதிகளைப் புகுத்தி, படு சுத்தமாக வைத்துக் கொண்டு டூரிஸ்டுகளை ஈர்க்கின்ற சாமர்த்தியம் பணத்தை வாரிக் குவிக்கிறது.

'இன்றோடு சரி, நாளை ரோமாபுரிக்குப் புறப்பட வேண்டும்' என்ற நினைவோடு படகுப் பயணத்தின் ஒவ்வொரு விநாடியையும் ரசித்தாள். வானம் சிவந்தது; நீரும் அனல் பிழம்பானது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே கனல் அடங்கி சாம்பல் பூத்தது. ஒளி

அருள்வாக்கு

சகலமும் ஆன பரமாத்மா, நாம் அவரை எந்த ரூபத்தில் உபாசித்தாலும் அந்த ரூபத்தின் மூலம் அருள் புரிகிறார். படிப்படியாக நம் மனநிலையை உயர்த்துகிறார். கடைசியில் மனசே இல்லாத, மனசைக் கடந்த நிலை உண்டாகிறது. மனசு கடந்த அந்த நிலையிலேயே குணமும் ரூபமும் கடந்த பரமாத்மாவை உள்ளபடி அநுபவிக்க முடிகிறது. ஆரம்பத்தில் நமக்குப் பலவித மனோ விகாரங்கள் இருக்கும் போது, 'பரமாத்மா எல்லாம் கடந்தவர்' என்றால் அதில் பிடிப்புக் கொள்ள முடியவில்லை. ரூபத்தில், குணத்தில் அவரை உபாசித்தால், அது முற்றிய நிலையில், எல்லாவற்றுக்கும் அதீதமான பரமாத்மாவை உள்ளபடியே அநுப



விக்க முடிகிறது. மஞ்சள் பழத்தை மஞ்சளாகவே பார்க்கிறபோது மேற்கொண்டு மனசுக்கு வேலை இல்லாதது போல், பரமாத்மாவைப் பரமாத்மாவாகவே பார்க்கிறபோதும் மனசுக்கு வேலை இல்லாமல் போகிறது. உபாசனையின் போது, "பரமாத்மாவை இப்படி இப்படி பாவனை செய்தால் அதற்கு இன்னின்ன மந்திரம் ஜபிக்க வேண்டும். இன்னின்ன ஆசாரம் வேண்டும். இன்னின்ன பூஜா பத்ததி வேண்டும்'' என்று விதிகள் இருக்கின்றன. பாவனை போய், அவரை உள்ளவாறு அறிகிறபோது எந்த விதியும் இல்லை. செயலும் இல்லை. சரீரம் மனசு இவற்றின் காரியமாகிற உபாசனை, இப்போதுதான் அநுபவமாகிற ஞானம் என்பதாகப் பழுத்து விடுகிறது.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

யார் மூலம் மனித சமுதாயத்துக்கு நன்மை அதிகரிக்கிறதோ, அவனே மிகச் சிறந்த மனிதனாவான். இறைவனின் படைப்புகள் அனைத்தும் அவன் குடும்பத்தினராவர். இறைவனின் படைப்புகளுக்கு மிக அதிகம் உதவி செய்ய முயற்சி செய்பவன், இறைவனுக்கு மிக நெருங்கிய அன்பனாகின்றான்.

— நபிகள் நாயகம்

யும் இருளும் கலந்து உறவாடும் நேரம் வெனிஸ்ஸில் மிக அதிகம்.

அறைக்குத் திரும்ப விசைப்படகுக்கு மாறி, படகுத் துறையில் இறங்கும் போது இரு பெட்டிகளுடன் படகில் ஏறிய அந்த உருவம்... 'ஏற்கெனவே பார்த்திருக்கிறோமே! எங்கே? எப்போ? அவன் சுமக்கும் அந்தப் பெட்டிகள் என்னுடையன போலிருக்கே? கேட்பதா? வேண்டாமா? சூரியாசுவாமி எச்சரித்தாரே! வம்பை விலைக்கு வாங்கியதாகி விடுமோ?'

இதற்குள் படகு நகர்ந்துவிட, அவனை ஆழ்ந்த பார்வையால் அளந்து கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பி, சாவி பெற்று நெஞ்சு தடதடக்க அறையை அடைந்தாள். பெட்டிகள் வைத்த இடத்தில். ஆனால் திறந்து நோக்கிய போது எதிர்பார்த்தபடியே சற்று கலைந்துதான் இருந்தது. ஸூட்கேஸின் அடிவாரத்தில்... அவள் செய்திருந்த அடையாளக் குறி... காணப்படவில்லை! இவை வேறு பெட்டிகள்! எல்லாமே ஒரே மாதிரி அமைப்பு கொண்டவை. இந்தப் பெட்டிகளை இங்கே வைத்து, துணிமணிகளை இடம் மாற்றிய பிறகு, ஏற்கெனவே இருந்த பெட்டிகளை எடுத்துச் சென்று இருக்கிறான்... பென்ஜமின்!

அந்தக் கணத்தில் நினைவு வந்து விட்டது! கணவனுடன் கட்டிலில் குலவ நினைத்த வேளையில் அவன் பென்ஜமினின் படத்தைப் பார்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்திருக்க, தான் வெறுத்துப் போய் அந்தப் படத்தை உருவிப் பறக்கவிட்டது....

சாயாவுக்கு உடல் சில்லிட்டது.

****

இருட்டைக் கிழித்துப் புறப்படும் மின்னல் போல இன்பாவின் சோர்விலிருந்து ஒரு கோபம் சீறியது. "அப்படியானால் நாங்கள் பின்பற்றிய அணுகுமுறைகள், பிரயாசைப்பட்டு கண்டு பிடித்த தடயங்கள், எடுத்த முடிவுகள் எல்லாமே தப்பா?" என்று மேஜையை அறைந்தான்.

புன்னகை புரிந்தார் ஜான் கார்மிக். "முதலில் இன்டர்போல் ஏஜெண்டுகளிடம் பேசுங்கள்" என்றார். சூரியாசுவாமியைக் கண்காணிக்கும் ஏஜெண்டுடன் ஸெல்லுலர் ஃபோன் தொடர்பு ஏற்படுத்தித் தந்தார். "சூரியா, ஆல் இதாலியா ஃபிளைட் 162ல் பாரிஸ் வந்தாயிற்று. தன் பக்தர்களில் ஒருவன் ஃபிளாட்டில் தங்கியிருக்கிறான். எதிர்ப்புறம் உள்ள கட்டடத்தில் ஓர் அறையில், போலீஸ் பாட்ஜ் காட்டி ஜன்னல் அருகே இடம் பிடித்திருக்கிறேன். பைனாகுலர் மூலம் பார்க்கும் போது சூர்யா பூஜை செய்வதாகத் தோன்றுகிறது."

அடுத்து வெனிஸ். அங்கே பென்ஜமின், தன் கேர்ல் ஃப்ரெண்ட் ஒருத்தியுடன் சல்லாபித்தவாறு கோண்டோலா படகில் கால் நீட்டி சாய்ந்து, சூரியனின் இளம் கதிர்கள் தரும் ஒத்தடத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதாக மற்றொரு இன்டர்போல் ஏஜெண்ட் சொன்னான்.

இன்பா ஃபோனைத் திருப்பித் தர, பெற்றுக் கொண்ட கார்மிக், "இதனால் உங்களுடைய அனுமானங்கள் தவறு என்று சொல்லிவிட முடியாது" என்றார்.

கேள்விக்குறி தேக்கி ஏறிட்டுப் பார்த்தான் இன்பா.

"சூர்யாசுவாமி இந்தியாவில் இருக்கும் போது, ஏன் வெளிநாட்டிலும் கூட தேவை

யான சமயங்களில் பென்ஜமின் வேஷம் புனைகிறான்; சூர்யாகவாமி, பென்ஜமின் என்று இரு பெயர்களில் இருவித பாஸ்போர்ட் வைத்திருக்கிறான் என்று ஊகிக்கலாம். நிஜ பென்ஜமின் ஒருவனும் அயல் நாட்டில் அவனுக்கு உதவ இருக்கிறான்."

"ஆக மொத்தம் சூரியாகவாமி, பென்ஜமின் இருவருமே பாதகர்கள். பென்ஜமினைப் பிடித்து கம்பி எண்ண வையுங்கள். சூரியாகவாமியைக் கைது செய்து என்னிடம் ஒப்படையுங்கள். இந்தியாவுக்கு இழுத்துப் போகிறேன்."

"செய்யலாம்; போதிய சாட்சியங்கள் வேண்டும்."

"போதை மருந்துகளுடன் கையும் களவுமாகப் பிடிக்கலாமே, இப்போது!"

"சாத்தியம்தான். ஆனால் தாமதிக்கக் காரணம் இருக்கிறது."

"என்ன?"

"சூரியாகவாமி நம்மை லான் ரோக்கோவிடம் அழைத்துப் போவான் என்று எதிர்பார்க்கிறோம்." ஒரு ஃபைலை அவனிடம் தந்தார்.

பிரித்தான். மேலாக ஒரு ஃபிரெஞ்சு நாளிதழ் 'கிளிப்பிங்'. அழகாகக் கத்திரிக்கப்பட்டு, ஒரு தாளில் ஒட்டி, ஃபைல் செய்யப்பட்டிருந்தது.

"சில மாதங்களுக்கு முன் இந்த நிருபர் ஒரு பாரிஸ் நைட்கிளப்பில் லான்ரோக்கோவை பேட்டி கண்டிருக்கிறார். தனக்கு ஆஃப்கனிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, சிலோன், தாய்லாந்து என்று பல நாடுகளிலிருந்து போதை மருந்து கடத்தப்பட்டு வருகிறது என்றும் ஐரோப்பா முழுவதற்கும் தான்தான் விநியோகம் செய்வதாகவும் பெருமையடித்துக் கொண்டிருக்கிறான் லான்ரோக்கோ. 'மாஃபியா மன்னன் பிரத்யேக பேட்டி - ஒரு ஸ்கூப்' என்ற தம்பட்டத்துடன் பிரசுரமாகியிருக்கிறது."

புகை மண்டலத்தினிடையில் இரு பக்கமும் இரண்டு முக்கால் நிர்வாண அழகிகள் துணையிருக்க, மேலுதடு முழுவதையும் மறைத்த மீசை, கறுப்புக் கண்ணாடி, ஒட்ட வெட்டப்பட்ட பொன்முடி, டி ஷர்ட், அமைதிச் சின்ன டாலருடன் மைனர் செயின், வாயில் சிகரெட் சகிதம் படத்திலிருந்த லான்ரோக்கோ இன்பாவைப் பார்த்துச் சிரித்தான்.

"சூரியாகவாமி இவனுக்கு வேலை செய்வதாக நம்புகிறோம்."

"நீங்கள் இவன் மூலம் அவனை, அவன் மூலம் இன்னொருவனைப் பிடிக்கணும் என்று காலம் தாழ்த்தும் நேரத்தில், போதை மருந்து ஏராளமாய் விநியோகமாகி, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அதற்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள்."

"மறுக்க முடியாது. ஆனால் உச்சியிலிருக்கிற இவனை வளைத்துப் போடாதவரை வியாபாரம் தொடரும். சூரியாகவாமிக்குப் பதில் வேறு ஒருவன் பிரமோஷன் பெற்று வந்து சேர்வான். அவசரப்பட்டு ஆயிரக்கணக்கான வாலிபர்களைக் காப்பாற்றுவதை விட, நிதானத்துடன் செயலாற்றி லட்சக் கணக்கான இளைஞர்களைக் காப்பது மேலல்லவா?"

பெருமூச்சு விட்டான்.....

"என்ன உங்கள் யோசனை?"

சொன்னார்.

(தொடரும்)


தாகம் தீர்த்த பாபா!

போன வருடம் தமது பிறந்த நாளன்று பேசும் போது, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள அனந்தபூர் மாவட்டத்தில் நிலவும் தண்ணீர் பஞ்சத்தின் தீவிரத்தைப் பற்றிக் குறிப்பிட்ட சத்ய சாயிபாபா, அதனைத் தீர்க்க ஒரு புதிய குடி நீர்த் திட்டத்தையும் அறிவித்தார். திட்டத்தை நிறைவேற்ற தமது அடுத்த பிறந்த நாளை கெடு வைத்தார். சொன்ன மாதிரியே அற்புதம் நிகழ்ந்து விட்டது. சில தகவல்கள் :-



- திட்டச் செலவான 220 கோடியில், மாநில, மத்திய அரசின் பங்கு ஒரு ரூபாய் கூட இல்லை. முழுக்க முழுக்க இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் வாழும் பாபா பக்தர்கள் அளித்த நன்கொடையிலிருந்தே செலவிடப்பட்டுள்ளது.
- 2300 கி.மீ. தூரத்துக்கு பைப்புகள் புதைத்து, 268 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி, 120 தரை மட்ட நீர்த்தேக்கங்களை உருவாக்கி, தண்ணீர் வழங்கப்படுகிறது. ஆயிரம் கிராமங்கள் இதனால் பலனடையும்.
- அடுத்த மூன்றாண்டுகளுக்கு திட்டத்தை பராமரிக்கும் பணியையும் சத்ய சாயி டிரஸ்ட் ஏற்றுக் கொண்டுள்ளது.

— மௌலி





1995 நவம்பர் 26
யுவ கார்த்திகை 10
மலர் : 54
இதழ் : 17

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கொள்ளையோ கொள்ளை!

பஸ் நிறுத்தி வழிப்பறிக் கொள்ளை; பாங்க் லாக்கரை உடைத்துக் கொள்ளை; நகைக் கடையில் சூறையாடல்... என்று அவ்வப்போது செய்திகள் படிக்கிறோம். ஆனால் இந்தக் கொள்ளைகளையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் மெகா கொள்ளை ஆண்டு முழுவதும் ஆர்ப்பாட்டமின்றி நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கமே அனுமதிக்கும் அந்தக் கொள்ளைக்கு, 'அரசுத் துறை நிறுவனங்களின் நஷ்டம்' என்ற கௌரவப் போர்வை தரப்படுகிறது.

சி.ஏ.ஜி. (Comptroller and Auditor General of India) எனப்படும் இந்திய கணக்குத் தணிக்கைத் துறை தலைவரின் அலுவலகம், மத்திய, மாநில அரசுகள் செய்யும் செலவுகளைக் கண்காணித்து, தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பிக்கிறது. ஆண்டுக்கொருமுறை தரப்படும் இவ்வறிக்கையில் அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு விமர்சிக்கப்படுகிறது.

உதாரணமாக, இவ்வாண்டு தமிழ்நாட்டின் அரசுத் துறை நிறுவனங்கள் குறித்த சி.ஏ.ஜி. அறிக்கையில் இடம்பெற்றுள்ள சில புள்ளி விவரங்களைப் பாருங்கள் :

- தமிழ்நாட்டின் எண்பத்து மூன்று அரசுத் துறை அமைப்புகளுள் முப்பத்தெட்டு நிறுவனங்கள், 93-94 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை இன்னும் முடிக்கவேயில்லை!
- கணக்கு முடித்த மீதி நாற்பத்தைந்து நிறுவனங்களுள் இருபத்தைந்தின் ஒட்டுமொத்த



லாபம் 133 கோடி ரூபாய். மீதி இருபது நிறுவனங்கள் அடைந்துள்ள மொத்த நஷ்டம் 57 கோடி ரூபாய்!

● இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால், 33 நிறுவனங்கள், தொடங்கியது முதல் அடைந்துள்ள மொத்த நஷ்டமான 457 கோடி ரூபாய் என்பது, அவற்றின் மொத்த மூலதனத்தை விட கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகம்!

சி.ஏ.ஜி. அறிக்கை என்பது நஷ்டத்தையும் தவறான அணுகுமுறையினால் விளைந்த பண விரயத்தையும் சுட்டிக்காட்டுவதோடு நிறுத்திக் கொள்கிறது.


ஆனால், கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்தால், குறிப்பிட்ட சிலரின் ஆதாயத்துக்காக அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாடும் லாபமும் பலியிடப்பட்டுள்ளது தெளிவாகத் தெரிகிறது. பச்சையாகச் சொல்ல வேண்டுமென்றால், அரசுத் துறை நிறுவனங்களில் லஞ்ச - ஊழல் அங்கிங்கெனாதபடி எங்கும் ஊடுருவிக் கலந்துள்ளது. சில உதாரணங்கள் :

● சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் என்ற அரசுத் துறை நிறுவனம், கொச்சி துறைமுகத்துக்கான ஒரு பணியைக் காலக்கெடுவுக்குள் செய்து தராததால் சுமார் ஏழரைக் கோடி ரூபாய் விரயம்.

● மத்திய அரசின் வழிகாட்டு நெறிகளைத் தூக்கியெறிந்து விட்டு, பாமாலின் எண்ணெய்யை இஷ்டப்படி இறக்குமதி செய்த வகையில் ஏற்பட்ட நஷ்டம் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய்!

● இந்தியாவில் தயாரிக்கப்படும் 'அயல்நாட்டு' மதுபானங்களுக்குக் கூடுதல் ஆயத் தீர்வை விதிக்கப்பட வேண்டும். தயாரிப்பாளர்கள் செலுத்த வேண்டிய இந்த கூடுதல் ஆயத் தீர்வை மற்றும் விற்பனை வரியைத் தமிழக அரசே 'தயை கூர்ந்து' ஏற்றுக் கொள்வதென்று முடிவெடுத்து விட்டது. இந்த வகையில் உண்டான கூடுதல் செலவு ஒரு கோடி ரூபாய்!

● அதே போல், தமிழ்நாடு மின்சார வாரியம், நிலக்கரி கையாளும் அமைப்புடனான



ஒப்பந்தத்தை மீறியதால் இரண்டே கால் கோடி ரூபாய் கூடுதல் செலவு!

ஆக, இந்த நஷ்டமெல்லாம் மோசமான நிர்வாகத்தினால் மட்டுமே விளையவில்லை; சிலரது பாக்கெட்டுகள் நிரம்ப வேண்டும் என்பதற்காக விளைவிக்கப்பட்டவை என நம்புவதற்கு இடமிருக்கிறது.

இதையெல்லாம் மீறி ஒருசில அரசுத் துறை நிறுவனங்கள் லாபகரமாக இயங்க முடிகிறது என்பது ஆச்சரியம்தான். ஆனால், அவை கூட முழுத் திறத்தையும் பயன்படுத்தி அதிகபட்ச லாபம் அடைந்ததாகச் சொல்ல முடியாது. மோசமான செயல்பாட்டையும் மீறி லாபம் கிட்டியிருப்ப தாகத்தான் கருத வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட சில வங்கிகளில், கணக்குகளை சௌகரியப்படி எழுதி லாபம் 'காட்டப்பட்டுள்ளது' என்பதைப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியது உண்டு.

தனியார் நிறுவனங்கள் சில, நஷ்டத்தில் நடக்கும் போது அந்த நஷ்டத்தைப் பகிர்ந்து கொள்பவர்கள் ஒருசில முதலீட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்களே. ஆனால் அரசுத் துறை நிறுவனங்களின் கதை வேறு. அவற்றில் நஷ்டம் வரும்போது அதைத் தாங்குவது யார்...?

நிச்சயமாக அந்த நஷ்டத்துக்குக் களம் அமைத்துத் தரும் அரசாங்கம் அல்ல...

தீப்பெட்டி முதல் டெலிவிஷன் வரை ஒவ்வொரு பொருளையும் வாங்கும்போது வரி செலுத்தும் சராசரி தமிழன்தான் அந்த நஷ்டத்தைத் தாங்குகிறான்.

வியர்வை சிந்த உழைத்துச் சம்பாதிக்கும் தொகையிலிருந்து அவன் செலுத்தும் வரிப்பணம் தான் அரசுத் துறை நிறுவனங்களில் முதலீடாகிறது. அங்கே அந்தப் பணம் சுரண்டப்படும்போதும் விரயமாகும்போதும் வோட்டுப் போட்ட அந்த பாட்டாளிக்குத் துரோகம் செய்கிறது அரசாங்கம். தட்டிக் கேட்கும் அறிவோ, துணிவோ இல்லாத அந்த எளியவர்கள் தொடர்ந்து ஏமாற்றப்படு கிறார்கள்.

மணியார்டரில் நடந்த தில்லுமுல்லு!

சாதாரணமாக, தபால் நிலையத்துக்குப் போய் நாம் யாருக்காவது மணிஆர்டர் அனுப்பும் போது என்ன செய்வோம்?

மணிஆர்டர் ஃபாரத்தில் யாருக்கு அனுப்புகிறோமோ - அவரது பெயர், முகவரி; அனுப்புபவர் பெயர், முகவரி; எவ்வளவு அனுப்புகிறோம் என்கிற விவரங்களைக் குறிப்பிட்டு, ஃபாரத்துடன் தொகையைக் கவுண்ட்டரில் செலுத்திவிட்டு, 'பணம் போய்ச் சேர்ந்துவிடும்' என்கிற நிம்மதியில் திரும்பி விடுகிறோம்.

நாம் தபால் நிலையத்தில் கொடுக்கிற அதே ரூபாய் நோட்டுக்களா, 'To address'க்குப் போகிறது?

இல்லை!

நாம் நிரப்பித் தருகிற ஃபாரத்தில் தபால் துறை அதிகாரிகள், யாருக்கு எவ்வளவு தர வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு அந்த ஊர் போஸ்ட் ஆபீஸுக்கு - அந்த ஃபாரத்தைக் கிழித்து அனுப்பி விடுவார்கள்.

சென்னையிலிருந்து மதுரைக்கு நூறு ரூபாய்க்கு ஒரு மணி ஆர்டர் அனுப்பப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். சென்னை தபால் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்படுகிற அந்த கிழிக்கப்பட்ட ஃபாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, மதுரை அலுவலகத்தார், உரிய நபருக்கு - அவரது அட்ரஸில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள்.

ஆண்டு இறுதியில் தணிக்கை வரும்போது, அங்கே 'கிரெடிட்' ஆகி இருப்பதும்; இங்கே 'டெபிட்' ஆகி இருப்பதும் ஒத்துவருகிறதா என்று சரி பார்ப்பார்கள்; இது நடைமுறை.

1957-58 ம் ஆண்டு அப்படித் தணிக்கை செய்த போது ஒரு துணிகரமான ஊழல் நடந்திருப்பதை - அதுவும் தொடர்ந்து நடந்திருப்பதைக் கண்டு பிடித்தார்கள்.

தமிழகத்தின் பல ஊர்களில், ஒரு குறிப்பிட்ட ஆசாமிக்கு ரூ. 100, 200, 500 என்று அவ்வப்போது மணி ஆர்டர் வந்திருக்கிறது. ட்ராவெலிங் சேல்ஸ்மேன் என்று தன்னைச் சொல்லிக் கொண்ட அந்த ஆள், தன்னிடமுள்ள ஐடென்டிடி கார்டைக் காட்டி, எல்லா இடங்களிலிருந்தும் பணம் பெற்றுச் சென்றிருக்கிறான்.

ஆனால் பணம் அனுப்பப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களில் அப்படி ஒரு ஆளுக்கு யாரும் மணி ஆர்டர் அனுப்பியதற்கான ஆதாரமே இல்லை! அதாவது யாரும் பணம் அனுப்பாமலேயே ஓர் ஆளுக்கு மணி ஆர்டர் மட்டும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது!

இது எப்படி?

விஷயம் புரியாமல் தணிக்கை அதிகாரிகள் மண்டையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள். விஜிலன்ஸ் ஆபீசர்கள் வந்து விசாரித்தும், எப்படி நடந்திருக்கிறது என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

கேஸ், சிபிஐக்கு வந்தது. நான் விஷயத்தை முழுவதும் படித்துத் தெரிந்து கொண்டு, எஃப்ஐஆர் பதிவு செய்ய உத்தரவிட்டேன்.

குற்றவாளி யார்?

தெரியாது. 'Unknown' என்று எழுதினோம்.

என்ன குற்றம்?

யாரோ ஓர் ஆசாமி தபால் துறையை சக்கையாக ஏமாற்றி இருக்கிறான்.

கிட்டத்தட்ட 7000-8000 ரூபாய் வரை போலி மணி ஆர்டர்கள் மூலம் சம்பாதித்திருக்கிறான்.

எப்படிச் சம்பாதித்தான்?

அவன் ஊர் ஊராகச் சுற்றும் ஒரு சேல்ஸ்மன். ஆகவே அவ்வப்போது அவனுக்குத் தேவைப்படும் பணத்தை, யாரோ ஒருவர் அனுப்புவதாகக் காண்பித்து இவன் போஸ்டல் டிபார்ட்மெண்டிலிருந்து தான் வாங்கிய ஐடென்டிடி கார்டைக் காட்டி, (Postal ID Card என்பதை யார் வேண்டுமானாலும் அதற்கு நிர்ணயித்துள்ள ஒரு சிறு தொகையைப் போஸ்ட் ஆபீஸில் கட்டிப் பெறலாம். புகைப்படம் ஒட்டி, பெயர், முகவரி எழுதி சீலுடன் தபால் துறை தரக் கூடியது. வெளியூர்களுக்குச் செல்லும் போது கடிதம், மணி ஆர்டர் வந்தால் அதைக்காட்டி, 'எனக்குத்தான் வந்திருக்கிறது' என்று நிரூபித்து, பெற்றுக்

கொள்ளலாம்!) தான் போகும் இடங்களிலுள்ள போஸ்ட் ஆபீஸ்களில் பணம் வாங்கிக் கொள்கிறான். எப்படி போஸ்ட் ஆபீஸில் பணம் செலுத்தாமலேயே இவனுக்கு நோட்டு நோட்டாக மணி ஆர்டர் மூலம் செல்கிறது?

அதுதான் கண்டுபிடிக்க வேண்டியது.

நான் என் புலனாய்வு அதிகாரிகளுடன் உட்கார்ந்து, பணம் பெறப்பட்ட ஊர்களைக் கவனமாகப் பார்த்து வந்தேன்.

விருதுநகர், திருநெல்வேலி, மணியாச்சி, மாயவரம், மதுரை....

'இந்த ஊர்களுக்கெல்லாம் என்ன ஒற்றுமை?' என்று ஆராய ஆரம்பித்தேன்.

தபால்கள், மணி ஆர்டர்கள் எப்படி அனுப்பப்படுகின்றன, மாநிலத்துக்குள்? ரயில் மூலம்.

சட்டென்று பிடிபட்டது. குறிப்பிட்ட சேல்ஸ்மன், பணம் பெற்றிருக்கிற ஊர்கள் அனைத்தும் ரயில்வே ஸ்டேஷன்கள் உள்ளவை. உள்ளடங்கிய, ரயில் பாதையற்ற ஊர்கள் அல்ல!

ரயில்வே - தபால் - மணி ஆர்டர்..... சட்டென்று என் கவனம் RMS மேல் விழுந்தது.

ரயில்வே மெயில் சர்வீஸைச் சேர்ந்த யாராவது இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மனத்தில் தோன்றியவுடன் மறுபடி அந்த ஊழல் ரிப்போர்ட்டை முழுதும் ஆராய்ந்தேன்.

குறிப்பிட்ட அந்த சேல்ஸ்மனுக்குப் பணம் தரப்பட்ட நாட்களைக் கவனித்தேன். அத்தனையும் விடுமுறை நாட்களுக்கு அடுத்தாற் போல் வரும் நாட்களாக இருந்தன!

ஆக, இன்னொரு ஒற்றுமை! ஆர்.எம்.எஸ் பணியாள் யாரோதான் ஊழல் செய்திருக்கிறான் என்றால், விடுமுறை நாட்களில் குறிப்பிட்ட ஊர்களுக்குச் சென்று மேலும் ஒரு நாள் லீவ் எடுத்துக் கொண்டு போஸ்ட் ஆபீஸ் திறந்தவுடன் பணம் வாங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

கொஞ்சம் கிளறிப் பார்க்கலாமே என்று என் ஜூனியர் ஆபீசரை அனுப்பி, குறிப்பிட்ட ஊழல் நடந்த காலகட்டத்தில் -

சி. வி. நரசிம்மன்

காஷுவல் லீவ் போட்டிருந்த ஆர்.எம்.எஸ். ஊழியர்களின் லீவ் அப்ளிகேஷன்களை வாங்கி வரச் சொன்னேன்.

கூடவே, அவர்கள் பணிக்கால நடத்தையையும் விசாரித்து. தீர அலசி, ஒவ்வொன்றாகக் கூட்டிக் கழித்துக் கொண்டே வந்தேன்.

இறுதியில் 7 - 8 பேர் மட்டும் பட்டியலில் தேறினார்கள்! அவர்களை மட்டும் விசாரித்து விடுவது என்று முடிவு செய்து, இரண்டு, மூன்று புலனாய்வு அதிகாரிகளை அந்த ஆட்களின் முகவரிக்கு அனுப்பி, கண்காணித்து வரச் சொன்னேன்.

'அவர்கள் யார்? அவர்களின் வாழ்க்கைத் தரம் என்ன? அக்கம் பக்கத்தில் அவர்கள் பற்றிய மதிப்பீடு என்ன?'

இதுதான் என் முதல் கட்ட முயற்சி.

விவரங்கள் வந்தன. ஒரு ஆளை விசாரிக்கப் போயிருந்த அதிகாரி மட்டும்,

"சார்! அவன் இல்லை!" என்றார்.

"எங்கே போயிருக்கிறானாம்?"

"பம்பாய்!"

"எதற்கு?"

"தெரியவில்லை; கேட்கவில்லை."

நான் உடனே அந்த ஆபீசரை மறுபடி அனுப்பி, 'எதற்காக அவன் பம்பாய் போயிருக்கிறான்?' என்று விசாரித்து வரச் சொன்னேன்.

திரும்பி வந்தவர் சொன்ன மூன்று தகவல்கள் என்னை வியப்புக்குள்ளாக்கின.

1. அவன் அடிக்கடி பம்பாய் போகிறான்.
2. விமானம் மூலம் போயிருக்கிறான்.
3. ரேஸில் கலந்து கொள்வதற்காகப் போயிருக்கிறான்.

எனக்குப் பொட்டில் அடித்தது! இவன் தான்! இவன்தான் அந்த ஃபிராடு ஆசாமியாக இருக்க வேண்டும்!

ஒரு சாதாரண ஆர்.எம்.எஸ். ஊழியன் - என்.ஜி.ஓ. பணியாள் அடிக்கடி விமானம் மூலம் பம்பாய் போய் ரேஸில் கலந்து கொள்கிறானென்றால்?

என் வட்டம் சுருங்கி, குற்றவாளியை நெருங்கி விட்டதை உணர்ந்தேன்.

அவன் வீட்டைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தேன். அவன் திரும்பி வந்ததும் திடீர் சோதனை நடத்தினோம்.

மாட்டிக் கொண்டான். அவன் வீட்டில் ஏராள மணி ஆர்டர் ஃபாரங்கள், 'சேல்ஸ்மன்' என்று குறிப்பிட்டு போஸ்டல் ஐடெண்டிடி கார்டு, ஃபோர்ஜரி சீல்கள் கைப்பற்றப் பட்டன!

துப்புரவாக அலசி, சார்ஜ் ஷீட் போட்டு, கோர்ட்டில் நிறுத்தினோம். அசைக்க முடியாத ஆதாரங்கள் சி.பி.ஐ.யால் காட்டப்பட, அவனுக்குக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. நான்கு ஆண்டுகள் என நினைவு.

சரி, அவன் எப்படி ஃபோர்ஜரி செய்தான்? அது மிக பிரமிப்பான விஷயம்! 'எப்பேர்ப்பட்ட மூளை, இப்படி தவறான விஷயத்துக்கு உபயோகமாகியிருக்கிறதே' என்று வேதனையுடன் வியக்க வைக்கிற விஷயம்.

ஆர்.எம்.எஸ்ஸில் பணிபுரிகிற அவன், தபால் போகிற பெட்டியிலேயே தானும் பயணம் போகிறவன். ரேஸ் பழக்கம் இருந்ததால் பணத் தேவை அதிகம் இருந்தது. ஆகவே ஒரு உபாயம் செய்தான்.

தன் பெயருக்கு யாரோ ஒரு மணி ஆர்டர் அனுப்புவது போல, தானே ஃபாரம் மட்டும் நிரப்பி, தயாரித்து வைத்துள்ள போலி தபால் துறை சீல்களை அடித்து, ரயிலில் வரும் தபால் கட்டுடன் சேர்த்து விடுவான்.

'From' அட்ரஸில் திருவல்லிக்கேணி, மைலாப்பூர் என்று எழுதி விட்டால் அவனுக்கு என்ன போச்சு?

விருதுநகரிலோ, திருநெல்வேலியிலோ பணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு பம்பாய்க்கு பிளேன் ஏறி விடுகிறான்! பின்னால் தணிக்கை சமயம் மண்டை உருள்வது அந்த திருவல்லிக்கேணி, மைலாப்பூர் போஸ்ட்மாஸ்டர்களுக்குத்தானே!

இந்த கேஸைத் துப்பறிவதில் எனக்குப் பெரும் உதவியாக இருந்தது. இரண்டு விஷயங்கள்.

1. அந்த மணி ஆர்டர் பாரங்களில் இருந்த ஒரே கையெழுத்து. 'ஒரு ஆள்தான் விளையாடுகிறான்' என்ற உறுதிக்கு வரமுடிந்தது அதனால்தான்.

2. அவன் பிளேன் ஏறி பம்பாய்க்கு அடிக்கடி போவான் என்கிற விஷயம்.

அன்று துப்பறிந்து வரப்போன ஆபீசருக்கு யாரேனும், 'யாரோ இறந்து விட்டார்கள். பெரம்பூர் போயிருக்கிறார்; அல்லது கும்மிடிப்பூண்டி போயிருக்கிறார்' என்று தகவல் தந்திருந்தால் மேற்கொண்டு என்னால் இதே பாதையில் வழக்கைத் தொடர்ந்திருக்க முடியுமா என்பது சந்தேகம்.

அதை என் அதிர்ஷ்டம் என்பதா? குற்றவாளியின் விதி என்பதா?

ஏதோ ஒன்று. எல்லா கேஸ்களிலும் ஏதாவது ஒரு முடிச்சு, இப்படி நாம் அவிழ்ப்பதற்காக எப்போதும் காத்துக் கொண்டே இருக்கும்!

(அடுத்த வாரம்)

'சுருக்-நறுக்' போட்டி — முடிவு — 4

சட்டம் என்பது....

ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசு பெறுகிறது!

● சட்டம் என்பது அரசியல்வாதிக்குத் துரும்பு; பணக்காரனுக்கு ஆயுதம்; ஏழைக்கு எட்டாக் கனவு; வக்கீலுக்கு விளையாட்டுப் பொம்மை; நீதிபதிக்கு செப்பிடு வித்தை!

— ஜி. சித்ரா, சென்னை — 11.

● திமிங்கலத்தைப் பிடிக்க விரிக்கப்படும் சிலந்தி வலை!

— மூ. மோகன், இடையம்பட்டி.

● சமுதாயத்தின் பாதுகாப்பு வளையம்; நிரபராதியின் நம்பிக்கை நட்சத்திரம்; குற்றவாளியின் லைசன்ஸ்.

— ராதா ஸ்ரீதர், சென்னை — 78.

● கைப்பிடியை உள்ளே கொண்ட கோப்பை.

— இரா. விஜயரங்கம், குண்டியம்பல்லூர்.

● ஏழை எனும் பாலுக்குக் காவல்; பணக்காரப் பூனைக்கும் தோழன்!

— ஏ. எஸ். மூர்த்தி, லலித்பூர், (உ.பி.).

● பணக்காரர்கள் இலையில் சோற்றையும், ஏழைகள் இலையில் மண்ணையும் பரிமாறும் ஜன(பண)நாயக வேலைக்காரன்.

— ஜெ. முருகன், மேலப்பத்தை.

● மதில் மேல் பூனை. கலியுக வக்கீல்கள் அதை அநியாயத்தின் பக்கம் துரத்த முயற்சி செய்கிறார்கள்.

— சிவகாமு, சென்னை — 41.

● சாட்சியங்களைச் சார்ந்த சந்தர்ப்பவாதி.

— எம். தக்ஷிணா மூர்த்தி, சென்னை — 12.

● ஆட்டோரிக்ஷா சவாரி மாதிரி! இலக்கை அடைவோம், எங்கெங்கோ பயணம் செய்து. ஆனால் செலவு ஜாஸ்தி!

— ஆர். ரகோத்தமன், சென்னை — 33.

குரு பெயர்ச்சி தரிசனம் விழா

ஆஸ்திக அன்பர்களுக்கு வேண்டுகோள்

யுவ ஆண்டு கார்த்திகை மாதம் 16ந் தேதி 2.12.95 சனிக்கிழமை காலை நாழிகை 5.14 க்கு மேல் தனுர்விசிக்கு பிரவேசமாவதால் அரக்கோணம் வட்டம் தக்கோலம் கிராமம் அருள்மிகு கிரிராஜ கன்னிகை சமேத ஜலநாதீஸ்வரர் கோயிலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு யோக தட்சிணாமூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளும் அவரவர் பெயருக்கு அர்ச்சனை செய்ய ஏற்பாடுகள் செய்திருப்பதால், அர்ச்சனை ஒன்றுக்கு 25.00 ரூபாய் நிர்ணயம் செய்துள்ளது. விருப்பமுள்ளவர்கள் நேரிலோ, M.O. மூலமாகவோ அனுப்பி ரசீது பெற்றுக் கொண்டு விழா அன்று வந்திருந்து தரிசித்து பிரசாதம் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டில் குருபகவான் சிறப்பாக கோயில் கொண்டுள்ள ஷேத்திரங்கள் மாயவரம், ஆலங்குடி, தக்கோலம், திரிசூலம், கழுகுமலை, பெரியாவுடையார் கோயில், நாகலாபுரம், கோவிந்தவாடி, அகரம் என்ற பெருமை வாய்ந்த குரு சன்னதிகளில் தக்கோலம் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாக அறங்காவலர்,
ஜலநாதீஸ்வரர் திருக்கோயில்,
தக்கோலம் - 631 151.

ஸ்ரீ காஞ்சி பூஜ்ய ஸ்ரீ பரமாச்சார்யாள் அவர்கள் அத்வைத வித்யாசார்யாள் மஹாராஜா ஸாஹேப் பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களே.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது ரூ. 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 5000/-, ரூ. 7500/- அல்லது ரூ. 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
42, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

.....இந்த நன்கொடைக்கு **80-G** விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.....

குறிப்பு : எம்மிடம் வேத, வைதீக, ப்ரயோக நூல்கள் யாவும் கிடைக்கும். Rs. 3/- க்கு தபால் தலை அனுப்பி எமது Catalogue ஐ பெற்றுக் கொள்ளலாம்.



மரத்தடியில் இருந்த ரிஷி, "குழந்தைகாள் நில்லுங்கள்!" என்று நாடக பாணியில் அருட்கரம் காட்டி, "பிரசாதம் பெற்றுச் செல்லுங்கள்" என்றார். நாங்கள் தயக்கத்துடனும் பயபக்தியுடனும் நெருங்க, ரிஷி மெல்லச் சிரித்தபடி தாடியை உருவ, சடை விழுந்தது போலிருந்த ஆலம் விழுது தாடி அவர் கையோடு வந்து விட, சுந்தா சிரித்தார்!

ரசிகமணி டி.கே.சி.யின் வட்டத் தொட்டி ரசிகர்களில் ஒருவரான சுந்தா, அகில இந்திய ரேடியோவில் பல தகுதிகளில் பணியாற்றி, இறுதியாக செய்திகள் ஆசிரியராக விளங்கி டில்லியில் ஓய்வு பெற்றார். அந்தக் காலகட்டத்தில், செய்திகளை ஒரு தடவை கேட்டதுமே எளியோருக்கும் மனதில் பதிகிற மாதிரி இலகுவாக எழுதிப் படிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்று பல புதுமைகள் புகுத்தினார்; சொல்லாக்கங்களும் செய்தார்.

அச்சமயம் "கல்கி" அவர்கள், "அலை ஓசை" எழுதுவது தொடர்பாக டில்லி சென்றிருந்தார். உடன் நானும் போயிருந்தேன். சுந்தா வீட்டுக்குச் சென்ற போது, ஓர் அதிசயம் பார்த்தேன். அவர் வீட்டில் மையமான இடத்தில் ஒரு மரப்பெட்டி இருந்தது. பணப் பெட்டி தான்! ஆனால் பூட்டுவது கிடையாது! மாதம் முதல் தேதி சம்பளத்தை அதில் வைத்து விடுவார். குடும்பத்தில் உள்ள அனைவரும் அவரவர் தேவைக்கு ஏற்ப பணம் எடுத்துக் கொள்வார்கள்! மாதக் கடைசியில் மிச்சம் மீதி ஏதாவது இருந்தால் வங்கியில் சேர்ப்பித்து விடுவார்! கணக்குப் பார்ப்பதே கிடையாது! இதனால் எல்லோருமே மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டனர்.

சுந்தா: ஒரு சுந்தரமான வாழ்க்கை

"சுயசரிதைகள், வாழ்க்கை வரலாறுகள் இவையெல்லாம் பெரும்பாலும் நாவல்களாகி விடுகின்றன" என்பவர் ராஜாஜி. "காரணம், நூலின் நாயகனுடைய செயல்களையெல்லாம் நியாயப்படுத்துவதே அவற்றின் நோக்கமாகி விடுகின்றன!"

இந்த எச்சரிக்கையை ஏற்று ஒருவரது வாழ்க்கை வரலாற்றை உணர்ச்சிவசப்படாமலும் நடுநிலை உணர்வோடும் நடந்தது நடந்தபடி எழுதுவது என்பது அபூர்வம். அத்தகைய ஓர் அபூர்வ சாதனை "பொன்னியின் புதல்வர்" என்ற அமரர் "கல்கி"யின் வாழ்க்கை வரலாறு. சாதனை புரிந்தவர் "சுந்தா" என்ற புனை பெயரில் எழுதி வந்த எம். ஆர். எம். சுந்தரம்.

சுந்தா எனக்கு அறிமுகமானதே ஒரு விசித்திரமான நிகழ்ச்சி. குற்றாலத்தில் சிறுவனாகிய நான் என் வயதொத்த டி.கே.சி. அவர்களின் பேரன்களோடு மலையேறி சோலைகளினூடே செண்பகாதேவி நோக்கி நடக்கும் போது, ஒரு

இவரது திறமை உணர்ந்து பி.பி.ஸி. தமிழோசைப் பிரிவுக்கு பொறுப்பு ஏற்க லண்டனுக்கு அழைக்கப்பட்டார். அங்கே மூன்றாண்டுகள் சிறப்பான சேவை புரிந்தார். அந்த அனுபவ அறிவு தில்லி திரும்பிய பிறகு அகில இந்திய ரேடியோவுக்கும் பயன்பட்டது.

"சாவி"யின் தூண்டுதல் பேரில் தமது பிரிட்டன் அனுபவங்களையும் டில்லி வாழ்க்கையையும் கட்டுரைத் தொடர்களாக வடித்தார். அவற்றைப் படித்த போதுதான் எனக்கு "கல்கி"யின் வாழ்க்கை வரலாற்றை எழுத அவரை அணுக வேண்டும் என்று தோன்றியது. என் அழைப்பை ஏற்று, இந்தப் பணிக்காகவே உத்யோக ஓய்வு பெற்ற பிறகு சென்னையில் குடியேறினார் சுந்தா.

வரும்போதே நிறைய ஆங்கில நூல்களை வாங்கி வந்தார். அவ்வளவும் வாழ்க்கை வரலாற்று நூல்கள்! அவற்றைப் படித்த பிறகு "கல்கி"யின் எழுத்துக்களை ஒன்று விடாமல் தேடித் தேடி படித்தார். அப்புறம் 'கல்கி'யை நன்கு தெரிந்தவர்கள், கொஞ்சம் தெரிந்தவர்கள், அவர் எழுத்தை மட்டும் படித்தவர்கள் என்று பலரைப் பேட்டி கண்டார். வானவில்லின் வண்ணங்களைப் போல் பல துறைகளில் ஜொலித்தவர் "கல்கி" அல்லவா? ஒவ்வொரு துறைக்கும் ஒரு இரு நூறு பக்க நோட்டுப் புத்தகம் ஒதுக்கி, குறிப்புகள் எடுத்தார்.

ஒன்றென்ன, இரண்டு மூன்று டாக்டர் பட்டங்கள் பெறக்கூடிய அளவுக்கு அவர் தீவிர ஆய்வு நடத்தப் போக... உடம்புக்கு வந்து விட்டது! ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சையும் ஓய்வும் பெறச் செய்தேன். ஒரு நாள் ரொம்ப சந்தோஷமாகக் காணப்பட்டார். "என்ன?" என்று வினவிய போது, "இங்கே படிப்பதைக் குறைத்து அதிகமாக சிந்திக்கிறேனா? அதனால் "கல்கி" வரலாற்றை எப்படி எழுதுவது என்று முடிவுக்கு வந்து விட்டேன். பெரும்பாலும் "கல்கி"யின் சொற்களைக் கொண்டே அவர் வரலாற்றை எழுதப் போகிறேன்! அவர் 'பொன்னியின் செல்வ'னை அளித்தார். நான் "பொன்னியின் புதல்வ'ரை வழங்கப் போகிறேன்" என்றார்.

"கல்கி"யின் ஆளுமையுடன் தமிழ் மறுமலர்ச்சி ஓர் இயக்கமாக வளர்ந்த காலகட்டத்தில் நடந்த முக்கியமான அரசியல், கலாசார, இலக்கிய நிகழ்வுகள் பொன்னியின் புதல்வரில் பதிவாகி, பின்னால் நடந்த, இனி நடக்கப் போகிற பல ஆய்வுகளுக்கு உற்ற துணையாக விளங்குகிறது.

சென்னையில் தொலைகாட்சி நிலையம் தொடங்கப்பட்ட போது பயிற்சி பெற்ற செய்தி ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் இவரது உதவியைச் சில காலம் தூர்தர்ஷன் பெற்றுப் பயனடைந்தது.

கிண்டல் கவிதைகள் எழுதுவதும் கதா காலட்சேபம் செய்வதும் சுந்தாவுக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகள்!

அவரது சிறுகதைகள் பல பரிசுகளும் பதக்கங்களும் பெற்றவை. அவற்றுள் "மேரியும் மகாத்மாவும்" காலம் கடந்து நிற்கும். தமிழ் இதழ்கள் பலவும் அதனை மறுபிரசுரம் செய்துள்ளன. மொழி பெயர்ப்பிலும் பல ஏடுகள் பிரசுரித்துள்ளன.

தம்முடைய 'நிலைத்து நிற்கக் கூடிய சிறுகதைகள்' என்று ஒரு தொகுப்பினை சமீபத்தில் தான் "கருநீலக்கண்கள்" என்ற தலைப்பிலே கங்கை புத்தக நிலையம் மூலம் வெளியிட்டார் சுந்தா. ஆனால் அவர் உயிர்தான் வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தி, தூக்கத்திலேயே அவரிடம் விடைபெற்றுச் சென்று விட்டது!

அதனால் என்ன? 83 வயது நிறைவான வாழ்க்கையின் நிறைவான சாதனைகள் என்றென்றும் தமிழரின் இதயத்தில் நிறைந்து இருக்கும்.

- கி. ராஜேந்திரன்

அஞ்சலி செலுத்த அழைக்கிறோம்

அமரர் கல்கியின் வாழ்க்கை வரலாற்று நூலாகிய "பொன்னியின் புதல்வர்" எழுதி, தமிழ் இலக்கிய உலகில் நிலையான இடம் பெற்று விட்ட சுந்தா அவர்கள், 11.11.95-ல் காலமானதையொட்டி, இரங்கல் கூட்டம் நவம்பர் 23-ந் தேதி வியாழக்கிழமை மாலை 6:30 மணிக்கு நடைபெறுகிறது.

சென்னை, மயிலாப்பூர், கற்பகாம்பாள் நகர், கோகலே - சாஸ்திரி அரங்கில் (விவேகானந்தா கல்லூரியையும், நாகேஸ்வரராவ் பூங்காவையும் இணைக்கும் சாலையில் மேற்குப்புறம் திருப்பம்) நடக்கும் இக்கூட்டத்தில், சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குனர் திரு. நடராஜன், அகில இந்திய ரேடியோ சென்னை நிலைய இயக்குனர் திரு. திருவேங்கடம், இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி காரியதரிசி திரு. ராமசந்திரன், திரு. பூர்ணம் விசுவநாதன், திரு. மீ.ப. சோமு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலராகவும் ஆளுனரின் ஆலோசகராகவும் விளங்கிய திரு. வி. கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ். தலைமை வகிக்கிறார்.

கல்கி - சுந்தா அன்பர்கள் அனைவரும் தவறாமல் வந்திருந்து புகழஞ்சலியில் பங்கேற்கக் கோருகிறோம்.

அறங்காவலர்கள்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு
அறக்கட்டளை.

திறப்பு விழா சலுகை நீடிக்கிறது..

[illegible]னில் புதிய கிளை திறப்பு விழா தொடர்கிறது..

திருமகள்

மைலாப்பூரில்

நவம்பர் 5 முதல்

165, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-4.
(ஆஞ்சநேயர் கோயில் எதிரில்) போன் : 499 75 40

25% + 5%

காண தவறாதீர்கள் RAJ TVயில்
ஒவ்வொரு ஞாயிறும் மதியம் 1 மணிக்கு
ஒய்.ஜி. மகேந்திரனின்
கிண்டலோ கிண்டல் நகைச்சுவை நாடகம்
வழங்குபவர்கள் திருமகள்

THIRUMAGAL LEASING

HEAD OFFICE : 9, Ramanathan Street, T.Nagar, Madras - 17. Ph : 434 74 08 ◆ CENTRAL OFFICE : 89/12, Perambur Barracks Road, Doveton, Madras-7. Ph : 532 54 55 ◆ BRANCHES : PARRYS - 160, Thambu Chetty Street, Madras-1. Ph : 534 23 35 ◆ CHROMEPET - S.R.S. Complex, New No.52, G.S.T. Road, Madras-44. (Opp. C.M. Marriage Hall) Ph : 40 11 26 ◆ THIRUVARUR - 194, V.V.P. V.V.P. Building Anna Salai, Thiruvarur. Ph : 22 906

திருமகள்.. உங்கள் வீட்டுப் பொன் மகள்.

WORKING HOURS : 10 A.M. TO 6.30 P.M. SUNDAYS : 10 A.M. TO 1 P.M.

லஞ்சம்:

துணிவுக்கு இங்கேன் பஞ்சம்?

பிறக்கும் பொழுதே மருத்துவ மனைகளில்
பிடுங்கத் தொடங்குது லஞ்சமடா—அந்த
இரக்கம் இல்லாக் கொடுமையை நினைத்தால்
எரியுது வயிறும் நெஞ்சமடா!

படிக்கச் சென்றால் கல்வி நிறுவனம்
பறிக்குது "நன்கொடை" லஞ்சமடா—அதைக்
கொடுக்க இயலார் நகரவைப் பள்ளிக்
கூடத்தில் அடைவார் தஞ்சமடா!

படித்து முடித்து வேலைக்கு முயலும்
பாதைகள் முழுதும் லஞ்சமடா—நமை
எடுத்து விழுங்க வாயைத் திறக்குது
எங்ஙனம் விழிகள் துஞ்சுமடா?

கடனை வாங்கிச் சுய தொழில் தொடங்கக்
காத்துக் கிடந்தால் லஞ்சமடா—வங்கி
நடையில் மறித்து பாதியைப் பறித்து
நயமாய்த் தீர்க்குது வஞ்சமடா?

"மாமூல்" என்றே காவல் துறையில்
மதிக்கப் பெறுவது லஞ்சமடா—சட்டம்
தாமே தவறிடம் சாய்ந்து கிடந்தால்
தண்டனைக் கெப்படி அஞ்சுமடா?

சிறப்புத் தமிழால் "கையூட்" டெனவே
செப்பப் படுவது லஞ்சமடா—பை
நிரப்பும் தொழிலாய் அதனைப் பணிந்தே
நீதியும், தர்மமும் கெஞ்சுமடா!


இறந்த பிறகும் சுமந்து சென்று
எரிக்கும் இடத்திலும் லஞ்சமடா—மடி
கறந்த பிறகே சிதையில் வெந்து
கட்டையின் சாம்பல் மிஞ்சுமடா!

கருவறை முதலாய்க் கல்லறை வரையும்
காண்கிற எங்கும் லஞ்சமடா—தினம்
துறைதொறும் நிழலாய்த் தொடர்வதை ஒழிக்கும்
துணிவுக்கு இங்கேன் பஞ்சமடா?

— தளவை. இளங்குமரன்







மக்களுக்கு மொட்டை அடிக்கிறார்கள்!



● ஓர் ஏழைத்தாய், இடுப்பில் ஒரு குழந்தையுடன் தளர்நடை போடும் மற்றொரு குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு உச்சி வெயில் வேளையில் வீதி வழியே சென்று கொண்டிருந்தாள். கனன்று கொண்டு தெருவில் கிடந்த ஒரு சிகரெட் துண்டின் மீது காலை வைத்து விட்டது, நடந்து கொண்டிருந்த குழந்தை. நெருப்பின் சூடு தாக்க, குழந்தை அலறித் துடித்துக் கீழே விழுந்தது. காலணிக்கு ஏழைகள் எங்கே போவார்கள்? இக்காட்சியைக் கண்ட நான் ஓடிப் போய் குழந்தையைத் தூக்கிக் கையிலெடுத்து, அதன் பாதத்தில் என் பேனாவிலிருந்த மையை எடுத்துத் தடவினேன். புகைப்பவர்கள் புகைத்தபின் சிகரெட் துண்டிலுள்ள நெருப்பை முழுதுமாக அணைத்துத் தெரு ஓரத்தில் போடலாமே. செய்வார்களா?

– க. மாரியப்பன், கோயமுத்தூர் – 11.

● சென்னையில் பெரும்பாலான ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிக்காகப் போடப்பட்டிருக்கும் சிமெண்ட் பெஞ்சுகளை நாடோடிக் கும்பல்களும், ரயில் நிலையங்களுக்கு அருகே வசிக்கும் குடிசைவாசிகளும் ஆக்கிரமித்துக் கொண்டு விடுகின்றனர். இதனால் பயணிகள் நின்று கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. சமயத்தில் பூ, பழம் விற்பவர்களும் ரொம்பவும் சுவாதீனமாக மேற்படி பெஞ்சுகளில் அமர்ந்து தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றனர். ரயில் நிலைய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, பயணிகளுக்கு உதவுவார்களா?

– டி. என். பாலகிருஷ்ணன்,
சென்னை – 91.

● என் வயது 68. ஒருநாள் மாலை ஏழு மணி அளவில் டிமான்டி காலனியில் "வாக்" போய்க் கொண்டிருந்தேன். ஒரு மாடு என்னை முட்டியது. மாட்டிற்கு பயந்து பின் வாங்கியதில் நடுரோடில் விழுந்தேன். ஒரு கார் வேகமாக வந்தது. சாலையில் நின்று பேசிக் கொண்டிருந்த ஒருவர் ஓடிவந்து காரை நிறுத்தி என்னைத் தூக்கினார்.

நடுரோடில் எங்கும் மாடுகளும் நாயும் உலாவுகிறது. ரோடு ஓரத்தில் நரகலும் சிறுநீரும். எங்கே நடப்பது? நம் நாட்டில் மட்டும்தான் இப்படி. இத்தனைக்கும் நாங்கள் கிரீன்வேஸ் சாலையில் – மந்திரிகள் வசிக்கும் வீடுகளுக்கு எதிரில் இருக்கிறோம். சாலை பூராவும் பொதுக் கழிப்பிடம்.

– கமலா சீனிவாசன், சென்னை – 28.

● கடந்த மாதம் ஒருநாள் திருச்சியிலிருந்து செங்கல்பட்டுக்கு திருவள்ளுவர் பஸ்ஸில் டிக்கெட் வாங்கினேன். கண்டக்டர், ரூ. 44.50 வாங்கிக் கொண்டார். அந்த அளவுக்கு டிக்கெட் கிழித்துக் கொடுத்து விட்டார். 'திருச்சி – செங்கல்பட்டுக்கு டிக்கெட் ரூ. 39.50தானே கூடுதலாக ஐந்து ரூபாய் வாங்கியுள்ளீர்கள்... ஏன்' என்று கேட்டேன். 'டெப்போவில் போய்க் கேளுங்கள்' என்றார். அங்கே கேட்ட போது தகுந்த பதில் சொல்லவில்லை. ஆனால் அங்கு நின்ற ஒருசில டிரைவர், கண்டக்டர்களைக் கேட்ட போது இந்த ரூபாய் ஐந்து 'உலகத் தமிழ் மாநாட்டு செலவை சரிக்கட்ட' என்றும் வேறு சிலர் முதல்வர் வளர்ப்பு மகன் திருமண செலவுக்கு ஈடுகட்ட என்றும் சொன்னார்கள். எது எப்படியோ – தமிழ்நாட்டு மக்கள் தலை மொட்டையடிக்கப்படுவது மட்டும் உண்மை.

ஒரு சர்வாதிகார நாட்டில் நடப்பது போல இப்படியா 'தண்டல்' வசூலிப்பது?

– சிற்பி சோமு,
புதுக்கோட்டை – 1.

குமுறல் குமுறல் குமுறல் குமுறல் குமுறல்

சமூகப் புரட்சிக்குக் கட்டியங்கூறும் கவர் ஸ்டோரி!

வட்டமேஜை

✉ "வறுமை ஒழிப்பா, வரிப்பணச் சுரண்டலா?" தலையங்கம் படித்தேன். தற்சமய உதவிகள் என்பது எப்போதுமே நிரந்தர பயனைத் தந்து விடாது. ஆனால், நம் மத்திய அரசும் சரி, மாநில அரசுகளும் சரி... தனக்கும், தன் கட்சிக்கும் பெயர் கிடைக்க வேண்டும் என்ற அற்ப சுயநலம் காரணமாக கவர்ச்சியான உதவிகளைச் செய்து மக்களை மயக்குகின்றன. தொழிற்சாலைகள், சிறு தொழில் உதவிகள், புதுத் தொழில்கள் என்று உருவாக்கினால் வறுமை ஒழிவதோடு இந்திய நாட்டில் தொடர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற வெறியாட்டமும் ஓயும்!

ஏத்தாப்பூர், செவேகா.

ரூ 20 பரிசு பெறும் கடிதம்

✉ "சாதாரணமாக ஒருவர் அரசு வேலையில் சேர வேண்டுமானால் அவர் அனைத்து தகுதிகளும் பெற்றிருந்தால் கூட, கடைசியாக, 'Police verification' என்ற ஒன்றில் தேறியாக வேண்டும். அதாவது அந் நபர் மீது வழக்கு ஏதும் இருக்கிறதா? அவரின் நடவடிக்கை எப்படி? குற்றவாளி யாருடனாவது தொடர்பு உண்டா? போன்ற கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட நபரின் ஊரில் உள்ள 'காவல் நிலையத்தில்' இருந்து வரும் பதில் 'திருப்தி'கரமாக இருந்தால் மட்டுமே அவருக்கு அரசு வேலை உண்டு. இப்படி ஒரு சட்டம் இருக்கையில் 'வழிப்பறி' வழக்கு ஒன்று நிலுவையில் இருக்கும் ஆதிராஜாராமுக்கு 'பால்வள நிறுவன தலைவர்' பதவியைக் கொடுத்துப் புரட்சி செய்ய 'புரட்சித் தலைவி'யால் மட்டுமே முடியும்.

ஏரல், அ. நந்தகுமார்.

✉ ராஜன் ஸ்ரீனிவாஸ் எழுதிய "ருதா" என்ன அருமையான சிறுகதை! படித்த எங்கள் நெஞ்சம் நிறைந்து விட்டது. இது போன்ற சிறப்பான சிறுகதைகளை கல்கி ஒன்றுதான் தர முடியும்.

பம்பாய் – 19, ஜான் சாமுவேல்.

✉ மாகரல் கிராமத்துப் பெண்கள் படையும் ரிப்பன் பில்டிங் ஊழல் பற்றிய செல்லகுமார் ரிப்போர்ட்டும் மிக அருமை. சாராய ஒழிப்புக்காகத் தமிழகமெங்கும் பெண்கள் படை அமைக்கப்பட வேண்டும். ஒரு 'மாகரல் உணர்வு' தமிழகமெங்கும் ஒரு தொண்டுணர்வாக – கடமையுணர்வாக – ஏன் சுதந்திர உணர்வாகப் பரிணாம வளர்ச்சி பெற்றால் சாராயத்தை ஒழித்துப் பொது மக்களைக் காப்பாற்றிய பெருமை மட்டுமல்ல; போலீசுக்கு மாமூல் கிடைக்காமல் செய்த பெருமையும் கிடைக்கும். போலீஸ் திருந்தாவிட்டாலும் அதைத் திருத்த பெண்கள் எடுத்துக் கொண்ட முயற்சி போலீசுக்கும் ஏன் இந்தப் பெண் முதல்வருக்கும் கூட ஒரு பாடமாக அமையலாம் அல்லவா! வளர்க உமது சமூகப் பணி!

அரியலூர், அ. சிங்காரவேலு.

✉ புரட்சிக்குச் சொந்தக்காரர்கள் படித்தவர்கள் மட்டும்தானா? கிராமத்துப் பெண்கள் புயலென புறப்பட்டு, அதிலும் ஒரு பெண் சாராய வியாபாரியை எதிர்த்துப் போர்க்களத்தில் குதித்திருப்பது வியக்க வைத்தது. கவர் ஸ்டோரி, மாறி வரும் சமூகப் புரட்சிக்குக் கட்டியம் கூறியது.

பரமக்குடி, பா. உஷாராணி.

✉ ரகசிய போலீஸ் படத்தில் கவுண்டமணியை மட்டும் வில்லனாகச் சித்திரிக்கவில்லை. படத்தைப் பார்த்த நாங்களும் 'நறநற' வென்றுதான் இருக்கிறோம்!

சேலம்–9, மு. இரவிச்சந்திரன்.

✉ எம்.ஏ. சுசீலாவின் 'இருவேறுலகம் இது வென்றால்...' போட்டிக் கதை, கலை உலக நிலைமைகளைக் கண் முன்னே நிறுத்துகிறது. 'நான் கொண்டு வர்ற காசு, கலைப்பிரியனின் கலைப் பயணம் கடனில்லாமல் முடிக்கிறதுக்காச்சும் உதவட்டும்' என்ற கடைசி வரியைப் படித்த போது கண்கள் கலங்கி விட்டன!

பொறையாறு, கானா. கணேசன்.

✉ கோமலின் இழப்பு நிஜமாகவே – பெரியது தான். சென்ற வருடம் கோவையில் அவர் முன்னின்று நடத்திய நாடக விழாவில் கலந்து கொண்ட போதுதான் அவரின் தன்னம்பிக்கை மிகுந்த செயல்பாடுகளை உணர முடிந்தது. அப்படி ஒரு கலா ஆர்வம் மிக்க மனிதர் கிடைப்பது அரிது!

பூலாங்கிணறு, ஜானகிராஜன்.

✉ ஆர். வெங்கடேஷின் 'சந்தர்ப்பக் கைதிகள்' கதை லட்சோபலட்சம் வெளிநாட்டு இந்தியர்களின் மனவெளிப்பாடு. இங்கு குடும்பம், தாய் தந்தை, குழந்தைகளை விட்டு விட்டு ஏதோ ஒரு நாட்டில் அடிமை வாழ்வு வாழ்ந்து, ஏச்சுக் கும் பேச்சுக்கும் கவலை கொள்ளாமல் பணம் ஒன்றே குறி என்று இருக்கும் நம்மவர்களுக்கு ஒரு பாடம்.

தஞ்சாவூர், கே. சிவசுப்ரமணியன்.

✉ 'சந்தர்ப்பக் கைதிகள்' சிறுகதை சிறப்பாக இருந்தது. ஆனால் அதே நேரத்தில் முன்பக்கம் வெளியான 'சுருக் நறுக்'–5 போட்டிக்கு அந்தப் பகுதியை அனுப்புவதால் அந்தச் சிறுகதையைப் பாதுகாத்து வைக்க முடியாத சூழ்நிலைக் கைதியானேன்.

சென்னை – 23, ஏ. எஸ். சிவம்.

வரும் சட்டமன்றத் தேர்தலில் ஒரு வெற்றிக் கூட்டணியை உருவாக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஆர்.எம்.வீக்கு இப்போது பல விஷயங்களை வெளியே சொல்ல முடியாத நிலை. இருந்தாலும் கல்கியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் பேட்டியளித்தார்....

“உங்களுக்குள்ள அரசியல் அனுபவத்துக்கும் சீனியாரிட்டிக்கும், நீங்கள் பல அவமானங்களைத் தாங்கிக் கொண்டு ஜெயலலிதாவின் அமைச்சரவையில் இருந்தது ஏன்?”

“1984-ல், புரட்சித் தலைவர் இந்தியாவில் இல்லாத சூழ்நிலையில், கட்சி வெற்றி பெற பாடுபட்டேன். 1988-ல் கட்சியைப் பிளக்க நான்தான் காரணம் என்றார்கள். இப்போது ஒன்று சொல்கிறேன்... அப்போது நான் முதல் நிலைக்கு வரக்கூடாது என்று விரும்பிய கூட்டம்தான் ஜானகி அம்மையாரை முதல்வராகக் கொண்டு வந்தது. நான் அந்த அம்மையாரை முதல்வராகக் கொண்டு வரவில்லை! எனக்குச் சம்பந்தமில்லாமலேயே ஜானகி அணி என்ற அ.தி.மு.க. பிளவு நடந்து முடிந்து, பின்னர் ஜெயலலிதாவோடு இணைந்து கொண்டது. அப்போது கூட இணைவதில் அவசரம் காட்ட வேண்டாம் என்றவன் நான்.

“இணைந்த பிறகு எனக்குக் கட்சிப் பதவி கொடுப்பதில் கூட அவமானப்படுத்தினார்கள். என்னை இணைச் செயலாளர் என்று போட்டு, எனக்கு மேல் எஸ்.டி.எஸ்ஸை மூத்த இணைப் பொதுச் செயலாளராகப் போட்டார்கள் இருப்பினும் பொறுமை காத்தேன். ஏன்? ஒரு கட்சியோடு கமிட் ஆயிட்டோங்கற நிலைதான் காரணம். இது தவிர என்னை நம்பி, என் ஆதரவாளர்கள் ஏகப்பட்ட பேர் இருக்கிறார்கள் நான் அமைச்சராக இருப்பதால் அவர்களுக்கும் ஒரு மரியாதை. இதுதான் எனது பொறுமைக்குக் காரணமாக இருந்தது.”

“சமீபத்தில் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டபின் நீங்கள் நினைத்தது போல் தான் அரசியல் நடப்பு செல்கிறதா?”

“ரஜினி அவர்களின் வெடிகுண்டு கலாசாரம் பற்றிய பேச்சால், நான் மீண்டும் முன்னணிக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன். ரஜினி என்னைச் சந்தித்ததைக் கூட பொறுக்க முடியாமல் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கினார் ஜெயலலிதா. Infact இவ்வளவு long innings க்கு பிறகு நான் ஓய்வு பெறும் மூடில்தான் இருந்தேன். ஆனால் அந்தம்மா என்னிடம் ராஜினாமாக் கடிதம் வாங்கி வைத்துக் கொண்டு. டிஸ்மிஸ் செய்தது என்னை வழக்கத்துக்கு மாறாகச் செயல்பட வைத்தது; என் பணி தேவைப்படுகிறது என்பது புரிந்தது. இருப்பினும் தனிக் கட்சி துவங்குவதில் எனக்கு உடன்பாடில்லை. இனி துவங்கவும் மாட்டேன்.

“ரஜினிகாந்த் என்ற தனிப்பட்ட மனிதருக்குள் நாட்டுச் சூழ்நிலை ஏற்படுத்திய பாதிப்புகள் எனக்குத் தெரியும். ஆனால் அவர் professional அரசியல்வாதியல்ல. அவர் அப்படி மாற நினைத்தவருமல்ல! இருந்தாலும் ஜெயலலிதா அரசை வீட்டுக்கு அனுப்பும் மாபெரும் சக்தியாக அவரை மாற்றும் முயற்சியில் நான் ஈடுபட்டிருந்தேன். அதன் முதல் கட்ட வெற்றிதான் இந்த அரசைப்




ரஜினி-காங்கிரஸ் துணையோடு இந்த அராஜக சக்தியை வீழ்த்திக் காட்டுவேன்!

பற்றிய தமது கடுமையான கருத்தை அவர் சொன்னது. பின்னர், பிரதமர் சந்திப்பு என்று நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. நாடு முழுவதும் எதிர்பார்க்கும் ஒரு சக்தி அப்படியே மக்களுக்குக் கிடைத்து, ஒரு அராஜக சக்தி வீழ்த்தப்பட்டு, நல்லாட்சியைக் கொண்டு வர வேண்டும் என்ற நினைப்பில்தான் நான் செயல்படுகிறேனே தவிர, கல்கியின் கூற்றுப்படி (பார்க்க சென்ற இதழ் கேள்வி – பதில் பகுதி) ஆர்.எம்.வீ. அண்ட் கோவுக்கு லாப-நஷ்ட கணக்குப் பார்த்து நான் செயல்படவில்லை."

"அமலாக்கப் பிரிவு, சி.பி.ஐ. மற்றும் வருமான வரித் துறை அதிகாரிகள் ஜெயலலிதா, மற்றும் சசிகலா குடும்பத்தாரின் மீது எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"இந்த நடவடிக்கைகளின் துவக்க கட்டத்தில், ஜெயலலிதாவை அழுத்தி, கூட்டணிக்குக் கொண்டு வரவே இந்த நடவடிக்கைகள் என்ற பேச்சு இருந்தது.



ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. எடுத்த நடவடிக்கைகளை, முற்றுப் பெற வைத்து, தவறு செய்தவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தந்தே ஆக வேண்டும் என்ற அளவில் நிலைமைகள் இருக்கின்றன."

"உங்கள் பக்கம் வந்து விடப் போகிறார்களே என்ற கவலையில், பழைய விசுவாசிகளுக்கு கட்சிப் பதவிகள், கட்சிக்காரர்களுக்கு அரசியல் பதவிகள் என்று வாரி வழங்கிக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவால், கட்சியைக் காப்பாற்ற முடியுமா?"

"பதவி, மரியாதைகளைக் கொடுப்பதன் மூலம், கட்சிக்காரர்கள் தம்முடன் இருப்பார்கள் என்று ஜெயலலிதா கருதுவாரானால் அவரது மமதை வீழ்ச்சியடையும். நியாயமான காரணங்களுக்காக அல்லாமல், சந்தர்ப்ப வசத்தால், ஒரு பேரம் போல் பதவி கொடுக்கப்படுகிறது என்பது பெற்றுக் கொள்பவருக்கும் தெரியும். ஜெயலலிதாவின் இந்தச் செய்கைகள் தலைவலிக்குத் தைலம் தடவுவது போலத்தானே தவிர உண்மையான காரணத்தைக் கண்டு, சிகிச்சை தருவது போலல்ல."

"இப்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளின்படி நோக்கினால், பொதுத் தேர்தலில் நான்கு முனைப் போட்டி என்பது தவிர்க்க முடியாததாகி விடும் போலிருக்கிறதே! இது ஆளும் கட்சிக்கு (அ.தி.மு.க.) சாதகமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறதே!"

"நீங்கள் சொல்வது சரிதான். இன்றைய சூழலில் நான்கு முனைப் போட்டி தவிர்க்க முடியாததாகி விடும் என்று கருதுகிறேன். ஆனால் எம்.ஜி.ஆர். சக்திகளும், காங்கிரஸும் இணைந்த கூட்டணிக்கு ரஜினி என்ற சக்தி பின்னணியில் இருக்கிறது. அதைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தீர்களானால், 'ஆளும் கட்சிக்கு வெற்றி வாய்ப்புக் கிடைக்காது' என்ற பதில் சுலபமாகக் கிடைத்து விடும்."

"ஒரு பக்கம் எம்.ஜி.ஆர். மன்றங்களும் ரஜினி மன்றங்களும் ரஜினிதான் முதல்வராக வர வேண்டும் என்று விரும்புவதாகவும் காங்கிரஸ் தரப்பில் எந்தத் தலைவரையும் முன்னிலைப்படுத்தி பிரசாரம் செய்யக் கூடாது என்றும் சொல்வதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. எம்.ஜி.ஆர். மன்றங்கள் – ரஜினி ரசிகர்கள், காங்கிரஸ் என்று மூன்று தரப்பையும் சங்கடப்படுத்தும் செய்திகளும் வரத் துவங்கியிருக்கின்றனவே?"

"தொகுதி உடன்பாடு, சின்னங்கள் தகராறு, முதல்வர் பிரச்னை என்று எத்தனை ஆயிரம் பிரச்னைகள் வந்தாலும், அவற்றையெல்லாம் சமாளித்து, ரஜினி என்ற சக்தியும் எம்.ஜி.ஆர். மன்றங்களும் காங்கிரஸோடு கூட்டணி அமைத்து இந்த ஆட்சியை வீழ்த்திக் காட்டும். இதில் எந்த மாற்றமும் இல்லை, இருக்காது என்பதை சகலமானவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்."

சந்திப்பு : **ப்ரியன்**

படம் : **யோகா**

மோகனரங்கன் அவசரமாய் உள்ளே நுழைய –

"லேட்டோ?" என்றார் பாபுஜி வாசனைப் புகையிலை மணக்க.

"இன்னிக்கி 'எடிட்டோரியல் மீட்டிங்' தெரி மோல்லியோ?" என்றார், மறுபடி.. "யார் இந்த வாரம் 'கவர் ஸ்டோரி' பண்ணப் போறது?"

"நான்தான்" என்றான் மோகனரங்கன்.

"சொல்லு..." என்றபடி சிறிது வாசனைப் புகையிலையைக் கசக்கி நெல்லிக்காய் அள வாய் கடைவாயில் திணித்துக் கொண்டார்.

"மயிலாப்பூர்ல ராமலிங்கம்னு ஒருத்தர். 'ரிடையர்' ஆன ஆசிரியர். எட்டு வருஷமா பென்ஷன் கிடைக்காம போராடிக்கிட்டிருக் கார். காரணம் என்ன? அரசாங்கத்தோட மெத் தனப் போக்கு, பின்னணி என்னங்கிறதைப் பத்தி விரிவா விசாரிச்சு எழுதியிருக்கேன். அட் டையில அவர் 'ஃபோட்டோ' போட்டு..."

"இதானா?"

"ஆமாம்..." என்றான் தயக்கமாய்.

"மசால்வடை மடிக்கவா பத்திரிகை நடத்த றோம்?" என்று உரக்கச் சொல்லி விட்டு அனை வரையும் நிதானமாய்ப் பார்த்தார். லேசாய் ஒரு நமுட்டுச் சிரிப்பு அனைவரிடமிருந்தும் கிளம்பி அடங்கியது. பின் இறுக்கமாய் ஒரு மௌனம்.

"எத்தனை நாளைக்கு 'பென்ஷன்' வாங் காதவன், ரேஷன் கிடைக்காதவன்'னு எழுதிக் கிட்டு இருக்கப் போறோம்.. இதை எழுதத்தான் நிறைய பேரு இருக்கானே இப்ப... ஏதாவது வித்தியாசமா... அட்டையில கண்டி இழுக் கணும்.. அத மாதிரி 'மேட்டர்' வேணும் எனக்கு. இந்த சீர்கெட்ட சமுதாயத்தைப் பிரதி பலிக்கணும். அது இங்க மயிலாப்பூர்லயும், மவுண்ட்ரோடுலயும் சுத்திட்டிருந்தா கிடைக் காது. மோகனரங்கன்... ஒண்ணு செய்யி.. இன் னிக்கே தஞ்சாவூர் புறப்படு. அங்கயிருந்து 22 கி.மீ. கள்ளப் பெரம்பூர்... சின்ன வளமையான கிராமம். அங்க 'காசிலிங்கம்'னு ஒரு மிராசுதார். ஊரையே வளைச்சுப் போட்டுக்கிட்டு அடிதடி பண்றானாம்.... அவன் ஜாதகத்தோட, ஆனா எல்லாத்துக்கும் ஆதாரத்தோட வா... இன் னிக்கு திங்கள். மூணு நாள் 'டைம்' உனக்கு.. வெள்ளிக்கிழமை ரிப்போர்ட் என் 'டேபிள்'ல இருக்கணும்..."

எழுந்து போய் விட்டார்.

மோகனரங்கனுக்கு மூச்சை அடைத்தது. பாபுஜி அப்படித்தான். இருபத்தைந்து வருட மாய் பத்திரிகைத் துறையில் ஊறியவர். நிறைய அடிபட்டவர். 'செந்தாமரை' என செந்தமிழ்ப் பெயரில் பத்திரிகை ஆரம்பித்து, 'இலக்கிய வளர்ச்சி'யில் பெரும் பங்கு வகித்தார். பெருத்த நஷ்டம் வந்தது. பின் தற்போதைய நிலவரம் புரிந்து கொண்டு 'க்ரைம் ரிப்போர்ட்டர்' என 'தமிழில்' இதழ் துவங்கி நாட்டில் நிலவும் அநி யாயங்களை, அக்கிரமங்களை துகிலுரித்தார். அரசியல்வாதிகளுக்கு சிம்ம சொப்பனம். எல்லாவற்றிலும் வேகம் எதிர்பார்ப்பார். புயல் வேகம்.

கள்ளப் பெரம்பூரில் இறங்கும் போது மோகனரங்கன் லேசாய் சாயம் போன அழுக்கு லுங்கியும், 'ரஜினி' படம் போட்ட பச்சை பனியனும் அணிந்து கொண்டு பீடி பிடித்துக் கொண்டிருந்தான்.

மக்களோடு மக்களாய்க் கலந்தான். வயல் காட்டில் நடந்தான். நிறைய பேரோடு பேசி னான். எந்தச் சூழ்நிலையிலும் தன்னை அடை யாளம் காட்டிக் கொள்ளவில்லை. முதலில் ஒரு பட்டியல் தயாரித்துக் கொண்டான். காசி லிங்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல். மிக மோசமாக பாதிக்கப்பட்டது யாரென்று ஆராய்ந்ததில் 'ராஜாத்தி அம்மாள்' எனத் தெரிந்தது. வயதான விதவை.

ராஜாத்தி அம்மாள் மரக்கலரில் கதர்ப் புடைவை கட்டிக் கொண்டு பொட்டில்லாமல் கண்களில் நிறைய சோகங்களை தாங்கிக் கொண்டிருந்தாள். அவனிடம் மட்டும் உண்மை யைச் சொன்னாள். பேசவே மறுத்தாள். காசி லிங்கத்தின் விதி விரைவில் தீர்மானிக்கப்பட்டு விடும் என நிதானமாய் எடுத்துச் சொன்னாள்.

"எம்பையனும் காசிலிங்கத்தோட பொண் ணும் ரொம்ப நாளாவே ஒருத்தரையொருத்தர் விரும்பியிருக்காங்க. யாருக்கும் தெரியாது. காசி லிங்கம் காதுக்கு விஷயம் போனது. விடு வானா? அவன் மலைன்னா நாங்க மடுவு. போன குறுவை அறுப்பு நேரம். அறுப்புக்குப் போயிட்டு வந்து சாயந்திரம் 'காப்பி போடு'ம் மான்னு சொல்லிட்டு... ஆறு மணி இருக்கும்... புள்ள சித்த அப்படியே திண்ணையிலே படுத் திருந்தான். காசிலிங்கம் கூப்பிடறாருன்னு ரெண்டு பேரு வந்தானுங்க. அப்ப போனவன் தான்யா... இன்ன வரைக்கும் அவன் மூஞ்சியக் கூட பாக்க முடியலய்யா..." உடைந்து போய் கேவல் வெளிப்பட்டது. புடைவைத் தலைப் பால் வாயைப் பொத்திக் கொண்டாள். 'இனிமே கேக்காத' என்பதாய் சைகை செய்யத் தான் முடிந்தது அவளால்.

உள்ளேயிருந்து ராஜாத்தி அம்மாளின் பெண் – அதே முகவார்ப்பு வந்தது. ஆனால் நிதானமாய் பேசியது.

"மம்பட்டிக் கூழியால அடிச்சிருக் காங்க. ரெண்டே அடிதானாம் மண்

எஸ். பாலகுமார்

க்ரைம் ஸ்பாட்



கடையில. உயிர் ப்போயிடுச்சாம. அய்யனார் தோப்பிலதான் புதைச்சிருக்காங்க. புதைச்ச இடம் வேணா காட்டறேன் வாங்க...''

''இவ்வளவு நடந்தும் ஏன் போலீஸுக்குப் போகலை??''

''என்னை ஏதாச்சும் பண்ணிடுவேன்னு மிரட்டினாங்க. அம்மாதான் வேணான்னுடுச்சு. ஆனா ஊருக்கே தெரியும்...''

''ஊரால யாரும 'ஸ்டெப்' எடுக்கலயா?''

''எப்படி? எல்லாரும் அவர் நிலத்தில வேலை செய்யறவங்கதான்... சுத்து வட்டார இடமும் வளைச்சுப் புடிச்சிட்டாரு...

மோகனரங்கன் எழுதக் கூட மறந்து உணர்ச்சிவசப்பட்டுப் போனான்.

'' 'நாங்க சொன்னோம்'னு தெரிய வேணாம் சார்... எங்க பேரெல்லாம் போட்றாதீங்க...

ஆனா நல்லா எழுதுங்க..."

"அந்தப் பொண்ணு... அதான் காசிலிங்கம் பொண்ணு..."

"புவனாவா? அண்ணனைக் கொன்ன மறு நாளே அரளி விதை அரைச்சுக் குடிச்சுட்டு செத்துப் போயிட்டா..."

"காசிலிங்கம் 'போட்டோ' ஏதாவது கிடைக்குமா?"

எங்கோ யார் வீட்டுக்கோ ஓடி ஒரு தூசி படிந்த ஃபோட்டோ கொண்டு வந்தது.

"கோயில் திருவிழாவில எடுத்தது. அவர் தான் கோயில் தர்மகர்த்தா..."

கறுப்பு வெள்ளையில் தலையில் பூக்கிரீடம் அணிந்து மையத்தில் சிரித்துக் கொண்டு காசி லிங்கம்... கிராமத்து அரக்கன். ராஜாத்தி அம்மாள் மகன் புதைத்த இடம் புகைப்படம் எடுத்துக் கொண்டான். காசிலிங்கத்தின் பினாமி நிலங்கள் வைத்திருப்போர் விவரம் சேகரித்துக் கொண்டான். அவன் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்கள், அதனால் பாதிக்கப்பட்டோர் விவரம்.. வேண்டிய புகைப்படங்கள், பேட்டிகள்.

கிளம்பும் போது ராஜாத்தி அம்மாள் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"எங்களைக் காட்டிக் குடுத்திறாதய்யா..."

பாபுஜி "பர்ஃபக்ட்" என்றார்.

தோளில் தட்டிக் கொடுத்தார். "இதான் ஸ்பீடு!"

'ஒரு வாரம் லீவ், "என்ஜாய்!"

பெரிய விடுதலை!

ஞாயிறு.

அறை ஜன்னல் வழியே 'ஹிண்டு'வும் 'க்ரைம் ரிப்போர்ட்டரும்' விசிறியடிக்கப் பட்டன. அவசரமாய் 'க்ரைம் ரிப்போர்ட்டரை' புரட்ட அட்டையில்... 'எட்டு வருடமாய் பென்சனுக்காகப் போராடும் ஆசிரியர்...' 'என்னாயிற்று? மூன்று நாள் உழைப்பு. அசுர உழைப்பு. உள்ளுக்குள் கோபம் குமைந்தது. ஒரு வேளை அடுத்த வாரமோ?'

பாபுஜி தோளில் தட்டினார். "அமைதியா இரு..."

"எல்லாரையும் முட்டாளாக்கிட்டீங்களே சார்..."

"நம்ம பத்திரிகையோட வார வருமானம் எவ்வளவு தெரியுமா? ஒன்றரை லட்சம் ரூபா.. காசிலிங்கத்தோட பேசினேன். எல்லா ஆதாரமும் சொன்னேன். நாலு லட்சம் தர்றேன்னான்."

"அப்ப நான் எழுதிக் கொடுத்த ரிப்போர்ட்?"

"அப்பவே கிழிச்சுப் போட்டுட்டனே..."

"உயிரைக் கையில புடிச்சிக்கிட்டு உண்மையைச் சொன்ன அந்த ஜனங்க, என் உழைப்பு..."

"இத பாரு மோகனரங்கன்! நான் 'பிராக்டிகலா' பேசற ஆளு... எவ்வளவு வேணுமோ சம்பளமா வாங்கிக்க. யங் பிளட்! அப்படித் தான் இருக்கும். தவிரவும் 'இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிசத்தோட' இன்னொரு பக்கமும் உனக்குத் தெரியணும். இல்லையா...?"

'எங்களைக் காட்டிக் குடுத்திறாதய்யா...'

மோகனரங்கனுக்குக் கொஞ்ச நேரம் சுவாசம் தடைப்பட்டு வந்தது.



காதலன் ஹிட்லர்!

ஹிட்லர் மீது பல பெண்கள் காதல் கொண்டு கடிதங்கள் எழுதியதுண்டு. இவற்றில் சுமார் 10,000 கடிதங்களை ஜெர்மனியில் பிறந்த அமெரிக்கரான வில்லி எம் கெக் காப்பாற்றி வைத்திருக்கிறார். இவற்றை வெளிப்படுத்தினால் எழுதியவர்களுக்கோ, அவர்கள் குடும்பத்தினருக்கோ தர்ம சங்கடம் ஏற்படக் கூடும் என்று இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்து ஐம்பது ஆண்டுகள் முடிந்ததை நினைவுகூரும் வகையில் இந்தக் கடிதங்களில் சில மட்டும் இப்போது புத்தகமாக வெளியிடப் படுகிறது.

நன்றி : ஃபெமினா


தகவல் : கிருஷ்ணவேணி ரங்கநாதன்


●● கேரளாவில் எங்கண்டியூர் என்னும் இடத்தில் ஒரு விஷயத்தில் பெண்கள் தங்கள் 'சமஉரிமையை' நிலைநாட்டியுள்ளனர். இது வரை கட்டட வேலைகளில் சித்தாள்களாக இருந்த பல பெண்கள் இப்பொழுது கட்டடம் கட்டும் மேஸன்களாக ஆகியுள்ளனர். சித்தாள் வேலையில் ரூ. 30, 40 சம்பாதித்தவர்கள் இன்று மேஸனாக ரூ. 100 முதல் ரூ. 150 வரை தினமும் கூலியாகப் பெறுகின்றனர்.

ஆரம்பத்தில் இவர்களைப் பார்த்துக் கிண்டல் செய்த ஆண்கள் இவர்களது வேலையின் சிறப்பைப் பார்த்து வாயடைத்துப் போய் உள்ளனர்!

ஆதாரம் : 'த வீக்'

தகவல் : எஸ். ஆலன்









'சுருக் நறுக்'என்றொரு சொல்லோவியம் — 7

தேர்தல் என்பது...

'எல்லா தேர்தல்களிலும் அரசியல்வாதிகள் ஜெயித்துவிடுகிறார்கள்; தோற்றுப் போவதெல்லாம் வாக்காளர்கள்தான்' என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள்.

நிஜத்தில் அப்படித்தான் நடக்கிறதா? தேர்தல் என்பது எப்படி இருக்கிறது அல்லது எப்படி இருக்க வேண்டும்? உங்களது 'சுருக் நறுக்' விளக்கத்தைக் கீழுள்ள கூப்பனில் எழுதி 4.12.95க்குள் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு விளக்கமும் ரூ.50 பரிசு பெறும். தவிர, இன்னும் 19 வாரங்களுக்குத் தொடரப் போகும் இப் போட்டியில் கலந்து கொண்டு, மிக அதிகமான முறையில் பரிசு பெறும் ஒரு திறமைசாலிக்கு ஒரு மெகா பரிசும் காத்திருக்கிறது!

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

-ஆர்.

தேர்தல் என்பது..

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

வீடு திரும்பும்போது இரவு ஒன்பதரை மணியாகி விட்டது.

"அப்பா தூங்கிட்டாரா?" என்றேன் கருணா விடம்.

இருமல் சப்தம் கேட்டது. அப்பா இன்னும் தூங்கவில்லை. அருகில் போனேன்.

"என்னப்பா.. வெந்நீர் வேணுமா?"

"பக்கத்துலயே வச்சிருக்கேன். அவர் உங்களுக்காகத்தான் காத்திருக்கார்," என்றாள்.

எனக்குள் பெருமூச்சு.

"அவசியம் போகணுமா?" என்றேன்.

சொன்ன பிறகுதான் உறைத்தது. அப்பாவின் முகம் கணங்கியது பார்த்தேன்.

"சரிப்பா... வாங்க..."

குனிந்து குழந்தையை அள்ளுவது போலக் கைகளில் ஏந்திக் கொண்டு நிமிர்ந்தேன். கருணா விலகி வழி விட்டாள்.

ஹால்.. வராந்தா... என்று கடந்து வாசலுக்கு வந்தேன். சாய்வு நாற்காலி போடப்பட்டிருந்தது. படுக்க விட்டேன். அப்பா முகம் குழந்தை போல் விகசித்தது.

ஒரு வருடமாய் இதே பழக்கம்.

கொஞ்சங் கொஞ்சமாய் கை கால்கள் சரிவர சுவாதீனமின்றித் தள்ளாடின.

முதலில் என்னைப் பற்றி நடந்தவர், பிறகு எனக்குக் குழந்தை போலானார்.

மாலையில் அவர் பொழுது போக்கே இதுதான். வாசலில் கொண்டு போய் அமர வைத்தால் இரண்டு மணி நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருப்பார்.

''இதுல என்னப்பா உங்களுக்குச் சந்தோஷம்' என்று நானும் கேட்டதில்லை; அவரும் சொன்னதில்லை.

"விஜி சாப்பிட்டாச்சா?" என்றேன் உள்ளே வந்து.

"ம்..."

"சரவணன்?"

"வர லேட்டாகும். முடிஞ்சா வருவேன். இல்லே ஃப்ரெண்ட்ஸ் வீட்டுலதான்னு சொல்விட்டுப் போனான்..."

பாபு தூங்கிவிட்டான். ஒன்றரை வயசு மழலையை இன்று கேட்க முடியாது. லேட்டாய் வருவதின் சாபம்.

தட்டில் கை அளைந்தபோது கருணாவின் அதட்டல் கேட்டது.

"சாப்பிடும்போது... என்ன யோசனை?"

"ப்ச்..."

"என்ன சொன்னாங்க... பையன் வீட்டுல?"

"அதேதான்... கொஞ்சங்கூட குறையாது...

ரிஷபன்



விஜி என்ன சொல்றா! இந்த பையனைத் தான் பிடிச்சிருக்காமா..." என்றேன்.

என் இயலாமை எனக்கே உறுத்தியது.

"அவ என்ன சொல்றது... நம்மால என்ன முடியுமோ... அதான்..."

"சரி. மோரை விடு. சாதம் வேணாம்..."

"தினசரி.. வெறும் மோரைக் குடிச்சால் எங்கேர்ந்து தெம்பு வரும்..."

"சரவணனுக்கு எதுவும் போஸ்ட் உண்டா?" என்றேன் மெல்லிய குரலில் எதிர்பார்ப்பு தொனிக்க.

"இ..ல்லை." கருணா உள்ளே போக தட்டிலேயே கைகழுவிக் கொண்டேன்.

வேலை தேடும் தம்பி... திருமண வயதில் தங்கை... நான் மட்டும் ஏன் அவசரப்பட்டு கல்யாணம் செய்து கொண்டேன்... இத்தனை கடமைகளை வைத்துக் கொண்டு. இனம் புரியாத எரிச்சல் என்மீதே எனக்கு. இதில் குழந்தை வேறு.

அளவுகோல்

வாசலுக்குச் சென்றேன்.

அப்பாவின் கவனம் என் மீது திரும்பியது.

"என்னடா... உள்ளே போகணுமா..."

"மணி பத்தாயிருச்சு.. பரவாயில்லே... இன்னும் அரை மணி இருக்கலாம்..."

"என்ன சொன்னாங்க?"

சொன்னேன் உணர்ச்சியற்ற குரலில்.

"வேற எடம் பார்க்கலாமா..." என்றார்.

"இதுக்கே ஆறு மாசமா அலைச்சல்... இனி அடுத்தது அமையணும்..." என்றேன்.

"சரி.. வா.. உள்ளே போகலாம்..."

எழுந்து அருகில் சென்று குனிந்தேன். கைகள் நடுங்கி இறுகு சரியாகப் பற்றின.

உள்ளே படுக்கையில விட்டபோது அப்பாவின் தளர்ந்த கை என்னைப் பிடித்துக் கொண்டது.

"ராஜா... மனசுத் தைரியத்தை விட்டுறாதேடா... உன்னால முடியும்..."

"அ..ப்பா.."

"கிழவனை வாசல்ல கொண்டு போய் விடறதுலயும்... திரும்பக் கொண்டு வரதிலயும் என்ன அவசியம்னு பார்க்கிறியா... நீ திடமா இருக்கியா... இல்லியான்னு வேற எப்படிடா நான் புரிஞ்சுப்பேன்... மனசு விட்டுப் பேசற ஸ்டேஜை நாம தாண்டிப் போயிட்டோமே. அப்பாகிட்டே எதுக்குச் சொல்லணும்னு நீ மறைச்சாக்கூட உடம்பு காட்டிக் கொடுத்துரும்டா. புரியுதா.. திடத்தை விடாதே... எதையும் சமாளிக்கலாம்..."

"அ..ப்பா.."

கால் மடங்கி அவர் மடியில் முகம் புதைத்தேன்.

"காவிரிக் கரையில்

அவர் ஒரு கடன்காரர். கொடாக்கண்டர். கடன் கொடுத்தவரோ விடாக் கண்டர். கெடுபிடி வசூலுக்காக வீட்டுக்கே வந்து நின்று விட்டார்.

கடன் வாங்கியவர் கலங்கவில்லை. "வீட்டில் அப்பா இல்லை" என்று பொய் சொல்லும்படி புத்திரனை அனுப்பினார்.

"அப்பா இல்லை என்று சொல்லச் சொன்னார்" என்று அசடு வழிந்தது அருமை மகன்.

"அதனால் என்ன. வருகிறவரை இருந்து பார்க்கிறேன்" என்று திண்ணையில் தூகதட்டி உட்கார்ந்து விட்டார் விடாக் கண்டர்.

எவ்வளவு நேரம் இப்படி உட்கார முடியும். எப்படியும் எழுந்து போகத்தானே போகிறார் என்று கொடாக்கண்டர் வீட்டுக்குள்ளேயே ஒளிந்து கொண்டார்.

கடன் வசூல் மன்னரோ நேரம் ஆனாலும் மசிவதாக இல்லை. கொஞ்ச நாளானாலும் இருந்து கடன் வசூலை முடிக்கும் நினைப்பில் துண்டை விரித்து ஹாய்யாகத் திண்ணையில் படுத்தே விட்டார். ஒரேயடியாகத் தூங்கினால் கடன்காரப்பயல் தப்பி ஓடுவானே என்று ஒரு கையைத் தூக்கித் தலைக்கு அண்டை வைத்த படி ஒருக்களித்தபடி, பாதிக் கண்ணை மூடிய படி கிடந்தார். உண்மையில் தூங்காமல் தூங்குவது போல் கிடந்தால், பயல் வெளியே வருகிற போது லபக் என்று ஒரு அமுக்கு அமுக்கி விடும் நினைப்பில் படுத்துக் கிடந்தார்.

நாம்தான் கடன்காரப் பயல். திருவரங்கத்துப் பாம்பணையில் பாதி விழி திறந்து படுத்துக்கிடக்கும் பரம் பொருளுக்கு நிறையவே கடன் பட்டு விட்டோம். பல ஜன்மத்துப் பாவ புண்ணியக் கடன் கணக்கில் இருந்து நழுவியோடும் நம்மை வசூல் பண்ண வந்த விடாக் கண்டரே இருவரங்கத் திருமால்!

இராமனுக்குப் பெருமான் என்று பெயர். அந்தப் பெருமானே பூஜித்து வந்ததால் பெரிய பெருமாள் எனப் பெயர் பெற்றவர் ஸ்ரீரங்கநாதர். விபீடணன் விரும்பிய காரணத்தால் இலங்கைக்கு எடுத்துப் போக இந்த அரங்கநாதனைத் தானம் தந்தார் இராமபிரான். ஆனால் வழியில் இந்த அரங்க மண்ணில் வைத்து இளைப்பாறி, வழிபாடு செய்து விட்டு இலங்கைக்கு எடுத்துப் போக விபீடணன் விரும்பிய போது நகர மறுத்தார் நாராயணர். கடல் கடந்து சிலைகள் போவது கடவுளுக்கே இஷ்டம் இல்லை போலும். காவிரியாறு வெள்ளம் பெருகும் போது கொள்ளிடமாகிப் பிரிந்து பாயும். இந்த இரு பிரிவுக்கும் இடையில் விளங்கும் திருவரங்கமே வைணவர்களின் கோயில்! திருமாலின் ராஜதானி.

கங்கைக்கும் காவிரிக்கும் கடும் கருத்து மோதல்! யார் புனிதர் என்று! எப்போதோ உலகளந்த திருவடியை நனைத்ததால் கங்கை புனிதம் என்று எல்லோரும் தீர்ப்பளிக்க, காவிரி கடும் தவம் புரிந்தாள். எப்போதும் திருவடி நனைக்கும் பேறு பெற்று - அரங்கநாதராம் திருமாலின் திருமுடி முதல் திருவடி வரை ஒரு நீர்மாலையாகிக் கிடக்கும் பேறு பெற்றாள். திருமாலைச் சுற்றி, ஒரு திருமாலையாகக் காவிரி கிடக்கும் காரணம் பற்றி, தமது திருமாலை என்ற பாசுரத்தில், 'கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபட்டு" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் கொண்டாடி மகிழ்ந்தார்.


இங்கு அரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கும் அழகே தனி. தென் திசைக்குத் திருமுகம். வட திசைக்கு முதுகு. மேற்கே தலை. கிழக்கே பாதம் என்று படுத்திருக்கிறார். விபீடணன் வேண்டிய தால் தென் திசை இலங்கை நோக்கிப்படுத்தார் என்பதால் -

'குடதிசை முடியை வைத்து
குணதிசை பாதம் நீட்டி
வட திசை பின்பு காட்டி
தென்திசை இலங்கை நோக்கி"

என்று அருளினார் ஆண்டவனில் ஆழ்ந்த ஆழ்வார்.

ஆனால் ஆழ்வாரில் ஆழ்ந்த உரையாசிரியர்களோ, தென்திசை நோக்கிய திருக்கோலத்துக்கு வேறு காரணம் கண்டார்கள். முரட்டுச் சமஸ்கிருதம் வழங்கும் வடதிசைக்கு முதுகு காட்டி, ஆழ்வார்களின் ஈரத்தமிழ் நடை போடும் தென்திசைக்கு முகம் காட்டினார் என்று அநுபவித்தார்கள். முதுகு காட்டுவதை விட முகம் காட்டுவதே மரியாதை என்பதால், தமிழுக்குத் தலை வணங்கும் பெருமாளாக இதனை உணர்ந்தனர். மதுர கவி ஆழ்வார் நீங்கலாக மற்றைய பதினோரு ஆழ்வார்களும் பாடிப் பரிசளித்த பதி இந்தத் திருவரங்கம். கடல் நிறக் கடவுள், எந்தை காவிரிக் கரையில் கைவைத்துப் படுத்ததே இந்தத் தமிழ்த் தாகம் தணிவதற்குத்தான்...

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் ராம காதையையும் அரங்கேறச் செய்து, அங்கீகரித்து மகிழ்ந்தவன் அரங்கன் என்பதும் பிரசித்தம்.



கடல்நிறக் கடவுள்”

சுகி. சிவம்

மேலும் தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தை ராகதாளங்கள் உடன் பாடி அபி நயம் பிடிக்கும் 'அரையர் சேவை' என்பது நாத முனிகளால் இத்தலத்தில் ஏற்பட்டதற்கும் கார ணம் அரங்கனின் தமிழ் ஆர்வம். மணவாள மாமுனிகள் என்ற மகானை, திருவாய் மொழிக்கு விளக்கம் சொல்லச் சொல்லி குருஸ் தானத்தில் உத்தரவு போட்டு, சீடனாய் இருந்து கேட்டவனும் அரங்கநாதன். அது மட்டுமா? வைகுந்த நாட்டில் இடம் பிடிக்க வேண்டும் என்றால் அரங்கநாதர் தேரின் வடம் பிடிக்க வாருங்கள் என்று கூவியழைத்த பிள்ளைப் பெருமான் ஐயங்காரின் கலம்பகம், அந்தாதி, திருவரங்க மாலைகளை அருந்தி மகிழ்ந்தவன் அரங்கநாதன்.

“அரங்கம் என்பது ஆற்றிடைக் குறையே” என்றபடி காவிரி, கொள்ளிட நதி களின் இடையே துருத்திய பகுதியே திருவரங் கம். ஏழு உலகங்களும் உடையவன் திருமால் என்பதற்காக ஏழு பிராகாரங்களை உடையது அரங்கம். ஏழு மதில்களும் அவனது ஆடைகள் என்று சொல்வதும் வழக்கம். அரங்கநாதரை ரங்கராஜா என்று அரச அம்சமாகவே அழைப் பர். பதுமான வெந்நீரில் திருமஞ்சனம் செய்து கொள்வார் ரங்கராஜா. இங்கு பிரணவாகாரத் தில் அமைந்துள்ள கருவறையில் பாம்பணை யில் பள்ளி கொண்டிருப்பவன் மூலமூர்த்தி. அவருக்குப் பொன் வேய்ந்த விமானம். உற்சவர் திருநாமம் நம்பெருமாள். அவர் ஸ்ரீதேவி, பூதேவியர் உடன் தங்க மஞ்சத்தில் எழுந்தருளு கிறார்.

இவர் தவிர, அரங்கநாயகி, உறையூர் சோழன் மகள் கமலவல்லி, குலசேகரன் மகள் சேர குலவல்லி, டில்லி பாதுஷாவின் மகள் துலுக்க நாச்சியார் ஆகியோரும் தேவியர். துலுக்கநாச்சியார் கோவிலில் வெண்ணெய்யும் ரொட்டியும் வடக்கத்தி பாணியில் பெரு மாளுக்கு நிவேதனம்! அத்தோடு அரங்கன் அழகில் தன் நிலை அழிந்து,

“... என்னரங்கத்து இன்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர்
கொப்பூழில்
எழுகமலப் பூவழகர்”

என்று மயங்கிச் சரிந்த மலர்க்கொடி ஆண் டாள் நாச்சியார் இன்னும் ஒரு தேவியாகிறார்.

'கவிதார்க்கிக சிம்மம்' எனக் கொண்டாடப் பெறும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அரங்களின் பாது கையில் தன்னை இழந்து பாதுகா சகஸ்ரம் பாடி மகிழ்ந்தார். எல்லாவற்றையும் விட ஸ்ரீ ராமாநுஜ மகரிஷியுடன் பெரும் தொடர்பு உடைய தலம் திருவரங்கம். இத்திருக்கோவில் நிர்வாகம் அவராலே செம்மை செய்யப் பட்டது. இராமானுஜரின் திருமேனி இன்றும் ஒரு மண்டபத்தில் இங்கே பாதுகாக்கப்படுவது தனிச் சிறப்பு. பரமபதம் எய்திய அவர் திரு மேனி பச்சைக் கற்பூரம் குங்குமப்பூ துணை யுடன் பாதுகாக்கப்படுகிறது! பிரம்மோற்சவம் நடைபெறும் பத்தாவது நாளில் உற்சவமூர்த்தி இந்த மண்டபத்திற்கு எழுந்தருளி திரும்பும் போது, தமது பாதங்களைக் கழுவிக் கொண்டு மூலஸ்தானம் திரும்புகிறார்.

மாசியில் தெப்போற்சவம், பங்குனியில் ஆதிப்ரம்மோற்சவம், சித்திரைத் திருநாள், வைகாசி வசந்தோற்சவம், சொக்கப்பனை கொளுத்தும் கார்த்திகைத் திருவிழா, அரங்க நாச்சியார் சந்நிதியில் புரட்டாசி நவராத்திரி, மார்கழியில் இராப்பத்து பகல் பத்து என்ற திருமொழி, திருவாய்மொழி, திருவிழாவும் வைகுண்ட ஏகாதசியுமாய் பூலோக வைகுந்த மான திருவரங்கத்தில் எப்போதும் திருவிழா தான். ஸ்ரீரங்கநாதர் உடன் அரங்க நாயகி ஊடல் கொள்ளும் உற்சவம் மட்டை அடித் திருவிழா அல்லது பிரணவ கலக உற்சவமாக நிகழ்கிறது!

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத சிறப் புடைய திருத்தலம் திருவரங்கம். இராமானுஜர், அவர் குரு பெரியநம்பிகள், ஆளவந்தார், குல சேகராழ்வார், திருப்பாணாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகிய மகான்கள் வாழ் வுடன் தொடர்புடைய ஞானபூமி இது. மாத்வர், கிருஷ்ண சைதன்யர், துளசிதாஸர், தியாகப்ரம்மம் போன்ற அருளாளர்கள் இந்த அரங்கனைக் கண்டு இதயநாதத்தை இசை யாக்கி அரங்கேற்றியுள்ளனர். எம்பெருமான் திரு உருவு கண்டு பாதாதிகேசமாகப் பாடிப் பாடி பரமபதமுக்தி பெற்றார் திருப்பாணாழ் வார்.

அரங்கனைச் சேவிக்க வந்த குலசேகர ஆழ் வாரோ இறைவனை வணங்கும் போது அங் குள்ள மணத்தூணைப் பற்றிக் கொண்டு வணங்க வேண்டும் என்று பாடிவைத்தார். இது என்ன வேடிக்கை. இருகைகூப்பி இறைவனை வணங்காமல் பெருமாள் கோயில் தூணைப் பிடிப்பது என்ன காரணமோ?

குலசேகரர் கேட்டதூண்... மணத்தூண். எதற்கு? இறைவன் கோயிலுள் சென்றதும் பக்தி வெள்ளத்தால் கால் தடுமாறும்... 'கடல் நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு உடல் எனக்கு உருகுமாலோ' என்றபடி உடல் உருகும். 'கண் சுழலும் நெஞ்சழியும்' என்பது பக்தர் அநுபவம். அப்போது விழுந்து விடாதபடி இருக்கப் பற்றுவதற்கு ஆழ்வார் தூண் கேட்டார்.


ஏன்? விழுந்தால் என்ன தவறு? கோவிலில் விழக் கூடாதா என்ற கேள்வி வருமே...! ஆழ்வார் விழுவது பற்றி வருந்தவில்லையாம். ஆனால் விழுகிற போது பெரு மாள் சந்நிதி நோக்கி கால்கள் நீண்டு விட்டால் மாபெரும் பாவம் வருமே என்று அச்சப் பட்டு மாயோனை மணத்தூண் பற்றி சேவிக்க விரும்பினார் என்று நயமாக உரை சொல்வது வழக்கம்.

மேலும் பெருமாள் கோவிலின் அவ்விரு தூண்கள் பரவாசுதேவரின் இருதிருவடிகள் என்பதால் திருவடித்தூண் என்பது வழக்கம். மறவாமல் அவற்றைப் பற்றிக் கொண்டு வணங்க விரும்பும் வகையில் -

"காயாம்பூ மலர்ப் பிறங்கலன்ன மாலைக்
கடியரங்கத் தரவணையில் பள்ளி
கொள்ளும்
மாயோனை மணத்தூணே பற்றி நின்று
என்வாயார என்று கொலோ வாழ்த்தும்
நாளே"

என்று குலசேகர ஆழ்வார் அருளிச் செய் தார்.

(தொடரும்)



CHROMEPET CULTURAL ACADEMY (Regd.)

3, Indira Gandhi Cross Street, Radhanagar Main Road,
CHROMEPET, MADRAS - 600 044. Phone : 402501

ஒரு வேண்டுகோள்!

குரோம்பேட்டை கல்சுரல் அகடமி 1969-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 25 வருடமாக பொது மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது. இசை, நாடகம், நாட்டிய நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது ஆன்மீக கதாகாலட்சேபங்கள், யக்ஞங்கள், ஹோமங்கள் மற்றும் சமஷ்டி உபநயனம், கல்யாணம், சஷ்டிஅப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது. ஜகத்குரு காஞ்சி ஆசார்யாள் இம்மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியது மட்டுமின்றி மூன்று முறை இங்கு தங்கி பூஜைகள் நடத்தி அருளாசி வழங்கியது பெரிதும் குறிப்பிடத்தக்கது. மேற்கண்டவாறு நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் கடும் வெயில், மழை, பனி இவற்றால் ஏற்படும் அசௌகர்யங்களைத் தவிர்க்க, இம்மண்டபத்தை ஒட்டிய திறந்த வெளியை ஒரு COVERED AUDITORIUM ஆக மாற்ற வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளோம். அதை செயலாக்க சுமார் பத்து லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. COVERED AUDITORIUM கட்ட மீண்டும் காஞ்சி ஆசார்யாளே அடிக்கல் நாட்டி அனுக்கிரகம் செய்தது நாம் செய்த பாக்கியமாகும். பொது மக்களும், அன்பர்களும் பொருளுதவி செய்து இந்த முயற்சியை திருவினையாக்க வேண்டுகிறோம். நன்கொடைகள் எந்தத் தொகையாக இருந்தாலும் கோரப்படுகிறது. அதே சமயம் ரூ.10,000/- நன்கொடையளிப்பவர்களின் பெயர் அரங்கத்தின் ஒரு தூணில் கல்வெட்டில் பொறிக்கப்படும். நன்கொடைக்கான காசோலை அல்லது டிராப்ட் **"குரோம்பேட்டை கல்சுரல் அகடமி"** என்ற பெயரில் எழுதப்பட்டு கிராஸ் செய்து அனுப்ப அன்புடன் விண்ணப்பிக்கிறோம்.

நிர்வாகிகள்

அன்புடையீர்,

அருள்மிகு ஸ்ரீ மூகாம்பிகை அம்மன் திருக்கோயிலுக்கு 13 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஜெகத்குரு காஞ்சி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆசியுடன் வரும் தைத்திங்கள் 21 ஆம் நாள் 4.2.96 ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் செய்ய நிச்சயிக்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தை அடுத்து கோயிலின் மண்டபத்தை விரிவுபடுத்தி ஸ்ரீ வினாயகர், ஸ்ரீ ஈஸ்வரன் (லிங்கம்) ஸ்ரீமுருகன், ஸ்ரீவிஷ்ணு, ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதிகளையும் கட்ட வேண்டும் என ஆன்மிக அன்பர்கள் விழைகின்றனர். ஆகவே பக்தர்கள் மனமுவந்து இத்திருப் பணிக்கு பொருள் உதவியும், பண உதவியும் செய்து, இறையருள் பெருக என்று வேண்டுகிறோம்.

இங்ஙனம்
கும்பாபிஷேக/புதிய சன்னதி
நிர்மாண பணிக்குழு.

பண உதவி/DD/cheque/MO
அனுப்ப வேண்டிய முகவரி :
T.D. பெருமாள் சாமி,
செயலாளர்,
1/252, சிங்காரத் தோட்டம்,
வண்டலூர், சென்னை – 48.

முக்கிய குறிப்பு : மேற்படி திருப்பணிக்கு ரூ. 1001/-ம் அதற்கு மேலும் அளிக்கும் அன்பர் களுக்கு ஆண்டுதோறும் அவர்கள் குறிப்பிடும் ஒரு நாளில் ஸ்ரீ மூகாம்பிகை அம்மனுக்கு அபி ஷேகம் செய்து, அம்பாளின் பிரசாதம் அனுப்பப்படும்.

PATRONS : Thiru. M.V. Lakshmikanthan, B.Sc., Income Tax Officer.
Thiru. P. Rajasekar, B.Sc., F.C.A., Income Tax Officer.

நீங்கள் கேட்டவை - தராசு

● சா.கு. இலக்கியன், சென்னை - 52.

? ஆசியாவிலேயே அதிக அளவில் எய்ட்ஸ் நோயாளிகள் இருப்பது இந்திய நாட்டில் தான் என்றும் அதற்குக் காரணம் இங்கு எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி இல்லாததுதான் என்றும் டாக்டர்கள் கூறுகிறார்களே...?

! எயிட்ஸ் விழிப்புணர்ச்சி ஒரு பக்கம் இருக்கட்டும்... ஒழுக்கக்கேடு அதிகரித்துக் கொண்டு வருகிறது என்பதும் இதனால் உறுதிப்படுகிறது அல்லவா... அதுதான் கவலை தரும் விஷயம்.

● புவனா சாமா, சீர்காழி.

? மயிலாடுதுறை குருத்து இஞ்சி; திருச்சி ராப்பள்ளி மாகாளிக்கிழங்கு... ஒப்பிடுக!

! சென்னையிலேயே கிடைக்கும் மாங்காய் இஞ்சிக்கு ஈடாகாதுங்க!

● என். ஸ்ரீநிவாசன், விழுப்புரம்.

? கம்யூனிஸ்ட் கட்சி, கிரகண விளக்கத்திற்காக விஞ்ஞானிகளுக்கு நன்றி உரைத்திருப்பது குறித்து...?

! ஒரு பக்கம் மூடநம்பிக்கை குறைய உதவியிருக்கலாம் என்றாலும் இன்னொருபுறம் அசட்டுத் துணிச்சலாலும் அஜாக்கிரதையாலும் கண்பார்வை பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஏராளம் என்று அறிகையில் வேதனையே ஏற்படுகிறது.

● டி. கலைவாணி, தான்தோன்றிமலை.

? உலகமெங்கும் வெடிகுண்டு ஓசை மறைந்து, எப்போது பாரதியின் கத்தும் குயிலோசையை மட்டும் கேட்க முடியும்?

! தலைவர்களின் சுயநலம் மறையும்போது வெடிகுண்டு ஓசையும் மறையும். அப்போது பாடுவதற்குக் குயில்கள் பாக்கி இருக்குமா என்பதுதான் சந்தேகம்.

● என். கே. மூர்த்தி, சென்னை - 4.

? 'Witch Hunt' என்ற பெயரில் வடக்கே சில மாநிலங்களில் பெண்கள் கொல்லப்படும் பரிதாப நிலையைக் கேட்டீர்களா?

! கொடூரம்! அதனிலும் கொடூரம் தமிழகக் காவல் நிலையங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள். ராமேஸ்வரம் காவல் நிலையக் கொடுமை குறித்து விசாரணை செய்த கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கை மக்களுக்குக் காவல் துறையிடம் நம்பிக்கை போய் விட்டது என்று சுட்டிக்காட்டியுள்ளது. இது, மாகரல் கிராமத்துப் பெண்கள் சொன்ன 'போலீஸை நம்பிப் பயனில்லை' என்ற (கல்கி 12.11.95 அட்டைப்படக் கட்டுரை) கூற்றையே எதிரொலிக்கிறது. சமூக நீதி பற்றி வாய் திறக்க இந்த அரசுக்கு இனி அருகதையில்லை.



* மிரட்டல்!

● மஞ்சுதேவன், பம்பாய் - 86.


? டாலர் விலை ஏறிவிட்டது குறித்து...?

! டாலர் விலை ஏறவில்லை... ரூபாயின் மதிப்புத்தான் குறைந்து விட்டது. இதன் பின்விளைவு என்ன...? நாம் அந்நிய நாடுகளுக்குத் திருப்பித் தரவேண்டிய கடன் - புதிதாகக் கடன் வாங்காமலே அதிகரித்து வருகிறது! அதற்கேற்ப வட்டியும்! ஆக, ரூபாயின் மதிப்பு நிலைத்திருப்பது அவசியம். இதற்கு ஒரே வழி, மத்திய, மாநில அரசுகள், மக்கள் ஆகிய முத்தரப்பினரும் வீண் செலவுகளைக் குறைத்து, லாபம் தரும் முதலீடுகளில் கவனத்தைச் செலுத்துவதுதான்.

● நருவேலன், மதுரை.

? கிண்டிக்கும் ஈக்காடுதாங்கலுக்கும் உள்ள வித்தியாசம்?

! சாலைதான்! ஈக்காடுதாங்கல் பாலத்தை மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடித்தது ஒரு மாபெரும் சாதனை என்றால், அதை இணைக்கும் சாலையைப் போடுவதற்கு ஆகிக் கொண்





• பலவீனம்...?



• புதிய இணைப்பு!



• "வேண்டாம் அரசியல்!"

டிருக்கும் தாமதம் அதனினும் பெரிய சாதனை!

● சி. செல்வம், பாளையங்கோட்டை.

? தடா சட்டம் காலாவதியாகி விட்ட பிறகும் மாநில அரசு நினைத்தால் அச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்று உள்துறை அமைச்சர் சவான் கூறியுள்ளாரே; தமிழ்நாட்டில் இனி ஜே.ஜே. தடாவா?

! மாநில அரசு புதிதாகத் தடா சட்டத்தைப் பயன் படுத்த முடியாது. ஆனால் ஏற்கெனவே அச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள் அதன்படியே விசாரணைக்கு உட்படுத்தப் படலாம். சவான் சொல்வது, தேவைப்பட்டால் மாநிலங்கள் புதிய சட்டங்களை உருவாக்கிக் கொள்ளலாம் என்பது. அது அத்தனை சுலபமில்லை. சட்டமன்ற அங்கீகாரமும் ஜனாதிபதி அங்கீகாரமும் கிடைத்தால்தான் அப்படியொரு சட்டம் அமுலுக்கு வர முடியும்.

● எம். ரேவதி, மன்னார்குடி.

? தேசிய தலைவருக்கும் வட்டாரத் தலைவருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

! பிளேடு பக்கிரிக்கும் ஹர்ஷத் மேத்தாவுக்கும் இடையே உள்ள வேறுபாடுதான்!

● எம். சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

? இலங்கையை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்கிறாரே சு. சுவாமி?

! அப்படியானால், காஷ்மீரை இணைத்துக் கொள்ளத் துடிக்கும் பாகிஸ்தானுக்கும் நமக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடுமே!

● வீ. பா. கிருஷ்ணன், மதுரை - 4.

? நல்ல கலைஞர்களுக்கு அரசியல் தேவையில்லை என்று சொல்கிறாரே கமலஹாசன்?

! அரசியலில் பங்குபெறுவது வேறு; அரசியல் அறிவுடன் நாட்டு நடப்பைக் கண்காணிப்பது வேறு. அரசியல் இந்நாட்டின் ஒவ்வொரு பொறுப்புள்ள குடிமகனுக்கும் தேவைதான்.

● எஸ். மதியழகன், காரைக்கால்.

? ரஜினி+காங்கிரஸ்? ரஜினி+வீரப்பன்?

! காங்கிரஸ் + வீரப்பன் + ரஜினி!

● எஸ். நாரம்புநாதன், சின்னகாஞ்சீபுரம்.

? நமது முதல்வரின் தற்போதைய பலவீனம் என்ன?

! எப்போதுமே உ.பி.ச.!

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மீண்டும் அச்சடிக்க ரிசர்வ் வங்கி முடிவு எடுத்துள்ளதே?

! இனி சூட்கேஸ் நிறைய ஐந்நூறு ரூபாய் நோட்டுகளுக்குப் பதில் ஆயிரம் ரூபாய் நோட்டுகளை வைக்க வேண்டியிருக்கும்!

● பாலசுப்ரமணியன், செங்குன்றம்.

? வனத்துறை அதிகாரிகள் மூன்று பேரை வீரப்பன் கடத்திச் சென்றுள்ளது குறித்து...?

! பிணைக் கைதிகளாக்கப்பட்டுள்ள அவர்களை நினைத்துப் பார்க்கும் போது மனம் கனத்துப் போகிறது. துடித்து எழுந்து திரண்டு ஊர்வலம் போன இதர வனத்துறை அதிகாரிகளின் உணர்வும் நமக்குப் புரிகிறது. எனினும் அரசு வீரப்பனின் மிரட்டலுக்குப் பணிந்து அவன் கேட்கும் பணத்தைக் கொடுப்பது என்பது தவறான முன்னுதாரணமாகி விடும். காஷ்மீர் தீவிரவாதிகளால் பிணைக் கைதிகளாக்கப்பட்டுள்ள அயல்நாட்டுச் சுற்றுலா பயணிகள் விஷயத்தில் மத்திய அரசு மிகவும் உறுதியாக இருப்பது போல், வீரப்பன் விஷயத்தில் மாநில அரசு இருப்பதுதான் நல்லது.

● ப்ரியா, பாளையங்கோட்டை.

? இந்திய கிரிக்கெட் Vs வருண பகவான்... வெற்றி யாருக்கு?

! முதல் ஒரு நாள் பந்தயத்தை வருண பகவான் 'பாய்காட்' செய்யப் போக, இந்திய அணியை மண்ணைக் கவ்வ வைத்து விட்டாரே!

● ஐ. சாந்து உஸ்மானி, திருமங்கலக்குடி. ❑

? பஞ்சாயத்துத் தேர்தல் என்பது தமிழகத்திற்கு எட்டாக்கனி என எண்ணுகிறேன்... உங்கள் கருத்து?

! திட்டமிட்டு 'எட்டாக்கனி'யாக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகி விட்டதே! தொகுதிகள் பிரிப்பதில் நடந்துள்ள அபத்தங்களைப் பார்க்கையில் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்து விடக் கூடாது என்பதில் தமிழக அரசு மிக உறுதியாக இருந்துள்ளது வெளிச்சமாகியிருக்

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஐ. சாந்து உஸ்மானி,
திருமங்கலக்குடி
612 102.

ஸ்ரீ மாரியாஸ் பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

H.O. : No. A-20, S.V.V. காம்ப்ளக்ஸ், (சிப்பி தியேட்டர் எதிரில்),
சாஸ்திரி ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி - 620 018.
B.O. : நெ. 27, சாந்திவிஹார் காம்ப்ளக்ஸ், 140, ராயப்பேட்டை ஹை ரோடு,
லஸ் கார்னர், மைலாப்பூர், சென்னை - 600 004. போன் : 8526806.

சிறப்பு டெபாசிட் திட்டம்

காலம் ஒரு வருடம்
ரூ. 10,000 டெபாசிட் செய்பவர்களுக்கு

1 கிராம் தங்க நாணயம் இலவசம்

25%
வருட வட்டி

குமுலேடிவ் டெபாசிட் :- 31 மாதத்தில் இரட்டிப்பு

உங்களின் செல்வக்குழந்தைக்கான முத்தான மூன்று திட்டங்கள்

கோல்டன் பேபி சேமிப்புத் திட்டம்

உங்கள் முதலீடு	காலம்	முதிர்வுத் தொகை
Rs. 1000/-	21 வருடம்	1 லட்சம்

குழந்தைகள் கல்வி நல திட்டம்

குறைந்த முதலீடு	மாதம் பெறும் தொகை	வருடம்	முதிர்வு தொகை
ரூ. 10,000/-	ரூ. 200/-	5	ரூ. 15,000/-

திருமணச் சேமிப்புத் திட்டம்

குறைந்த முதலீடு	வருடம்	முதிர்வு தொகை
ரூ. 10,000/-	10	ரூ.1,00,000/-

அனைத்து டெபாசிட்டுகளுக்கும்

- ✿ வட்டிக்கான பின் தேதியிட்ட காசோலை
- ✿ முதிர்வு தொகைக்கான பின் தேதியிட்ட காசோலை
- ✿ உத்திரவாதம், பாதுகாப்பு, உடனடி சேவை

முதியோருக்கான சேமிப்புத் திட்டம்

குறைந்த முதலீடு	மாதம் பெறும் தொகை	வருடம்	முதிர்வு தொகை
ரூ. 20,000/-	ரூ. 400/-	5	ரூ. 25,000/-

ரூ. 50,000/- மற்றும் அதற்கு மேலும் டெபாசிட் செய்பவர்களுக்கு அசையா சொத்து உத்திரவாத பத்திரம் உங்கள் பெயரில் பதிவு செய்து தரப்படும். செலுத்தும் தொகைக்கு உத்திரவாதம் பின் தேதியிட்ட காசோலைகளாக வழங்கப்படும்.

ஸ்ரீ மாரியாஸ் சிட்ஸ் (பி) லிட்.,


மாதங்கள்	செலுத்தும் தொகை	முன்பதிவுத் தொகை	சீட்டுத் தொகை	பரிசு விபரம்
40	250	25	10,000	V.I.P. பேக்
20	500	25	10,000	டிபன் பாக்ஸ்
20	1,250	50	25,000	பிளாஸ்க்
20	2,500	60	50,000	ஹாட் பேக்
50	2,000	125	1,00,000	டிபன் கேரியர்
20	5,000	125	1,00,000	1 கிராம் தங்க நாணயம்
40	7,500	400	3,00,000	2 கிராம் தங்க நாணயம்

★ சென்னை கிளை அலுவலகம் மட்டும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயங்கும்


பாராசூட் மனம்!

● படிப்படியாய் மேல்நோக்கி உயர்வது வாழ்க்கை. இன்பம் மாடியில் மட்டும் இல்லை. ஒவ்வொரு படியிலும் இருக்கிறது. இரண்டு படிகள் தாவிச் சென்றால், ஒரு படியில் தங்கியுள்ள இன்பம் தவறிப் போய் விடுகிறது. அதனால் படிப்படியாய் மேலேறிச் செல்க!

● காலையில் நீங்கள் கண் விழித்து எழும்போது உங்கள் கைகளில் புத்தம் புதிதான இருபத்து நான்கு மணி நேரம் இருக்கிறது. அதை விரயமாக்கி விடாமல், கவனமாய் செலவு செய்யுங்கள்.



● உங்கள் உதடுகளில் எப்போதும் புன்முறுவல் ஒட்டிக் கொண்டிருக்கட்டும். எதிர் வருவோர் எல்லோரையும் அது பற்றிக் கொள்ளும்.



● வீணையின் நரம்புகள் தனித்தனியே இருந்தாலும் அவை ஒன்றாக இணைந்து மீட்டப்படும் போதுதான் இசை பிறக்கிறது. குடும்பம் ஒரு வீணை.

● மனம் பாராசூட் போன்றது. அது விரியும் போதுதான் செயல்படும்.

● இளைஞர்களிடம் இனிமையாகவும் முதியவர்களிடம் பிரியமாகவும் துன்பப்படுகிறவர்களிடம் இரக்கமாகவும் எளியவர்களிடம் பொறுமையாகவும் இரு. சில சமயங்களில் இவர்களில் ஒருவராக நாம் இருக்கக்கூடும்.


● எதையும், யாரையும் சமாளிக்க முடியும். முப்பத்திரண்டு பற்களுக்கிடையில் ஒரு மெல்லிய நாக்கு வாழ்ந்து கொண்டிருக்கவில்லையா?

● உங்கள் மனக் கதவைத் திறந்தே வைத்திருங்கள். எந்த நேரத்திலும் புதிய சிந்தனைகள் உள்ளே நுழைய வரலாம்.

● விருப்பமில்லாத, கடினமான காரியங்களை ஒத்திப் போட வேண்டாம். உடனே செய்து முடித்து விடுங்கள். அப்புறம் நிம்மதியாக இருக்கலாம்.

● சூரியனுக்கு நேரே போனால், உன் நிழல் பின்புறம் விழுகிறது; எதிரே போனால் முன்புறம் விழுகிறது. நீ நேர்மையான வழியில் சென்றால் உன் துன்பங்கள் பின்புறமாய் ஓடி விடும். எதிர்த் திசையில் சென்றால் அவை முன் பக்கத்தில் காத்திருக்கின்றன.

● பத்து நிமிடம் நீங்கள் கோபத்தில் இருக்கும் போது, அறுநூறு விநாடி ஆனந்தத்தை இழந்து விடுகிறீர்கள்.



தொகுப்பு : **மௌலி**

நன்றி : கவிஞர் புவி.அரசு தொகுத்த "வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்" (ரூ. 30/- கண்ணதாசன் பதிப்பகம், சென்னை – 17.)

செல்லுலர் வாங்கலையோ செல்லுலர்!




ஏதோவோர் ஏகாந்தமான இடத்தில் வாக்கிங்கோ ஜாகிங்கோ செய்து கொண்டிருக்கும் ஒரு நபருக்கு ஓர் அவசரச் செய்தி ஒன்று சொல்ல வேண்டுமானால் என்ன செய்வது? அதற்கு வசதியாக வந்தது தான் பேஜர். அது வெறுமனே செய்தியை மட்டும்தான் ஓரிரு வரிகளில் சொல்லும்; உடனடியாக அந்த நபரிடமிருந்து பதிலைப் பெற்றுத்தர பேஜரால் முடியாது. சம்பந்தப்பட்ட நபர் நேரிலோ அல்லது டெலிபோனிலோ தொடர்பு கொண்டால்தான் உண்டு!

இனி அப்படியில்லை; வந்து விட்டது செல்லுலர் போன். ஏகாந்தமான இடத்தில் உள்ளவருடனோ அல்லது காரில் பயணம் செய்து கொண்டிருப்பவருடனோ டெலிபோனிலேயே டயல் செய்து பேசலாம். சம்பந்தப்பட்ட அந்த நபரும் யாருடன் வேண்டுமானாலும் எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி. உள்பட டயல் செய்து பேசலாம். தேவையானதெல்லாம் செல்லுலர் போன்தான்!

கார்ட்லெஸ் போனை விடவும் கையடக்கமாக உள்ள செல்லுலர் போன் 20,000 ரூபாயிலிருந்து 43,000 ரூபாய் வரை விலைக்குக் கிடைக்கிறது. உங்களுக்குப் பிடித்தமான மாடல் ஒன்றை விலைக்கு வாங்கிய இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் உங்கள் செல்லுலர் போனை இயங்க வைத்து விடுகிறார்கள் ஆர்.பி.ஜி. செல்லுலர் போன் நிறுவனத்தினர்.

"விலை தவிர செக்யூரிடி டெபாசிட் மூவாயிரம் ரூபாய்.



நிறுவித் தருவதற்கு 1200 ரூபாய். மாத வாடகை 156 ரூபாய். பிறகு உபயோகிப்பதைப் பொறுத்து 'ஏர் டைம்' சார்ஜ், பத்து விநாடிகளுக்கு ரூ. 1.40 என்கிற அளவில். செல்லுலர் போன் வாங்குவதற்கு ஏற்கெனவே டெலிபோன் கனெக்ஷன் வைத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. "இது இயங்கும் விதமே தனி!" என்கிறார் ஆர்.பி.ஜி. செல்லுலர் போன் நிறுவன அதிகாரி சாஸ்திரி.

நகரம் பல்'செல்'களாகப் பிரிக்கப்பட்டு base stationகள் இருப்பதால் செல்லுலர் என்று பெயர் வந்தது. சென்னை நகரில் மட்டும் 26 பேஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அனைத்தும் மைக்ரோ வேவ் மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு மகாபலிபுரம் சாலையில் காரில் சென்று கொண்டிருக்கும் நீங்கள் எஸ்.டி.டி. போட்டுப் பேச விரும்புகிறீர்கள் என்றால் உங்கள் செல்லுலர் போன் எப்படி வேலை செய்யும் என்பதைத்தான் முன் பக்கத்திலுள்ள படம் காட்டுகிறது.

காரிலுள்ள நீங்கள் டயல் செய்யும் போது, உங்கள் கார் எந்த பேஸ் ஸ்டேஷனுக்கு (B1) அருகில் சென்று கொண்டிருக்கிறதோ அந்த பேஸ் ஸ்டேஷன் உங்களது பேச்சை வாங்கி உடனடியாக MSC என்கிற மொபைல் ஸ்விட்சிங் சென்டருக்கு (C2) அனுப்புகிறது. MSC, தான் பெற்றதை பொது டெலிபோன் எக்சேஞ்சுக்கு (B2) அனுப்ப, அங்கிருந்து உள்ளூரிலோ வெளியூருக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ உங்களுடைய செல்லுலர் போனுக்குத் தொடர்பு கிடைக்கச் செய்யப்படுகிறது.

இதே போல் உங்களுடைய அழகான செகரட்டரி உங்கள் அலுவலகத்திலிருக்கும் டெலிபோன் மூலம், காரில் செல்லும் உங்களோடு தொடர்பு கொள்ளலாம். அவருடைய போன் கால், எக்சேஞ்ச் மூலமாக MSC யை அடைந்து பின் உங்கள் கார் எந்த பேஸ் ஸ்டேஷனுக்கு அருகில் செல்லுகிறதோ, அந்த பேஸ் ஸ்டேஷனை எட்டும்.

செல்லுலர் போனில் லோகல் கால் பேசினாலே அது சாதாரண போனில் எஸ்.டி.டி. பேசுகிற மாதிரியான கட்டணம் என்பதால் மிக முக்கியமான விஷயத்துக்காக மட்டும்தான் செல்லுலரை உபயோகிக்க வேண்டும். செகரட்டரியிடம் அசடு வழிய உபயோகித்தால் பில் கட்டி மாளாது!

— எஸ்.வி.என்.

போட்டிக் கதை - 12

தன்னை மிக தெளிவு செய்து...

"ஏம்பா இப்படி செஞ்சீங்க. உங்க வறட்டு கவுரவத்துக்காக என் வாழ்க்கையோட ஏம்பா விளையாடினீங்க..." உள்ளுக்குள் குமுறினான் வெங்கி என்கிற வெங்கடரமணன்.

ஆறடிக்கு ஒரு இன்ச் குறைவு- மாநிறத் துக்கும் சற்று அதிகம். ஓவல் ஷேப் கண்ணாடி- மீசை மிஸ்ஸிங்- விளம்பரங்களில் வரும் கல்லூரி மாணவ லட்சணங்கள் அப்படியே பொருந்தியிருந்தான்.

பெங்களூர்-கப்பன் பார்க்- விக்டோரியா ராணி சிலையருகே தனது யமாஹாவின் வேகத்தைக் குறைத்து, நிறுத்தி, ஸ்டாண்ட் போட்டான். விநாடிகளில் அவனது உதடு களுக்கு ஒரு சிகரெட் வந்து புகையத் துவங்கி யது.

போன வாரம், வருந்தல் கடிதம் வந்த போதுகூட அவன் இவ்வளவு நொந்து போக வில்லை. ஆனால், இன்று காலை... சே! அப்பா வின் மேல் எக்கச்சக்கமாக கோபம் வந்தது.

பிள்ளைகளின் எதிர்காலத்தை மனத்தில் வைத்து இந்தக் கால பெற்றோர் என்னென்ன செய்கிறார்கள்? மடத்தனம். வெட்டி வீறாப்பு! என் ஒரு வருட உழைப்பு வீணாப் போச்சே...!

காமன் அட்மிஷன் டெஸ்ட் (CAT) என்பது இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ் மெண்டின் நுழைவுத் தேர்வு. இந்தியாவில் நான்கு கல்லூரிகள் உள்ளன. இன்றைய மாண வர்களால் ஐ.ஏ.எஸ். தேர்வைவிட அதிகமாக விரும்பப்படுகிறது இந்த தேர்வு!

"நீ நல்லாத்தான் செஞ்சே! பட், கம்பேரடிவ்வி மத்தவங்க உன்னை விட நல்லா செஞ்சிருந்தாங்க. ஓபன் காம்படீஷனாச்சே! இதே நீ ஒரு எஸ்.சி.ஆகவோ எஸ்.டி.யாகவோ பொறந்திருந்தா, உன்னுடைய ஸ்கோருக்கும் பெர்ஃபாமன்ஸுக்கும் அந்த பிரிவுலயே டாப்பா வந்திருப்பே! என்ன செய்யறது... மேல் ஜாதியில் பொறந்ததுதான் நாம செஞ்ச பெரிய பாவம்! என்னிக்கோ நம்மவா செஞ்ச பாவத் துக்கு இப்போ நாம தண்டனை அனுபவிக் கிறோம்..."

வெங்கி உறைந்துப்போய், "நான் தாழ்ந்த சாதியா இருந்திருந்தா எனக்கு கெடச்சிருக் குமா, சார்!" குரல் கிணற்றில் இருந்து வருவதுபோல் இருந்தது.

"நோ டவுட்! கண்டிப்பா கெடச் சிருக்கும். பட், புளி சாதமும் தயிர் சாதமும் சாப் பிடற ஜாதியில பொறந்துட்டு... நீ ஐயரா... ஐயங் காரா...?"

"ரெண்டும் இல்லை! செருப்பு தைக்கறவங்க! எங்கப்பாதான்

அதை எழுதி, நான்கு கல்லூரியில் ஒன்றான பெங்களூர் ஐ.ஐ.எம்-இலிருந்து நேர்முக- கலந்துரையாடல் தேர்வுக்காக அழைப்பு வந்தது. நன்றாகத்தான் செய்தான். கிடைத்து விடும் என்றுதான் இன்று காலை வரை நினைத்திருந்தான்.

வெங்கி, முழு தம் இழுத்து, விரக்தியாய் ஊதினான். சிகரெட்டின் பிழம்பை முகத்துக்கு நேராகக் கொண்டு வந்து வெறித்துப் பார்த் தான்.

வெங்கிக்கு சில நாட்களாகத்தான் ஐ.ஐ.எம். பெங்களூரில் பணிபுரியும் ரங்காச்சாரியை டென்னிஸ் கோர்ட்டில் பழக்கம். அவரிடம் தனக்கு சீட் கிடைக்கவில்லை என்று கூறினான் வெங்கி.

"எது தவறாகப் போனதுன்னு தெரியல சார்"... என்றான் ஆங்கிலத்தில்.

'பாரதியம்'னு சாதிப் பேரைக் கொடுத்து ஓபன் காம்படீஷனில் விட்டுட்டாரு!"

ரங்காச்சாரி நூறு சதவிகிதம் அதிர்ந்தார்.

"உன் எதிர் காலத்தைப் பற்றி யோசிக்காம உங்கப்பா உன்னோட வாழ்க்கையில் விளை யாடிட்டாரு," என்று மட்டும் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார் ரங்காச்சாரி.

கையைச் சுட்ட சிகரெட்டை பட் டென்று உதறினான். தனது எம்.பி.ஏ. கனவு சிதைந்ததற்கு அப்பாதான் முழுகாரணம் என்று அவர் மேல் வெறுப்பாக இருந்தது. கண்களில் நீர் வழிந்தது. மூக்கு குழைந்து போனது.

சோகமும் கோபமும் அலைந்து அலைந்து வந்தது. அதற்கு மேல் பொறுக்க முடியாமல், கிளம்பினான். வீட்டுக்குப் போக மனம் வர



வில்லை. அப்பாவின் முகத்தில் விழிக்கவே வெறுப்பாக இருந்தது. வழியில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டு, மனம் போன போக்கில் சுற்றினான்.

இரவு பதினொரு மணி.

வெங்கியின் வீட்டில் அவனது அம்மா, ''ஏங்க'' புலம்பலாய் ஆரம்பித்தாள். தங்க பிரேம் கண்ணாடி.. அதிக மேக்கப்பில் நகரம் தெரிந்தாலும் பின் கொசுவத்தில் கிராமம் தெரிந்தது.

"ஹூம்'' என்று மட்டும் ஒலி எழுப்பினார். ஆழ்ந்திருந்த 'பிஸினஸ் டுடே'வில் இருந்து எழவில்லை. கடலைராஜன்- அரசு நிறுவனத்தில் பெரும்பதவி வகிக்கும்- முண்டா பனியன், லுங்கி சகிதமாய் கட்டிலில் சாய்ந்திருந்த- கறுப்பு நிறம்- பருமனான உடல் வாகு- போலீஸ் மீசை- முகத்தில் அம்மைத் தழும்பு போன்ற புள்ளிகள் இருந்த கடலைராஜன் மனைவியின் அடுத்த வார்த்தைகளுக்குப் புத்தகத்தைப் புறம் தள்ள வேண்டி இருந்தது.

''என்னிக்கும் வெங்கி வர இவ்வளவு லேட்டானதில்லிங்க."

"எல்லாம் வந்துடுவான்'' என்று விளக்கை அணைத்தார்.

காலை-ஒரு கண்ணை மட்டும் தூக்கம் அழுத்த- காப்பி கொடுக்க வந்த மனைவியிடம் கேட்டார். "செண்பகா! பய வந்துட்டானா?"

செண்பகாம்பாள் விளிம்பில் அழுகையை வைத்துக் கொண்டு, ''இன்னும் இல்லை... எனக்கு பயமா இருக்கு.. ஒரு வேளை, காலேஜ் சீட் கிடைக்கலைன்னு..."

"சீச்சீ... அசட்டாட்டம் பேசாதே! ரிசல்ட் வந்து ஒரு வாரமாகுது!" தூக்கம் சுத்தமாகப் போய்விட்டது. "அவனென்ன கொழந்தையா.." என்று சமாதானம் கூறினாலும்..

மனசு ரெண்டுபட்டுத்தான் போனது. ஒன்று என்ன ஆச்சோ ஏதாச்சோ என்று கிடந்து அடித்துக் கொள்ள, மற்றது அசம்பாவிதமாக எதுவும் ஆகியிருக்காது என்று சமாதானம் சொன்னது.

மதியம் மூன்று மணிக்குத் திரும்பி விட்டார் கடலைராஜன். வெங்கியின் மாடி அறையில் இருந்து 'பீட்டில்ஸ்' கேட்காதா? என்று ஏங்கிய படிதான் நுழைந்தார்.

அழுது வீங்கிய கண்களுடன் செண்பகாம்பாள்!

துரை. சரவணன்

"மெதுவா போகமாட்டானே! மொதல்ல அந்த எழவு வண்டியை அவன்கிட்ட இருந்து புடுங்கணும்...." புலம்பினாள்.

வெங்கி அங்கே இங்கே சுற்றி என்.ஹெச் 7 பிடித்து கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள ஒரு கிராமம் வந்துவிட்டிருந்தான். ரோட்டோர சர்தார்ஜி கடைக்குள் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தான்.

யாரோ எழுப்ப திடுக்கிட்டு எழுந்தான். பரட்டைத் தலையுடன் ஒரு பெண் தலையைக் கிளறியபடி நின்றிருந்தாள். இடுப்பில் கைக்குழந்தை. "ஸார்..." பிரத்யேகமான குரலில் பிச்சை கேட்டாள்.

"போபோ!" என்று விரட்டியவனுக்கு அம்மா நினைவு ஒட்டிக் கொண்டது. 'அப்பா செய்த தப்புக்கு அம்மா என்ன செய்யும்?' வெளியே வந்தான்.

சூரியன் சிவப்பாய் மண்ணுக்குள் 'டைவ்' அடித்துக் கொண்டிருந்தான். உடனே, கிளம்பியது யமாஹா!

மதுரை நகருக்குள் உள்ள ஆல்பர்ட் விக்டர் பாலம் 108 ஆண்டுகளைக் கடந்து 109வது வயதில் இன்னும் கம்பீரமாக நாளொன்றுக்கு 20 ஆயிரம் டன் வாகனங்களைத் தாங்குகிறது! இப்பாலத்தைக் கட்டி முடித்தபோது 12டன் எடையுள்ள ரோடு ரோலர் செல்லலாம் என தாங்கும் சக்திக்கு வரம்பு அமைத்தனர். 670அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட இப்பாலம் 15 கண்களைக் கொண்டது. அஸ்திவாரம் மட்டுமே உடைகல். மற்ற அனைத்தும் செங்கல்லும் சுண்ணாம்புக்கலவையும்தான்! இன்று தமிழகத்திலேயே செங்கல்லால் கட்டப்பட்ட மிகப் பழைய மேம்பாலம் இதுவே!

—இரா. கல்யாணசுந்தரம்

அவன் வீட்டை அடையும்போது மணி ஒன்பது! வண்டி சத்தம் கேட்டதும் ஓடி வந்தது அவனது அம்மாதான்.

வாரி அணைத்துக் கொண்டாள். "என்னடா இப்படி பண்ணிட்டே! எங்கடா போய்த் தொலைஞ்சே... நாங்க எல்லாம் தவிச்சுப் போய்ட்டோம். எங்களைப்பத்தி உனக்கு கொஞ்சமாவது அக்கறை இருக்கா..."

"என்னைப்பத்தி உங்களுக்கு அக்கறை இருக்கு? அப்பாவுக்குக் கூடவா..."

சட்டென்று முகம் மாறினார். "என்னடா பேசற?"

"என் வருங்காலத்தைப் பத்திக் கவலை இருந்திருந்தா, நம்ம ஜாதிப் பேரை கொடுக்காம இருந்திருப்பாரா... நம்ம ஜாதிப் பேரை சொல்லறதுல அப்படி என்ன கேவலம்?" சீறினான் வெங்கி.

தனது நண்பரான போலீஸ் உயர் அதிகாரிக்கு போன் சுழற்றிக் கொண்டிருந்த கடலைராஜன் விரல்கள் சுழற்றலை நிறுத்தின.

"முற்போக்கு எண்ணம்டா அவருக்கு..." வக்காலத்து வாங்கினாள் அம்மா.

"மண்ணாங்கட்டி! ஜெனரல் மானேஜர் பைனான்ஸ்! இந்த வேலை அவருக்கு எப்படி கிடைத்தது. சாதி பேரச் சொல்லித்தானே! தனக்கொரு சட்டம். மத்தவங்களுக்கு ஒரு சட்டம். புல்ஷிட்! எல்லாம் வேஷம். தான் கீழ்ச்சாதின்னு தெரியக் கூடாதுன்னுட்டு...." கத்தியபடியே மாடிப்படியேறி தன் அறையின் கதவை, டமார் என அறைந்து மூடிக் கொண்டான்.

எம்.சி.ஹேமரின் பாட்டு சுத்தியில் அடிப்பதுபோல் கேட்கத் துவங்கியது. அது இரவு வெகு நேரம் வரை தொடர்ந்தது.

காலை மாடிக்குப் போய் கதவைத் தட்ட எத்தனிக்க, திறந்துதான் இருந்தது. உள்ளே நுழைந்த கடலைராஜனின் நாசியை சிகரெட் நெடிதான் தாக்கியது. குப்புற அடித்து, ஒரு காலை மடக்கித் தூங்கிக் கொண்டிருந்தான் வெங்கி.

ஆனால், யாரோ மாடிப்படி ஏறி வருவது தெரிந்து, இப்படி தூங்குவது போல் நடித்தான். சற்று நேர அமைதி.

உச்சந்தலை முடியைக் கோதியதும், 'கோல்ட் ஃப்ளேக் வாசம். அப்பா!' என்று வெங்கிக்கு அடையாளம் காட்டியது.

கார் கிளம்பும் ஓசை கேட்கும் வரை அப்படியே இருந்துவிட்டு, எழுந்தவன் கண்களில் அந்த துண்டு சீட்டு பட்டது.

'இன்று மாலை ஐந்து மணிக்கு அல்சூர் ஏரியில் உன்னை சந்திக்க விருப்பம். அதிகம் புகைக்காதே! அக்கறையில்லா அப்பா...'

என்று கிறுக்கலாய் எழுதி இருந்தது. ஏனோ அப்பாவுடன் சிறுவயதில் போட்டிங் போனது ஞாபகம் வந்தது.

போகக்கூடாது என்று நினைத்துக் கொண்டே, ஏரிக்கரைக்குப் போய் விட்டான். திட்டில் அமர்ந்தான்.... எதிரே இருந்த தமிழ்ச் சங்கக் கட்டடத்தை கவனித்தபடி, சற்று தூரத்தில் மூடி வைத்திருந்த திருவள்ளுவர் சிலையைப் பார்த்தபடி, கரையோரத்தில் இருந்து வரும் நாற்றத்தைப் புறக்கணித்தபடி....

அப்பாவே காரை ஓட்டி வருவது தெரிந்தது. ஏரிப்பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். படபடப்பு.

தோளைத் தொட்டார். சற்று நேரத்திற்குப் பிறகு–

"மார்ச் மாசத்திலேயே வெயில் ஆரம்பிச்சுடுது பார்த்தியா?" என்று பொதுவாய் ஆரம்பித்து, ஜனத்தொகையிலும் 'காங்கிரீட் கட்டடங்களினாலும் பெங்களூர் உஷ்ணமாகி வருவதைக் கூறிக் கொண்டே, படகுக்கு அழைத்துச்

சென்று விட்டார்.

"நா ரோ பண்றேன்பா..." வெங்கி.

இடது துடுப்பை மட்டும் துழாவி, படகைத் திருப்பி, பின்பு இரண்டு துடுப்பையும் போட்டு ஏரியின் நடுவில் இருந்த தீவை நோக்கி படகைச் செலுத்தினான்.

"இட ஒதுக்கீட்டைப்பத்தி என்ன நினைக்கிற?" சுடலை ராஜன்.

பதில் கூறாமல் துடுப்பை துழாவிக் கொண்டிருந்தான். 'சலக்...சலக்...'

"அதான்பா... ரிசர்வேஷன் பத்தி..."

'சலக்...சலக்...'


"எதுக்காக அது கொண்டு வரப்பட்டது தெரியுமா?".


'சலக்...சலக்...!'


"கீழ்ச்சாதின்னு சொல்லிக்க கேவலம்..." வார்த்தைகள் சட்டென்று வந்து விழுந்து விட்டன.

சுடலைராஜன் சிரித்துக் கொண்டார்.

"உங்க தாத்தா பேரு மாடசாமி... எம் பேரு எம். சுடலைராஜன். பேரு ஒரு மாதிரியா இருக்கே. எம்.எஸ்.ராஜன்னு சுருக்கிக் கோயேன்னு எத்தனையோ நண்பர்கள் சொன்னாங்க. நான் மாத்திக்கலை. இந்தப் பேரை கேட்டாலே நான் எங்கிருந்து வந்தவன்னு ஈஸியா சொல்லிடலாம். நான் வந்த இடத்தையோ என் மக்களையோ கேவலமா என்னிக்குமே நினைச்சதில்லை."







- து. பூவராகன்

"அப்போ எம்பேரு மட்டும் ஏன் வெங்கட் ரமணன்னு..."

"நான் படிப்பை விடாம இருந்ததற்கும், என் முன்னேற்றத்திற்கும் காரணமா இருந்தவர் என் கணக்கு வாத்தியார் வெங்கிடரமணய்யர்தான். அவருடைய முழுப்பெயரை உனக்கு வைக்க முடியலைன்னாலும் பரவாயில்லைன்னுட்டு முக்கால் பெயரை வைத்தேன்" என்று சிரித்தார்.

'சலக்...சலக்...!'

"தீவுக்குப் போகாதே.. இருட்ட ஆரம்பிச் சுடுச்சு. ஒரே பூச்சியா இருக்கும். போட்டை திருப்பிக்கோ" என்றார்.

படகு திரும்பத் துவங்கியது. வெங்கியின் மனதும்...

"நமக்கு கொடுக்கப்படும் சலுகையை ஏன் வேணாம்னு சொல்லணும்?" வெங்கி.

கையைப் பின்புறம் ஊன்றி, வானத்தை அண்ணாந்து பார்த்தார் சுடலைராஜன். "உனக் கொண்ணு புரியுதா? நாம தாழ்த்தப்பட்ட வர்கள்தான், தாழ்ந்தவர்கள் இல்லை..." என்று கூறி மீண்டும் வெங்கியைப் பார்த்து-

"தினமும் மூணுவேளை சாப்பிட்டு புஷ்டியா இருக்கறவனையும் சாப்பிடுவதற்கு மூணு நாள் காத்திருக்கறவனையும் ஓட்டப் பந்தயத்தில் ஓட விட்டா என்ன ஆகும்?"



''பெண்மையின் சிறப்பை விளக்கி, தாய்க்குலத்திிடம் பேச வந்த தலைவரு கடைசில சொதப்பிட்டாரு...''

''என்ன சொன்னாரு?''

''குழந்தைக்குப் பேர் வைக்கச் சொல்லி ஒரு பொம்பளை கேட்டுச்சு. 'தேர்தல் நிதிக்குப் பணம் தந்தாத்தான் பெயர் சூட்ட முடியும்; ஆண் குழந்தைன்னா நூறு ரூபா தரணும்; பொட்டச்சின்னா ஐம்பது ரூபா தந்தாப் போதும்'னு சொல்லிட்டாரு!''

– ஆர். ஏகோத்தமன்

வெங்கி உடனே "அக்கிரமம்" என்றான்.

"அதனாலதான் தனித்தனியாக ஓடவிட்டாங்க. நான் படிச்ச காலத்துல படிப்பெல்லாம் பள்ளிக் கூடத்துலதான். வீட்டுக்கு வந்தவுடன் ஐயாவோட வேலை செய்யணும். பரீட்சைக்கு முன்னாடி நான் மட்டும்தான் விடுவாரு. அன்னைக்கு மட்டும் ராத்திரியெல்லாம் ரமணய்யர் வீட்டுல படிப்பேன். நம்ம வீட்டுல 'லைட்' கிடையாது. ஐயா வேற கதியில இருப்பாரு. ரொம்ப நேரம் சிம்னி விளக்குல படிச்சா வைவாரு. 'படுல. படிச்சு பட்டணத்தை வாங்கறவனாட்டம்'பாரு!

'சலக்...சலக்...!'

"எந்த சப்ஜெக்டை எப்படி படிக்கணும். எதுல அதிக கவனம் செலுத்தணும் விடை தெரிஞ்சாலும் எப்படி எதை சிறப்பா தேர்வுல எழுதறது– இப்படி எதுவுமே தெரியாமல் முட்டி மோதிக்கிட்டு வந்தேன். அப்போ எனக்கு இட ஒதுக்கீடுங்கற ஊன்றுகோல் தேவைப்பட்டது. உனக்கு நான் எந்தக் குறையும் வைக்கல. செயின்ட் ஜான்ஸ்ல சேர்த்தேன். கோச்சிங் கிளாஸ், சம்மர் கோச்சிங்னு எதுலயும் எந்தக் குறையும் வைக்கல.

"உனக்கு மூணு வேளைச் சோறும் கிடைச்சு புஷ்டியான பிறகும் அந்த நைந்துபோன கூட்டத்தோடு ஓடி ஜெயிக்கணும்னு ஏன் பேராசைப்படற?" என்று வெங்கியைக் கூர்ந்து பார்த்தார்.

தலையைக் குனிந்தபடி, "நீங்க ஒருத்தர் மாறிடறதால இந்த சமூகம் மாறிடும்னு நெனைக்கிறீங்களா? மேல் ஜாதிக்காரங்க ஜாதிப்பேரை மாத்திக்கொடுத்து சலுகையை அனுபவிக்கிற காலம் இது!"

"மாட்டுச் சாணம்! இதே வழக்கமா போயிடுச்சு! லஞ்சம் கொடுக்க முடிஞ்சா கொடுத்து வேலையை சாதிச்சுக்கறது... முடியலைன்னா லஞ்சத்தை எதிர்த்துப் புலம்பறது! நம்ம நாட்டுலதான் எல்லா அநியாயங்களும் நியாயப் படுத்தப்பட்டாச்சு. எப்படி இருந்தாலும் இந்த இட ஒதுக்கீடு ரொம்ப நாளைக்கு நீட்டிக்க முடியாது; கூடாது. அரசியல்வாதிங்க இதை ஒரு ஓட்டு வங்கியாத்தான் பயன்படுத்துறாங்க. நாமதான் மாறணும். மேல் ஜாதிக்காரங்க கீழ் ஜாதிக்காரங்களை எதிரியாகவோ, போட்டியாகவோ நினைக்காம முன்னேறும் இனமா மதிக்கணும். நாமும் முன்னேறியபின் மத்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழி விடணும். அப்போதான் உண்மையான சமநிலை சீக்கிரம் வரும்..." உணர்ச்சி வசப்பட்டுப் போனார் கடலைராஜன். தொடர்ந்தது–

"இதை நான் சந்திக்கும், பழகும் நண்பர்கள் எல்லோரிடமும் சொல்லிக்கிட்டு வரேன். நெறயபேரு மாறிட்டுத்தான் வராங்க. அவங்க அதை மத்தவங்களுக்குச் சொல்வாங்க. தூறலா ஆரம்பிச்சுத்தான் பெருமழை பெய்யும்."

கடலைராஜனின் முகத்தில் பெருமிதம் தெரிந்தது.

"இதையெல்லாம் என்கிட்ட முன்னமே ஏன் சொல்லலை?" என்று வெங்கி ஏக்கமாய் கேட்க,

"நீ பெரியவனா ஆனவுடன் சொல்லலாம்னு இருந்தேன். ஆபீஸ், உத்யோகம்னு நீ பெரியவனா ஆனதே எனக்கு தெரியாமா போச்சு. அது என்னோட தப்புதான். ஸாரி!"

"இல்லப்பா! நீங்கதான் என்ன மன்னிக்கணும். எதையும் புரிஞ்சுக்காம கன்னாபின்னான்னு பேசிட்டேன்."

"இப்பவாவது தெளிவா இருக்கயா! இல்ல... வீட்டுக்குப் போனவுடன் உன் அம்மாகிட்ட என்னை அக்கறையில்லா அப்பான்னு சொல்லுவியா...!" என்று சிரித்தபடி சட்டென்று கோட் பாக்கெட்டை தடவி ஒரு கவரை எடுத்தார்.

"டோஃபல் (Test of English as a foreign Language) அப்ளிகேஷன்! ஜிமேட். உம் எழுது. நல்ல யூனிவர்சிடி கெடச்சா நான் உன்னை அனுப்பி படிக்க வைக்கிறேன். திரும்பவும் 'CAT'ம் எழுது! இங்க படிச்சாலும், அமெரிக்கா போய் படிச்சாலும் உன்னுடைய சர்வீஸ் இந்தியாவுக்குத்தான்... என்ன!" என்றார்.

கரை நெருங்கியது.

முதலில் கடலைராஜன் கரை ஏறினார். வெங்கி ஏறும்போது படகு சற்று தள்ளாட, "பார்த்துப்பா..." என்று பதறி நீட்டிய அப்பாவின் கரங்களை பற்றிக் கொண்டான் வெங்கி.

பற்றிய கரங்களை இறுக்கி, கரையேற்றி விட்டார் கடலைராஜன்.

கிருஷ்ணசந்திரனிடம் சிரிப்பைக் கண்டதும் உதயரேகாவுக்கு உலகமே எழில் மயமாகிவிட்டது.

லேசான தூறலோடு வெயிலும் கலந்து அடித்து அவளது ஆனந்தத்தை அதிகரித்தது. மாயச் சூரியனின் ஒளிக்கற்றைகள், நீர் கொண்ட மேகத்திரளை ஊடுருவி, வானவில்லின் வண்ணங்களாக வானமெங்கும் சிதறியிருந்தது மெய்யாகவே கண்கொள்ளாக் காட்சிதான்.



"காரை ஓரமாக நிறுத்திவிட்டு நீங்களும் வாருங்களேன்!" என்று கணவனிடம் பரபரத்தாள் உதயா.

மறுக்காமல் சற்று நேரம் நோக்கிவிட்டு, "மழைக்காலத்தில், மாலைவேளைகளில் அவ்வப்போது இப்படி வரும்தானே! இதற்குமுன் கவனித்தது இல்லையா?" என்று கேட்டான் அவன்.

"சில தடவை சிறு அளவில் பார்த்திருக்கிறேன். இவ்வளவு பரவலாகப் பார்த்தது இல்லை... வானத்தில் மேகங்களால் ஏற்படுகிற கோவு அமைப்புகள் ஒரே மாதிரி இரண்டுதரம் ஏற்படாதாமே, அப்படியா?" என்று வானிலேயே பார்வையைப் பதித்தபடி விசாரித்தாள் அவள்.

"அப்படித்தான் கேள்வி. போகலாமா?" என்றான் அவன்.

அரைக் கவனமாய் "இம்!" என்றவளுக்குத் திடுமென ஒன்று உறைத்தது.

அவளுடைய கணவன், அவளது ஆசைக்காகக் காரை நிறுத்தி, அவளது ஒப்புதலின் பிறகே, காரை எடுக்கிறான்! மிகவும் சின்ன விஷயம்தான். ஆனால் அவளுக்கு மிகமிக இதமாக இருந்தது.

கிராமம் நெருங்க நெருங்க, பயணத்தில் உதயா ஒரு வேறுபாட்டை உணர்ந்தாள். முதல் தடவை செல்வரங்கம் குடும்பத்தோடு சென்றபோது, பாதை ஏறி ஏறி இறங்கி, குதிரையில் சவாரி செய்வது போல ஓர் உணர்வை ஏற்படுத்தியது. ஆனால் இப்போது அப்படி இல்லை.

"இங்கே கூட ரோடு போட்டு விட்டார்கள் போல் இருக்கிறதே!" என்றவள் கார் மெதுவாகச் செல்வதைக் கவனித்து, "ரொம்பவும் மெள்ள ஓட்டுகிறீர்களே. வேகம் பிடிக்காதா?" என்று கணவனிடம் வினவினாள்.

"இந்தச் சாலையில் இதற்குமேல் வேகமாகப் போனால் தூக்கிப் போடும்" என்றான் அவன், பாதையிலேயே கவனமாக.

"ஓகோ! அதனால்தான் போன தடவை அப்படிக் குதிரையில் ஏறிப்போகிற மாதிரி இருந்ததா?" என்று வாய்விட்டு யோசித்தவளுக்கு உடனேயே ஒரே குதூகலமாகி விட்டது.

காரின் குலுக்கல் அவளுக்குச் சிரமமாக இருக்கும் என்றல்லவா மெதுவாக ஓட்டுகிறான்! அர்த்தம் என்ன? மனையாளிடம் அன்பு மலரத் தொடங்கி விட்டது!

கண்கள் மலரத் தன்னை மீறி, "எனக்குக் கஷ்டமாக இருக்கும் என்று மெள்ளச் செல்லுகிறீர்களா?" என்று கேட்டு விட்டாள்.

ஒரு சிறு இடைவெளிக்குப் பின், "இந்தக் காரில் நீ மட்டும் தான் இருக்கிறாயா?" என்று குரலில் இளப்பம் தொனிக்க வினவினான் கிருஷ்ண சந்திரன்.

குட்டுதான். ஆனாலும் உதயாவின் உற்சாகம் மட்டுப்பட மறுத்தது. ஏதோ வறட்டுக் கவுரவம் பார்த்துக் கொண்டு, கிருஷ்ணசந்திரன், அவளது



7

அன்பை ஒத்துக் கொள்ள மறுத்தாலும் 'மஞ்சள் கயிற்று மாஜிக்' வேலை செய்யத் தொடங்கி விட்டது என்றே அவன் நம்பினான். கூடவே, அவளிடம் அவனுக்கு ஆசையும் இருப்பதன் சான்று புத்தக அறைப் பார்வையும், சிலிர்ப்பும்.

'இல்லாத ஒன்றைப் புதிதாக உண்டாக்குவது சிரமம்தான். ஆனால் அன்பு, ஆசை இரண்டும் இருக்கும்போது, அதை ஊதிக் காதல் நெருப்பாக எரிய வைப்பது எளிதுதானே' என்று உதயா சந்தோஷமாக எண்ணமிட்டான்.

ஆனால் ஒன்று. சற்றுமுன்போலச் சட்டென வாயை விட்டுவிடாமல் சற்று யோசித்துப் பேச வேண்டும்.

பண்ணை வீட்டில், 'அம்மா அம்மா' என்று எல்லோரும் அவள் முகம் நோக்கி அவளுக்குக் காத்திருந்ததைப் பார்க்க அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

இரு பெட்டிகளையும், மாடியில் கிருஷ்ண சந்திரனின் அறைக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டு, உதயரேகாவின் அருகில் வந்து, "அம்மா, இந்தப் பெட்டி நீங்க போனவாட்டி கொணாந்ததா, வேறயாம்மா?" என்று மரியாதையுடன் பவ்யமாய் விசாரித்தான்.

இந்த விவரம் இவனுக்கு எதற்கு என்று வியப்புடன் உதயா நோக்கவும், "வேற ஒண்ணும் இல்லையம்மா. போனவாட்டி பெட்டியிலே பூட்டு சிக்கி, திருப்புளி, ஸ்பானர் எல்லாம் வச்சுத்தானேம்மா, தெறந்தீங்க? தச்சுப் பட்டறைச் சாமானெல்லாம் இப்ப மோட்டார் ரூமுக்குப் போயிருக்கும்மா. எடுத்தாந்து இங்கே வச்சிக்கிடலாமோன்னு கேட்டேன்" என்று முன்னிலும் பணிவு காட்டி விஷயத்தைத் தெள்ளத் தெளிவாக விளக்கினான் வேலையாள்.

இப்படிப் போட்டு உடைக்க வேண்டும் என்று அவள் நினைக்கவில்லையே!

உதயரேகா திகைத்து நிற்க, "பெட்டியின் பூட்டு சரிசெய்தாகி விட்டது. நீ கோவிலுக்குப் போய், நாளைப் படையல் ஏற்பாடுகளை எல்லாம் சரிபார்த்து விட்டு வா வேலய்யா..." என்று வேலையாளை வெளியே அனுப்பினான் கிருஷ்ணசந்திரன்.

மாடிப்படிகளில் இறங்கிச் சென்ற வேலையாளின் காலடி ஓசை தேய்ந்து மறையவும், "ஆக, தாழ் தானாகச் சிக்கிக் கொள்ளவில்லை!" என்றான் வெகு நிதானமாக.

யோசியாமல் பேசக் கூடாது என்று சற்றுமுன் செய்த தீர்மானம் நினைவு வர உதயரேகா தயங்கினாள். தாழ்ப்பாள் விஷயத்தை இல்லை என்று பொய் சொல்லவும் அவளால் முடியவில்லை. உண்மையை ஒத்துக் கொண்டால், அதன் காரணத்தைக் கேட்பானே, அந்த விவரம் இப்போதே சொல்லலாமா என்றும் தெரியவில்லை. ஆனால், அவனும்

ரமணி சந்திரன்

ஒன்றும் கேள்வி எதுவும் கேட்கவில்லையே. தாழ்ப்பாள் விஷயத்தில் அவனாக முடிவு செய்ததைச் சொன்னான். மற்றதும் அவனிடமிருந்தே வரட்டும்.

லேசாகத் தோளைக் குலுக்கி, "முகம் கழுவ வேண்டும்" என்று குளியலறையை நோக்கி நகர்ந்தாள்.

சட்டென அவள் கையைப் பற்றி நிறுத்தினான் கிருஷ்ண சந்திரன். "ஏன்? ஏன் அப்படிச் செய்தாய்? எங்கள் வீட்டுச் செல்வம் கண்டு மயங்கினாயா?" என்றவன் "தேவை இல்லையே. உன் தந்தையின் பதவிக்கும் செல்வாக்கிற்கும் எங்

களை விடப் பணக்காரர்கள் கூட விரும்பி வருவார்களே. பின் எதற்காக இந்த சூழ்ச்சி, திருமணம்? ஏன் உதயரேகா?"

கிருஷ்ணசந்திரன் குரலில் இருந்த ஏதோ ஒன்று ஒருகணம் அவன் மனைவியை வாயடைத்து நிற்க வைத்தது.

கதவின் தாள் விவரம் தெரியும் போது முதலில் கணவன் கோபமடைவான் என்பதை உதயரேகா ஏற்கெனவே அனுமானித்திருந்தாள். நம்மை யாரும் ஏமாற்றி முட்டாளாக்கும் போது ஆத்திரப்படுவது இயற்கையே. அதிலும் இப்படி இன்னொருவர் மூலம் தெரிய வரும் போது, குறைந்தது இரு மடங்கு கோபம் வருவது இயல்பு.

ஆனால் உதயா எதிர்பார்த்த அளவு சினம் அவன் குரலில் இல்லை. கோபத்தை விடவும் ஒரு பரிதவிப்பு.... ஒரு பச்சாதாபம்... இந்த மாதிரி சதிகாரியிடம் மாட்டிக் கொண்டு விட்டேனே என்று தன்னிரக்கமா? அல்லது, இப்படி ஒரு குணக் கேடனிடம் தானாக வந்து மாட்டிக் கொண்டிருக்கிறாளே என்று அவனிடம் பரிதாபமா?

அவள் யோசனையோடு நோக்கவும், "சொல் உதயரேகா, சொன்னால்தானே எனக்குத் தெரியும்? அல்லது கடைசி வரை எனக்கு மறைக்கப்பட வேண்டிய விஷயமா?" என்று புருவங்களை உயர்த்திக் கேட்டான் அவன்.

"மறைப்பதா? கிடையவே கிடையாது. இன்று அந்த வேலய்யன் இப்படிப் போட்டு உடைத்திராவிட்டாலும் விரைவில் ஒருநாள் நானே சொல்லித்தான் இருப்பேன். ஏனெனில் இது சொல்லியாக வேண்டிய விஷயமும் கூட" என்று தொடங்கித் தன் காரணங்களை உதயா சொன்னாள். அவள் சொல்லி முடிக்கும் வரை, குறுக்கிடாமல் கேட்டிருந்து விட்டு, "இதெல்லாம் தெரியாத முட்டாள் நான் என்று உனக்கு யார் சொன்னார்கள்?" என்று கிருஷ்ணசந்திரன் நிதானமாகக் கேட்கவும் உதயா திகைத்தாள்.

"தெரிந்துமா நீங்கள்... உங்களை உயிராய் நேசிக்கும் குடும்பத்தாரின் வேதனை உங்களைக் கொஞ்சம் கூடவா உறுத்தவில்லை? இந்தப் பாட்டிலில் கிடைக்கும் போதையும், தரம் கெட்ட பெண்களின் சகவாச சுகமும் அதைவிடவா பெரிது? மேலும், உங்கள் ஆரோக்கியம்? உங்கள் நல்ல பெயர்? முதலில் எப்படியோ? இனியேனும் உங்கள் நன்மையைக் கருதியேனும் இந்தத் தீமைகளை விட்டு விடலாமில்லையா?"

"நான் என்னென்ன செய்கிறேன், எப்படி எப்படி எப்படிச் செய்கிறேன்; எதற்காகச் செய்கிறேன் என்பது எனக்கே தெரியும். அது பற்றி யாரும் எனக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை" என்றான் அவன் மொட்டையாக.

"என்ன தெரியும்? குடிக்கிறீர்களே, நல்லது கெட்டது தெரிந்து செய்வதா அது?" என்று விடாமல் கேட்டாள் உதயா.

அவன் தோளைக் குலுக்கவும், "கெட்ட பழக்கங்கள் மட்டுமா? உங்கள் பெற்றோர், தங்கையிடம் பேசிப் பழகும் முறை? அத்தையை நீங்கள் 'அம்மா' என்று அழைத்து நான் இது வரை கேட்கவே இல்லை. அவர்கள் உங்கள் அன்புக்காக எப்படி ஏங்குகிறார்கள் தெரியுமா?"

"என் செயல்களைப் போலவே, யார் யாருடன் நான் எப்படிப் பழகுகிறேன் என்பதும் நான் அறிந்தே செய்வதுதான்" என்றான் கிருஷ்ணசந்திரன் கறார்க் குரலில்.

"புரியவில்லை! அறிந்து செய்வது, தெரிந்து செய்வது என்றால் ஒன்றைப் பற்றி நன்கு ஆலோசித்து, அதன் நன்மை தீமைகளைத் தெளிவுபடுத்திக் கொண்டு செயல்படுவது. குடிப்பதும், குடித்து விட்டுப் பொது இடங்களில் விழுந்து கிடப்பதும், பெற்ற தாயைப் புறக்கணித்து எவளோ ஒரு... வந்து.. கண்டபடி கீழ்த்தரமாக நடந்து கொள்வதும் 'அறிந்தும் தெரிந்தும் செய்வது' என்றால் எனக்குச் சுத்தமாக ஒன்றுமே புரியவில்லை" என்று படபடத்தாள் உதயரேகா.

"புரியவில்லை என்றால் அத்தோடு அதை விடு. ஆனால் ஆலோசித்து, நன்மை தீமை உணர்ந்து... அது இது என்றாயே; நீ என்ன ஆலோசித்து எதை உணர்ந்து செயல்பட்டிருக்கிறாய்? உன் பெயரைக் கெடுத்துக் கொள்ளும் அளவு துணிந்தது என்னைத் திருத்துவதற்காக என்றாயே; நான் திருந்தாவிட்டால் உன் வாழ்வு என்ன ஆகும் என்று ஒரு தரமேனும் எண்ணிப் பார்த்தாயா...?"

"அதெப்படி...." என்ற அவளது குறுக்கீட்டை அலட்சியம் செய்து கிருஷ்ணசந்திரன் மேலே பேசினான். "ஒருவேளை என்னுடைய தாய், தந்தை, தங்கைக்காகப் பெரிய தியாகம் செய்தாய் என்று உன்னை மெச்சுவேன்;




"ஏங்க உங்க வங்கியிலே சிறுதொழில் நடத்த கடன் தருவீங்களா?"

"என்ன தொழில்?"

"வங்கி லாக்கர்களைத் திறக்க மாற்றுச் சாவி தயாரிக்கிற தொழில்தாங்க!"

- து. பூவராகன்



"ஆபீசில் ஆகட்டும், வீட்டில் ஆகட்டும் லேட்டானதுக்குக் காரணங்களை டாண்... டாண் என்று உன்னால் எப்படிச் சொல்ல முடியுது...?"

"எல்லாம் என் நண்பன் எழுத்தாளர் ஏகாம்பரத்தோட கற்பனை உபயம்!"

மெச்சி உன் விருப்பம் போல நடப்பேன் என்று மனக் கோட்டை கட்டினாயா? என்ன மடத்தனம்? படு மூடத்தனமாய் எவ்வளவு பெரிய சிக்கலை ஏற்படுத்தி விட்டாய்!"

ஆத்திரமும் பரிதவிப்பும் கலந்த அவனது பழைய குரல் எரிச்சலூட்ட, "ஓர் ஆண்டுக்கு முன்பு வரை நீங்கள் ஒரு நல்ல பிள்ளையாக, மாடல் மகனாக இருந்தவர்தானே? இடையில் வந்த மாற்றத்தை விடுத்து, மீண்டும் பழைய மாதிரி மாறியே தீருவீர்கள், பாருங்கள்" என்றாள் உதயா பிடிவாதக் குரலில்.

அலுப்புடன் தோளைக் குலுக்கினான் கிருஷ்ணசந்திரன். "ஒன்றை – அது வெறும் கற்பனை என்றாலும் – பத்துத் தடவை சொல்லிக் கொண்டே இருந்தால் மெய்யாக நடந்து விடும் என்று நம்புகிற வர்க்கம் என்று தெரிகிறது. ஆனால் நீ பத்தாயிரம் தரம் உருப்போட்டாலும் நான் மாறுவது நடக்கிற விஷயம் அல்ல. அதையும் மனதில் வை" என்று சலிப்புடன் மொழிந்தவன், ஒரு பெரிய மூச்சு விட்டு, "இப்போது, இந்தச் சிக்கலில் இருந்து நீ சேதமின்றித் தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதை உனக்குக் காட்டியிருக்கிறேன். இனியேனும் புத்தியோடு அதன்படி நடந்து நல்லபடியாகப் பிழைத்துக் கொள்" என்று, உறுதியான குரலில் இயம்பி, இளக்கமற்ற விரைப்புடன் அங்கிருந்து வெளியேறினான்.

மேலே பேச்சுக்கு இடம் கொடாமல் விலகிச் சென்ற கணவனின் முதுகை, உதயரேகா வெறித்து நோக்கினாள்.

நல்லபடியாக வாழ மாட்டேன் என்று, இப்படி ஒரு பிடிவாதமா? விட முடியாத அளவுக்கு அப்படி ஒன்றும் மொடாக் குடியனாகவும் தெரியவில்லை! ஊரிலிருந்து கொண்டு வந்த சாமான்களில், அந்த மாதிரி பாட்டில் வகைகள் ஏதும் இல்லை என்பதை ஏற்கெனவே அவள் பார்த்திருந்தாளே!

ஒருவேளை, இங்கே வாங்குவானா? கவனிக்க வேண்டும். எவனாவது வாங்கி வந்தால் அவனைப் பிடித்து விரட்ட வேண்டும்.

அதென்ன, 'நீ சேதமின்றி தப்பிப் பிழைத்துக் கொள்.' அவள் மட்டும் பிழைப்பதற்கு இந்தப் பாடுபட்டு இவனை மணப்பாளேன்? அத்தை, மாமா, வகையோடு, முக்கியமாக இவனும் அல்லவா நல்லபடியாக வாழ்ந்தாக வேண்டும். அதுவரையில் அவள் இந்த முயற்சியைக் கைவிடுவதாக இல்லை.

மறுநாள் காலையில் கணவனும் மனைவியும் குளித்து விட்டுக் கோயிலுக்குச் சென்றார்கள். அங்கே எல்லாம் தயாராக எடுத்து வைத்திருக்க, பொங்கல் செய்து, தெய்வசந்நிதானத்தில் படையல் இட்டு வணங்கினார்கள்.

கண்மூடி நின்ற கணவன் முகத்தில் இறுக்கத்தைக் காணவும், இவ்வளவு தீவிரமாக என்ன வேண்டுகிறானோ என்று உதயரேகா யோசித்தாள்.

ஒருவேளை, தன் கெட்ட வழிகளில் இருந்து விடுதலையைத்தான் வேண்டுகிறானோ? அவசரமாக அம்மனை நோக்கித் தானும் அப்படியே வேண்டிக் கொண்டாள்.

சுற்றி வரும் போது, மேற்குப் பிராகாரத்தில் இருந்து ஒரு மரம் உதயரேகாவின் கவனத்தைக் கவர்ந்தது.

மரத்தடியில் அபயம், வரதத்துடன், மடியில் பிள்ளையோடு ஓர் அம்மன் சிலையிருக்க, மரம் முழுவதும் தவழும் சின்னக் கண்ணனோடு கூடிய சிறு தொட்டில்கள் தொங்கின.

"இது கற்பகத்தரு அம்மா. அடியில் மரத்திற்கு உரிய தாயார் அம்மனை வேண்டிக் கொண்டால், ஓர் ஆண்டுக்குள்ளாக மடியிலோ, வயிற்றிலோ பிள்ளை நிச்சயமாக இருக்கும். பாருங்கள், இதெல்லாம் அப்படிப் பெற்றவர்கள் கட்டிய தொட்டில்கள்தான். கொஞ்சம் இருங்கள். கற்பூரம் எடுத்து வருகிறேன்" என்று சென்றார் அர்ச்சகர்.

அவளுக்குக் குழந்தையா? உள்ளூரக் குறுகுறுப்பும் கிளுகிளுப்புமாக அம்மனின் அருள் முகத்தை நோக்கினாள் உதயா.

"கண்டபடி ஏதேனும் வேண்டிக் கொண்டு தெய்வத்தைச் சங்கடத்துக்கு உள்ளாக்காதே உதயரேகா. இது செல்லாத ஊருக்கு வழி" என்றான் கிருஷ்ணசந்திரன்.

அவனது பாணியில் தோளைக் குலுக்கினாள் அவன் மனைவி.

கணவனின் பார்வை மாறுவதை, முகம் மாறாமல் கவனித்து விட்டு, 'செல்லாத ஊருக்கு வழியா? செல்ல வைப்பாள் இந்தத் தாய்' என்று நம்பிக்கையோடு தாயாரை வேண்டிக் கொண்டாள் உதயரேகா.

(தொடரும்)

"கலவரங்களுக்குக் கவலைப்படாத பால்தாக்கரே!"



• நேருக்குநேர் நிகழ்ச்சியில் மணிரத்னம், அநோசா வீரசிங்கை

● பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்ட சென்சார் சட்ட திட்டங்கள்தான் இன்னமும் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதால், எனது பம்பாய் படத்துக்காக சென்சார் போர்டில் நான் ஒரு யுத்தமே நடத்த வேண்டியிருந்தது.

● பத்திரிகைகளில் வந்த செய்திகளின் படி பம்பாய் கலவரங்களுக்காகப் பால்தாக்கரே கவலையுடன் இருப்பதாகத்தான் நினைத்தேன். அதனால், பம்பாய் படத்திலும் அவரை கவலைப்படுபவராகவே சித்திரித்திருந்தேன். ஆனால் அவரை நான் நேரில் சந்தித்துப் பேசிய போதுதான் அவர் அப்படியெல்லாம் கவலைப்படவில்லை என்பது புரிந்தது!

● தீவிரவாதத்துக்கான பரிகாரத்தை நான் ரோஜா படம் மூலம் சொல்லவில்லை. அப்படிச் சொல்லவும் முடியாது. இருப்பினும் தீவிரவாதத்துக்கு ஒரு முடிவு கட்ட முடியும் என்பதற்கு அப்படத்தில் ஓர் அடையாளம் இருந்தது. பம்பாயிலும் அப்படியோர் அடையாளம் இருந்தது!

● எனது படங்கள் இந்தியில் மொழி மாற்றம் செய்யப்பட்டு அமோக வெற்றி பெற்றுள்ளது என்றாலும் நான் இந்தியிலோ அல்லது வேறு மொழிகளிலோ படம் எடுக்க விரும்பவில்லை. தமிழில் மட்டும்தான் எடுப்பேன்!

—இதையெல்லாம் சொன்னவர் யாரென்று புரிந்திருக்குமே! கரெக்ட்; மணிரத்னமேதான்!

● ஒரு படம் தயாரான நிலையிலும் திரையிடப்படுவதற்குச் சுமார் நான்கு வருடங்களாவது காத்திருக்க வேண்டும். எங்கே? இலங்கையில்! காரணம், நேஷனல் பிலிம் கார்ப்பரேஷன் மூலம்தான் இலங்கையில் படங்களைத் திரையிட முடியும். எனவே கியூவில் காத்திருப்பதிலிருந்து எந்தப் படமும் தப்பி விடவே முடியாது.

● இனக் கலவரங்கள் நடைபெறும் பகுதிகளில் படங்களை வெளியிட முடியாத சூழ்நிலை!

● இலங்கையிலும் தமிழ்ப் படங்கள் தயாரிக்கிறோம். என்னுடைய இரண்டாவது படம் கூட ஒரு தமிழ்ப்படம்தான். என்றாலும் தமிழ்நாட்டில் தயாராகும் பெரிய பெரிய பட்ஜெட் படங்களுடன் எங்கள் தமிழ்ப் படங்களால் போட்டி போட முடிவதில்லை.

— இப்படிக் கூறியவர் யார் தெரியுமா? இலங்கை நடிகை அநோசா வீரசிங்கை. எங்கே என்கிறீர்களா?

அண்மையில் திருவனந்தபுரத்தில் நடந்த இரண்டாவது இண்டர்நேஷனல் படவிழாவில் நடந்த நேருக்குநேர் நிகழ்ச்சியில்தான் இருவரும் இப்படிப் பேசினார்கள்.

திருவனந்தபுரத்திலிருந்து : **எஸ்.எஸ்.மணி**

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

தீர்மானிக்க முடியாமல் தவித்த மணப்பெண்

அவள் முதலில் தேர்ந்தெடுத்தது — பளபளக்கும் கரும்பச்சை நிற படோலா. அடுத்தாற்போல, சுடர்விடும் சிவப்பு நிறக் காஞ்சிப்பட்டு அவள் பார்வையை நிறைத்தபோது... அதில் மனம் பறி கொடுத்தாள். அதைத் தொடர்ந்து அவள் மனம் வேறு ஒன்றை நாடியது. அடுத்தாற் போல வேறு ஒன்று... அதைத் தொடர்ந்து வேறு ஒன்று... டிசைன்களும் வண்ணங்களும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பிரமிக்கச் செய்யும் போது இப்படித்தான் ஆகிவிடுகிறது. இது? அல்லது இது? அல்லது இது? சட்டென்று தீர்மானிக்க முடியாமல் ஒரே தவிப்பு.

ஆனால் ஒன்று... இப்படி நீங்கள் தவிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் திட்டமும் கூட.

பொன்னான
விழாக்காலச் சலுகை!
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளுங்கள்.

பிரைடல் மற்றும் டிசைனர் கலெக்‌ஷன்ஸ்

ரூபினி சில்க்ஸ்

ஆசியாவிலேயே புடவைகளுக்கான
மிகப்பெரிய பிரத்தியேக எம்போரியம்
ஜனப்ரியா சென்டர், 34, பாண்டி பஜார், தி.நகர்,
சென்னை - 600 017. தொலைபேசி: 434 4414, 434 7735



பராமரிப்பின்றி வாடுகிற கூந்தலுக்கு அழகுண்டோ ?

REGISTERED NO. M. 4302



குளித்தபிறகுகூந்தலில் சிக்குகள்ஏற்பட்டால் கூந்தல்வலுவற்றும் பராமரிப்பின்றி வாடுவதாகவும்அர்த்தம்.

இந்நிலைகூந்தலைசோப்பாலும், சாதாரணஷாம்பூக்களாலும்,மற்றசாதாரண பொருட்களாலும்கழுவுவதால்கூந்தலின்இயற்கை நலன்களும்,ஈரப்பதமும்வற்றிப்போய் ஏற்படுகிறது. எனவேசிக்குகளைசீப்பால்சீவிஎடுக்க முயற்சிக்காதீர்கள். அதனால்வலுவற்றமுடிகள் உடைந்துபோகக்கூடும்,அதற்குப்பதில்கூந்தலுக்கு அளியுங்கள் :

புதிய ஸன்ஸில்க் ஆஃப்டர்வாஷ் கண்டிஷனர் கூந்தலுக்கு - விசேஷ ஊட்டு

புதியஸன்ஸில்க்ஆஃப்டர்வாஷ்கண்டிஷனர் சிக்குகளைஇதமாய்விடுவித்து,கூந்தல் சேதமடைவதிலிருந்துபாதுகாக்கும்.

- கூந்தலை கழுவிய பிறகு ஈரக்கூந்தல் முழுவதும் ஸன்ஸில்க் ஆஃப்டர்வாஷ் கண்டிஷனரை தடவவும், நுரைவராது
- இரண்டுநிமிடம்நியூட்ராகேர்நலன்களைகூந்தல் எடுக்கவிடவும்.
- பிறகுஅலசவும்,நன்குபராமரிப்புபெற்றகூந்தல் தொட்டால்வழுவழுப்பாகஇருக்கும்.டவலால் துவட்டிலேசானஈரத்தில் சீவவும்,பிறகுவழக்கம்போல் காயவைக்கவும்.
- ஸன்ஸில்க்ஆஃப்டர்வாஷ் நலன்கள்கழுவியபின்னரும் நீண்டநேரம்தங்கும். அதனால் உங்கள்கூந்தல்சிக்குகளற்றும், வலுவாகவும்இருக்கும். இதமாய்தழுவும்மென்மை, இதுவரைக்கண்டிராதஅழகுடன் திகழும்கூந்தலைப்பெறநேரம் வந்துவிட்டது.

ரூ.2/- விலையுள்ளசிக்கனமான சாஷேயைபயன்படுத்திப்பாருங்கள்.







ஸன்ஸில்க் ஆஃப்டர்வாஷ் கண்டிஷனர்

நியூட்ராகேர் உள்ளது.

"இதமாய் தழுவும் மென்மை இதுவரைக் கண்டிராத அழகான கூந்தல்."

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு

தேர்ந்தெடுத்த நகரங்களில் மட்டும் கிடைக்கிறது